# உரிமைத் தமிழ்த் தேசம்

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் திங்களேடு

உரிமை: 4தேசம்: 1 திருவள்ளுவர்ஆண்டு 2051 மாசி / ஃபிப்ரவரி 2020 ஆசிரியர்: **தியாகு** பொறுப்பாசிரியர்: சமந்தா

தோழர் தியாகுவின் அறிவுக் குரல் கேட்க https://www.youtube.com/watch?v=NaMbPqrXqPo&feature=youtu.be


## தேசத்தின் குரல்

# பாசிச எதிர்ப்பின் நெடுக்கும் குறுக்கும்



குடியுரிமைத் திருத்தச் சட்டத்துக்கும், தேசியக் குடிமக்கள் பதிவேட்டுக்கும், தேசிய மக்கள்தொகைப் பதிவேட்டுக்கும் எதிரான போராட்டம் இந்தியத் துணைக்கண்டமெங்கும் வீச்சுடன் நடந்து வருகிறது. மோதி அரசின் பாசிசப் போக்குகளுக்கு எதிரான குடியாட்சியப் போராட்டமாக இது உருவெடுத்துள்ளது.

ஜமியா மிலியா இஸ்லாமியா, ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகம் ஆகிய கல்வி நிறுவனங்களின் மாணவர்கள் மீது இந்திய அரசின் ஆயுதப்படைகள் ஏவிய வஞ்சகமான வன்முறைக்கு மறுக்கவியலாச் சான்றுகள் வெளிவந்துள்ளன. உத்தரப் பிரதேசத்தில் அரசின் அடக்குமுறையால் நூற்றுக்கு மேல் உயிரிழப்புகள் நடந்துள்ளன.

வடகிழக்கில், குறிப்பாக அசாமில், இந்தக் குடியுரிமைப் போராட்டம் இந்தியப் பேரரசியத்துக்கு எதிரான தேசிய இனத்

## உள்ளே...


1. தேசத்தின் குரல் -1
2. காசுமீரம் யாருக்கு - 6
3. களம் காலம் -7
4. சுமை நமக்கு, சலுகை அவர்களுக்கு- 10
5. ஆரியப் புலப்பெயர்வு விவாதத்தை மரபணுவியல் எப்படி முடித்து வைக்கிறது? -15
6. தோழர் பெ. மணியரசனுக்கு மறுமொழி (8) -25
7. வீரவணக்கம்-புரட்சித் தலைவர் அப்துல் கரிம் காசிம்! -29
8. திருக்குறள் கட்டமைக்கும் தமிழ்த் தேச அரசு- 35
9. வெனிசுலாவில் உலக ஏகாதிபத்திய எதிர்ப்புக்கூட்டமைப்பு- 43
10. வண்ணார், மருத்துவர் சாதியினருக்கு உள்ஒதுக்கீடு தேவை - ஏன்?- 52
11. நக்வெய்ன் மார்க்சியப் பள்ளியில் (4) -55
12. நான் ஏன் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தில் சேர்ந்தேன்? -59



பதிவு எண் :R.Dis. No. 1964/2014

தாயக உரிமைக்கான போராட்டமாக விரிவடைந்திருக்கிறது. மக்களை மத அடிப்படையில் பாகுபடுத்திப் பிரித்தாளும் இந்தியச் சூழ்ச்சி அங்கே எடுபடவில்லை.

இந்தியாவின் பிற பகுதிகளில் குடியுரிமைப் போராட்டம் பாசிச எதிர்ப்புப் போராட்டமாகவும் குடியாட்சிய உரிமைப் போராட்டமாகவும் முன்னெடுக்கப்பட்ட போதிலும், இடதுசாரி, குடியாட்சிய ஆற்றல்கள் அதில் முன்னின்ற போதிலும் பெரும்பாலும் இசுலாமிய மக்களின் பெருந்திரள் பங்கேற்புதான் போராட்டத்தின் முதுகெலும்பாகத் திகழ்கிறது. இந்த உண்மையைக் காரணங்காட்டி இதனை 'முசுலிம் போராட்டம்' என்று குறுக்கிக் கொச்சைப்படுத்தும் முயற்சியில் இந்துத்துவ ஆற்றல்களும் இந்துத்துவத்தின் எடுபிடிகளும் ஈடுபட்டிருப்பதைக் காண முடிகிறது.

குடியுரிமைச் சட்டத்தின் கேட்டினை உணர்வதில் இசுலாமிய மக்கள் முந்திக் கொண்டிருப்பதில் குற்றம் எதுவுமில்லை. மற்றவர்களுக்காகக் காத்திராமல் அவர்கள் போராட்டத்தில் முனைந்து நிற்பதை வரவேற்கத்தான் வேண்டும். இசுலாமிய வெகுமக்களின் போராட்டம் இசுலாமிய அடையாளங்களோடு நடத்தப்படுவதும் இயல்புதான். இசுலாமிய அடையாளங்களும் இசுலாமிய இறை நம்பிக்கை சார்ந்த முழக்கங்களும் இந்தப் போராட்டத்தின் குடியாட்சிய உள்ளடக்கத்தை மறுதலிப்பதாகாது.

தமிழகத்தில் குடியுரிமைப் போராட்டத்தை முன்னெடுப்பதில் இசுலாமிய அமைப்புகளோடு, தமிழ்த் தேசிய, திராவிட இயக்க, இடது, குடியாட்சிய ஆற்றல்கள் இணைந்து நிற்கின்றன. ஆனால் இங்கேயும் இசுலாமிய மக்களின் பெருந்திரள் பங்கேற்புதான் அடித்தளமாக உள்ளது. போராட்டத்தின் அடித்தளத்தை விரிவாக்கி, அனைத்துப் பகுதித் தமிழ் மக்களும் பெருந்திரளாகப் பங்கேற்கச் செய்ய வேண்டும் என்று பாசிச எதிர்ப்புக் கூட்டமைப்பில் அக்கறையுடன் ஒரு மீளாய்வு நடைபெறுவதை வரவேற்கிறோம்.

அரபு வசந்தம் தந்த தகீர் சதுக்கம் போல், சல்லிக்கட்டுப் போராட்டத்தில் தமிழ் வசந்தம் கண்ட மெரினா போல் இப்போதைய குடியுரிமைப் போராட்டத்திலும் தில்லியின் சகீன் பாக் பெருந்திரள் கவன ஈர்ப்புக் கூடுகையின் களமாகியுள்ளது. சகீன் பாக்கிலும் இசுலாமியப் பெண்களின் பங்கேற்பே முதன்மையாகத் திகழ்கிறது.

சென்னையிலும் ஒரு சகீன் பாக் என்பது தொடக்கமுதலே போராடும் ஆற்றல்களின் விருப்பமாக இருந்த போதிலும் அண்மையில்தான் வட சென்னையில் வண்ணைப் பகுதியில், இங்கேயும் முதன்மையாக இசுலாமியப் பெண்கள் இப்படி ஒரு களம் அமைத்துள்ளார்கள். காவல்துறையின் அடக்குமுறையையும் தமிழக ஆட்சியாளர்களின் அவதூறுகளையும் மீறி விடாப்பிடியான

உறுதியுடன் போராடி வரும் வண்ணைப் பெண்டிரின் அமைதியான வீரத்தை மதித்துப் போற்றுகிறோம்.

வண்ணையில் காவல்துறை தேவையற்ற வன்முறையை ஏவி அதனால் பெரியவர் ஒருவர் உயிரிழந்ததும், இந்த அடக்குமுறையைக் கண்டித்து தமிழக அளவில் தன்னெழுச்சியாக வெடித்த போராட்டமும் இசுலாமியரல்லாத தமிழ் மக்களின் குறைவான பங்கேற்பு பற்றிய வினாவை மீண்டும் முன்னுக்குக் கொண்டுவந்துள்ளன.

இந்திய அளவிலும் தமிழக அளவிலும் பாசிச எதிர்ப்புப் போராட்டத் தலைமையின் பெருங்குறைகளில் முதன்மையானது: காசுமீரம் பற்றிய பாராமுகம்! ஆறு மாதக் காலத்துக்கு மேலாக காசுமீர மக்களைக் கூண்டிலடைத்து வைத்திருக்கிறது மோதி-அமித் ஷா-அஜித் தோவல் கும்பல். விடுதலைப் போராளிகள் மட்டுமல்ல, இந்திய மேலாட்சியத்தை ஏற்றுக்கொண்ட தலைவர்களும் கூட கொடிய சட்டங்களின் கீழ் சிறைவைக்கப்பட்டுள்ளார்கள். இந்திய அரசின் நடவடிக்கையை இராணுவ முற்றுகை என்று நாடாளுமன்றத்தில் வண்ணித்த கட்சிகளே கூட பாசிச எதிர்ப்புப் போராட்டத்தில் காசுமீர மக்களின் உரிமைகளைப் பற்றி மூச்சும் விடுவதில்லை என்பதில் கவனமாயுள்ளன.

காசுமீரத்திலிருந்து இந்தியப் படை வெளியேற வேண்டும்! காசுமீர மக்களின் குடியாட்சிய உரிமைகள் மீட்டளிக்கப்பட வேண்டும்! சிறும அளவில் (குறைந்த பட்சமாக) இந்தக் கோரிக்கைகள் கூட இல்லாமல் பாசிச எதிர்ப்பு என்பது ஐயத்திற்குரியதே!

குடியுரிமைப் போராட்டத்தில் காசுமீரத்தைக் கவனமாக ஒதுக்கி விட்டு “ஆசாதி” முழக்கங்களும் “இன்குலாப்” முழக்கங்களும் எழுப்பப்படுவது நேர்மையின் பாற்பட்டதன்று.

“நாங்கள் இந்தியாவிலிருந்து விடுமை (சுதந்திரம்) கேட்கவில்லை, இந்தியாவிற்குள்தான் விடுமை கேட்கிறோம்” என்று கன்னையா குமார் பேசியதற்கு, ”இந்தியாவிலிருந்து விடுமை கோரும் உரிமை இல்லாமல் இந்தியாவிற்குள் விடுமை என்பதில் பொருளுண்டா?” என்று உமர் காலித் கேட்டாரே, அதற்கு என்ன விடை? இந்தியப் பேரரசின் கனத்த மூடுபாதணிகளின் அடியில் மிதிபட்டு நசுங்கும் காசுமீருக்காகக் குரல் கொடுக்காமல் பாசிசத்தை எதிர்க்கிறோம் என்று பேசுவது கொடுமுரணல்லவா?

குடியுரிமைப் போராட்டங்களில் இந்திய தேசிய மூவண்ணக் கொடி அசைக்கப்படுகிறது. ஆனால் காசுமீரத்தில் இந்தக் கொடியை ஆண்டில் ஓரிரு முறை ஏற்றிப் பறக்க விடவும் கூட பட்டாளப் பாதுகாப்பு தேவைப்படுகிறது. இந்தக் கொடியை அம்மக்கள் தங்கள் தாயகத்தில் கால் பரப்பி

நிற்கும் வன்கவர் படையின் அடையாளமாகவே கருதுகிறார்கள். காசுமீரத் தேசத்தின் தன்தீர்வுரிமையை (சுயநிர்ணய உரிமையை) மறுக்கும் இந்திய அரசமைப்பை அடிமை முறியாகவே கருதுகிறார்கள். அவர்கள் ஒருபோதும் ஒப்புக் கொள்ளாத அந்த அடிமைமுறியைப் புனிதப்படுத்தும் அடையாளம்தானே மூவண்ணக்கொடி!

இந்திய அரசமைப்பைத் தேசிய இனங்களின் அடிமைமுறியாகவே நாமும் கருதுகிறோம். ஒடுக்குண்ட மக்கள் அனைவருக்கும் வரலாற்றுநோக்கில் அது அடிமைமுறியே ஆகும். இந்த அரசமைப்பைத் தகர்ப்பதில்தான் நமக்கான தேசிய விடுதலையும் குமுக விடுதலையும் அடங்கியுள்ளன. அரசமைப்பு உருவான வரலாற்றுப் பின்னணியின் காரணத்தால் அது சில முற்போக்குக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது என்பதை நாம் மறுக்கவில்லை. சமயச் சார்பின்மை, சமூக நீதிக்கான இட ஒதுக்கீடு போன்ற இவ்வாறான கூறுகளைச் சுட்டிக்காட்டிப் பாசிசத்தின் தாக்குதலுக்கு எதிரான போரட்டத்துக்கு வலுச்சேர்ப்பதில் பிழையில்லை.

ஆனால் ஒட்டுமொத்தமாக இந்திய அரசமைப்பைத் தூக்கிப்பிடிப்பதும், மூவண்ணக் கொடியைச் சீராட்டுவதும், பொருத்தமற்றுப் போன 'ஜனகணமன' இசைப்பதும் காலவழுவே. இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் சில சிறந்த விழுமியங்களின் அடையாளமகவே மூவண்ணக் கொடி வடிக்கப்பட்டது என்பதை மறுக்க முடியாது. கொடியின் நடுவில் சமூகநீதியின் அடையாளமாக அசோகச் சக்கரம் இடம்பெற்றதற்கு ஒரு வரலாறே உண்டு. அந்த விழுமியங்களைப் போற்றுவதாக இன்றைய இந்தியக் குடியரசு அமைதிருக்கவில்லை என்பதே உண்மை. நமது போராட்டம் உடனடிப் பார்வையில் இப்போதைய ஆட்சியாளர்களுக்கு எதிரானது என்றாலும் தொலைநோக்குப் பார்வையில் இந்தியக் குடியரசுக்கும் அதன் அரசமைப்புக்கும் எதிரானது என்பதை மறப்பதற்கில்லை. அசோகச் சக்கரத்தில் இன்று மறைந்திருப்பது இந்துத்துவத்தின் விசுணுச் சக்கரமே! கருவாடு மீனாகாது. கறந்த பால் மடிபுகாது. சருகு இலையாகாது. சரிந்த மண் மலையாகாது. இந்துத்துவத்தால் விழுங்கி செரிக்கப்பட்ட இந்தியத் தேசியமும் உயிர்மீளாது. இது புரட்சியத் தமிழ்த் தேசியத்தின் காலம், புரட்சியச் சமூகநீதியின் காலம். பாசிச எதிர்ப்புப் போர்வையில் இந்தியத் தேசியத்தை உயிர்ப்பிக்கும் முயற்சி பலிக்காது.

நம் குடியாட்சிய நேர்மைக்கு காசுமீரம் போலவே மற்றொரு உரைகல் ஈழம். நம் கண்முன்னே இனவழிப்புக்கு ஆளான தமிழீழ மக்களுக்கு நீதி கேட்காத ஒரு போராட்டம் எப்படிப் பாசிச எதிர்ப்புத் தேர்வில் தேறி வர முடியும்? இந்தியத் தேசியத் தளத்தில் நின்றே பாசிச எதிர்ப்புப்

போராட்டத்தை நடத்த முடியும், அப்படி நடத்துவதே நல்லது என்று இப்போதும் நேர்மையாக நம்புகிற நண்பர்கள் காசுமீரத்தில் அந்த நம்பிக்கையை உரசிப் பார்க்கட்டும். காசுமீரத்தைப் பலியிட்டுத்தான் பாசிச எதிர்ப்பு ஒற்றுமையைக் காக்க வேண்டும் என்றால் கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கும் அந்த முயற்சியில் எங்களால் கைநனைக்க முடியாது.

எதிர்காலத்தில் குடியுரிமைப் பறிப்புக்கு ஆளாவோம் என்ற அச்சத்தினால் இசுலாமிய மக்கள் போராடுவது நியாயம் என்னும் போது, உயிர்க்கஞ்சி தாயகம் விட்டேகி ஏதிலியராய் (அகதிகளாக) கரையொதுங்கி நாடற்றவர்களாகி விட்ட ஈழத் தமிழர்களின் குடியுரிமைக்காகப் போராட வேண்டாமா? சற்றொப்ப இலட்சம் தமிழர்கள் ஏதிலியராகக் கூட அறிந்தேற்கப்படாமல் நாற்பதாண்டுக் காலமாக்க் கந்தல் முகாம்களில் வாழ்ந்து வரும் அவல வாழ்வுக்கு என்ன முடிவு? தமிழ்நாட்டில் குடியுரிமைப் போராட்டத்தின் முதல் கோரிக்கையாக இருக்க வேண்டியது ஈழத் தமிழர்களுக்கான குடியுரிமைதான் என்னும் போது அது கடைசிக் கோரிக்கையாகக் கூட இல்லாத ஒரு போராட்டத்துக்குத் தமிழர்களின் முழு ஆதரவு எப்படிக் கிடைக்கும்?

பாசிசக் கொள்கைகளுக்கும் பாசிசப் போக்குகளுக்கும் அடிப்படையாக இருக்கும் பொருளியல் காரணிகள் குறித்து பாசிச எதிர்ப்பு ஆற்றல்களுக்குத் தெளிவு இருக்க வேண்டும். இப்போது நாட்டைச் சூழ்ந்துள்ள பொருளியல் நெருக்கடிக்கு முதலிய வளர்ச்சிப் பாதையும், அதன் ஆகக் கடைசியான புதுத் தாரளிய வடிவமுமே காரணமாகும். மக்களிடையே வறுமை மிகுந்து வாங்குந்திறன் வற்றி அங்காடி சுருங்கி உழவும் தொழிலும் நசிந்து கிடக்கின்றன. இது வந்து போகும் சுழல் நெருக்கடியன்று நிலைத்து நீடிக்கும் படியான கட்டமைப்பு நெருக்கடி என்பதைப் பொருளியல் அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். ஆட்சியாளர்கள் நெருக்கடி என்ற ஒன்று நிலவுவதையே அறிந்தேற்க மறுக்கும் போது தீர்வு எப்படிக் காண்பர்? நெருக்கடியையும் கூட பன்னாட்டுப் பெருமுதலாளர்களை மேலும் கொழுக்க வைக்கவும், சுமைகளனைத்தையும் உழைக்கும் மக்கள் மீது சுமத்தவுமே அரசு பயன்படுத்த முயல்கிறது. பாசிச நடவடிக்கைகளை வெறும் திசைதிருப்பும் முயற்சிகளாக மட்டும் பார்ப்பது பிழை. உழைக்கும் மக்களைப் பிளவுபடுத்தவும் மக்கள் போராட்டங்களை நசுக்கவும் ஆளும் வகுப்புக்குப் பாசிசம் தேவைப்படுவதைப் புரிந்து கொள்ள வேண்டும். 1975ஆம் ஆண்டு நெருக்கடிநிலையின் பெயரால் இந்திரா காந்தியின் காங்கிரசாட்சி செயலாக்கிய பாசிசத்துக்குப் பொருளியல் காரணிகள் இருந்தது போலவேதான் இப்போது காசுமீரம் முதல் குடியுரிமைத் திருத்தம் வரை மோதியின் பாஜக ஆட்சி செயலாக்கும் பாசிசத்துக்கும் பொருளியல் காரணிகள் இருப்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

இல்லையேல் பாசிசக் கும்பல்கள் நடுவிலான பதவிச் சதுரங்கத்தில் நாம் பகடைகளாக உருட்டப்படும் ஆபத்து உள்ளது. எச்சரிக்கிறோம்!

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

தியாகு

# காசுமீரம் யாருக்கு:

காசுமீரம் சிறைக்கூண்டில் அடைக்கப்பட்டு நூற்று எண்பது நாட்களுக்கு மேலாகிறது.இன்னும் எவ்வளவு காலம் இந்தக் கொடுமை தொடரும் எனத் தெரியவில்லை, காசுமீரம் குறித்து உலகில் பெரிய எதிர்வினை ஏதுமில்லை.இந்தியாவின் மற்றப் பகுதிகளும் மௌனம் காக்கின்றன.தமிழகத்தில் மட்டும் தான் ஓரளவு எதிர்ப்புள்ளது.இங்கேயும் கூட பலரிடமும் இந்தியாவின் குரலே எதிரொலிக்கின்றன.இதற்குக் காரணம் காசுமீரம் பற்றியத் தெளிவின்மையே.தெளிவின்மையைப் போக்கும் ஒரு முயற்சியே தோழர்.தியாகுவின் காசுமீரம் யாருக்கு எனும் நூல்.

(விலைஉரூ100)

நூல்களைப்பெற

தோழர்.தியாகு

8939154752




பட்டுக்கோட்டை

தோழர் இராமசாமி

9751072143

தேனி

மதியவன்

9600039031

பொள்ளாச்சி

ஆ.சத்தியபிரபு

9865995396

கோவை

ஞட்பன் சிவா

9944952893.

மதுரை

கதிர்வேல்

9894913820

களம் காலம்: மகிழன்

## சென்னையில் ஷாகின்பாக்:



இந்தியா முழுவதும் குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிராகப் போராட்டங்கள் வலுத்து வரும் நிலையில் டெல்லியில் ஷாகின் பாக் பகுதியில் தொடர் போராட்டம் நடந்து வருகிறது. அதனைத் தொடர்ந்து சென்னை *வண்ணாரப்பேட்டையில்* *சென்னையில் ஷாகின் பாக்* என்ற முழக்கத்தோடு மக்கள் கூடித் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர். 19.01.2020 ஆறாவது நாளான இன்று ததேவிஇ சார்பில் தோழர்கள் கலந்து கொண்டனர். இயக்கப் பொதுச்செயலாளர் *தோழர் தியாகு, தமிழ்த் தேசம் இதழின் பொறுப்பாசிரியர் தோழர் சமந்தா மற்றும் மனிதி சார்பில் தோழர் மார்டினா* ஆகியோர் உரையாற்றினர். அதனைத் தொடர்ந்து தொடர் போராட்டத்தின் மற்றொரு பகுதியான *மண்ணடியில்* போராடும் மக்களை சந்தித்துப் பொதுச்செயலாளர் தோழர் தியாகு வாழ்த்திப் பேசினார்.

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

## தமிழ்க்குடியுரிமைப் பரப்புரை!

நாடுமுழுவதும் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை எதிர்த்து போராட்டங்கள் தொடர்கின்றன. நாம் இதற்குத் தீர்வாகத் தமிழ்நாட்டிற்குத் தனிக்குடியுரிமை வேண்டும் என்பதை முன்வைக்கின்றோம். இதனை மக்கள் இயக்கமாக்கத் தொடர் பரப்புரையும் செய்து வருகிறோம். அதனடிப்படையில் முதற்கட்டமாக ஈக்காட்டுத்தாங்கல் பகுதியில் 11.01.2020 சனிக்கிழமை மாலை சரியாக 4 மணிக்கு அம்பாள் நகர் பகுதியில் இயக்கப் பொதுச்செயலாளர் தோழர் தியாகு தலைமையில் தோழர்கள் மகிழன் சமந்தா,மில்லர் ஆகியோர் ஒன்றுகூடி மக்களை வீடுவீடாகச் சந்தித்துத் துண்டறிக்கை வாயிலாகப் பரப்புரை

தொடங்கினோம்.

## பேராதரவும் பேருதவியும்:



தொடக்கத்திலிருந்தே மக்கள் எங்களை மகிழ்வோடு ஆர்வமாக வரவேற்றனர். பெண்கள், இளைஞர்கள், முதியவர்கள் என அனைவரும் ஆர்வமாக கேட்டுத் தெரிந்து கொண்டனர். வீடு, கடைகளென சுமார் 500 குடும்பங்களைச் சந்தித்துக் கோரிக்கையை விளக்கிப் பேசினோம். மக்கள் தங்களால் இயன்ற அளவில் இந்தக் கோரிக்கையின் தேவையைப் புரிந்து கொண்டு அதனை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற நோக்கில் தாராளமாகப் பொருள் உதவி கொடுத்து எங்களை ஆதரித்தனர்.தொடர்ந்து இந்த பரப்புரையை சென்னையில் பல பகுதிகளில் செய்யத் திட்டமிட்டுள்ளோம். நீங்களும் பரப்புரையில் நேரடியாகவந்து கலந்துமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

## சென்னையில் குடியுரிமைத் திருத்தச் சட்ட எதிர்ப்புப் போராட்டங்கள்!

நாடுமுழுவதும் பல்வேறு இடங்களில் குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிராகப் போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது தமிழகம் மௌனம் காத்துக் கொண்டிருந்தது. 19.12.2019 அன்று அந்த மௌனம் கலைந்து, முதல் போராட்டம் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே நடைபெற்றது. CAA எதிர்ப்புக் கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற அந்த ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். நமது இயக்க சார்பில் உரிமைத் தமிழ்த் தேசத்தின் பொறுப்பாசிரியர் தோழர் சமந்தா உரையாற்றினார். 26.12.2019 சென்னை சேப்பாகத்தில் எழுத்தாளர்கள், திரைக்கலைஞர்கள், ஓவியர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டோர் இணைந்து நடத்திய கண்டன ஆர்ப்பாட்டத்தில் இயக்கப் பொதுச்செயலாளர் தோழர் தியாகு கலந்து கொண்டு உரையாற்றினார். திசம்பர் 31 நள்ளிரவில்

குடியுரிமை திருத்தச் சட்டத்தை எதிர்த்து புத்தாண்டைக் கொண்டாடுவோம் என்ற முழக்கத்தோடு சென்னை கவர்னர் மாளிகை அருகில் போராட்டம் நடைபெற்றது. நமது இயக்கத் தோழர்கள் பெருமளவில் கலந்துகொண்டனர். 04.01.2020 அன்று சென்னை நிருபர்கள் சங்கத்தில் சுயஆட்சி இந்தியா கட்சி ஏற்பாடு செய்த கருத்தரங்கில் பொதுச்செயலாளர் தோழர் தியாகு சிறப்புரையாற்றினார். 27.01.2020 அன்று சென்னை அம்பத்தூரில் தமிழர் விடுதலைக் கழகம் ஏற்பாடு செய்த பொதுக்கூட்டத்தில் தோழர் தியாகு உரையாற்றினார். பாசிச எதிர்ப்புக் கூட்டமைப்பு சார்பில் சென்னை சேப்பாகத்தில் நடைபெற்ற பெருந்திரள் பொதுக்கூட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட கட்சிகள், இயக்கங்கள் கலந்து கொண்டனர். நமது இயக்கச் சார்பில் பொதுச்செயலாளர் கலந்து கொண்டு உரையாற்றினார்.

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

20.12.2019 அன்று மாலை அரசு அடக்குமுறை எதிர்ப்புக் கூட்டமைப்பு சார்பில் சென்னை சேப்பாக்கத்தில் மனித உரிமைகளுக்காகக் குரலெழுப்பும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் இயக்கப் பொதுச்செயலாளர் தோழர் தியாகு கலந்து கொண்டு பேசுகையில், புரட்சித் தலைவர் லெனின் நமக்கு கற்றுக் கொடுத்தது சனநாயகம் என்பது தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை இல்லையென்றால் அர்த்தமற்றது, தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையின் ஒரு கூறுதான் ஒவ்வொரு தேசத்திற்கான குடியுரிமையும், அப்படி ஒவ்வொரு தேசத்திற்கான குடியுரிமையையும் கோருவதன் மூலம்தான் இந்தப் போராட்டங்களை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த முடியும் என்று பேசினார்.

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

பாவாணர் கோட்டப் பாசறை சார்பில் 24.11.2019 அன்று முறம்புவில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் விழா முன்னெடுக்கப்பட்டது. முப்பெரும் விழாவாக நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ்- தமிழர் நோக்கும் போக்கும் என்ற தலைப்பில் தோழர் தியாகு கருத்துரை வழங்கினார்.

+++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

பாபர் மசூதி தொடர்பான வழக்கில் உச்சநீதிமன்றத்தின் அரசியல் சாசன ஆயம் வழங்கிய அநீதியான தீர்ப்பைக் கண்டித்து பாசிச எதிர்ப்புக் கூட்டமைப்பு சார்பில் 21 நவம்பர் 2019 அன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டனர். இந்தியா முழுவதும் பெரிய அளவில் எதிர்ப்பை வெளிப்படுத்த இயலாத நிலையில் தமிழகத்தில் 40க்கு மேற்பட்ட




அமைப்புகள் கலந்து கொண்டு தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்தன.நமது இயக்கத்தின் சார்பில் பொதுச்செயலாளர் தோழர் தியாகு பேசுகையில்; இந்த தீர்ப்பு இறுதி என எண்ண வேண்டாம்.மக்கள் தீர்ப்பே இறுதியானது. மெரினாவில் கூடி சல்லிக்கட்டு இறுதி தீர்ப்பை மாற்றி சட்டம் இயற்றியது போல் இந்த தீர்ப்பையும் மக்கள் கூடி உடைத்தெறிவோம்,என்று பேசினார்.

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

<u>சமந்தா</u>

# சுமை நமக்கு, சலுகை அவர்களுக்கு:

நிதியமைச்சர் 160 நிமிடத்திற்கு ஒரு மிக நீண்ட உரையுடன் மத்திய அரசின் 2020-21 நிதி ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளார். வாய்ச்சொல் வீரர்களை வரலாறு மன்னிக்காது என்பது நினைவிலிருக்கட்டும். இன்னொரு இடைத் தேர்தல் வரவிருக்கிறதோ எனத் தோன்றச் செய்யுமளவிற்கு இந்தாண்டின் நிதிநிலை அறிக்கையும் ஒரு தேர்தல் பிரசாரமாகவே இருந்தது. இல்லாத பிரதாபங்களை அள்ளித் தெளிப்பதிலே பாதி நேரம் போய் விட்டது. .பாஜக அரசை மக்கள் வெறும் அரசியல் நிலைத்தன்மைக்காக மட்டும் தேர்ந்தெடுக்கவில்லை, பொருளாதாரக் கொள்கைகளுக்காகவும் தான் தேர்ந்தெடுத்தார்கள். மோடியின் ஆட்சியில் நிதி நிறுவனங்கள் ஊழலற்று,மக்களின் நம்பிக்கைக்குரியதாக உள்ளதாகவும்,பொருளாதாரத்தின் அடிப்படை வலுவாக உள்ளது என வரிசையாக பொய்மாரி பொழிந்துள்ளாரே தவிர ஒரு முறை கூட பொருளாதாரம் தேக்கமடைந்ததைப் பற்றியோ, நுகர்வுத்திறன், தேவை வீழ்ச்சி,தொழிற்துறை உற்பத்தியின் வீழ்ச்சியையோ, விலைவாசி உயர்வு மற்றும் வேலையின்மை குறித்தோ, அதிகரித்துவரும் பொருளாதார சமமின்மை குறித்தோ பெயருக்குக் கூடக் குறிப்பிடவில்லை.

இந்தியாவில் பணமதிப்பிழப்பாலும், ஜி.எஸ்.டி யாலும் பொருளாதாரம் கடுமையாக பாதுக்கப்பட்டுள்ளது என சர்வதேச அமைப்புகளே கருத்து தெரிவித்துள்ளன, மக்களின் நுகர்வுத் திறன் 3% குறைந்துவிட்டதாக தேசிய மாதிரி கணக்கீட்டு அமைப்பின் அறிக்கை கூறுகிறது.

பணக் கையிருப்பு இல்லாமல் மக்களின் நுகர்வுத் திறன் பெருமளவு வீழ்ந்துள்ள நிலையில், நிதியமைச்சரோ,ஜிஎஸ்டியால் தான் மக்களால் 4% கூடுதலாக பணம் சேமிக்க முடிந்ததாகவும், ஜிஎஸ்டியால் பொருட்களின் விலை குறைந்ததால் ரூ1 லட்சம் கோடி அளவிற்கு மக்கள் நிவாரணம் பெற்றுள்ளனர் என்று கூறியுள்ளார். ஜி.எஸ்.டியால் அரசோ, மாநிலங்களோ இறையாண்மை இழக்கவில்லை,இந்தியாவின் பெருமப் பொருளாதாரம் நிலைத்தன்மையுடன் இருப்பதாகவும்,பணவீக்கம் கட்டுக்குள் உள்ளதாகவும்,வங்கிகளின் நிதி நிலை சீரும் சிறப்புமாக உள்ளதாகவும், 2020-11ல் ஜிடிபி வளர்ச்சி 10 சதவீதமாக உயரும் என்று அடுக்கிக் கொண்டே போகிறார்.

திருவள்ளுவர் திருக்குறளில் ஒரு நல்லரசின் அணிகலன்களாகக் கூறும் பிணியின்மையை ஆயுஷ்மான் பாரத் திட்டத்தாலும், செல்வத்தை பெருமுதலாளிகள் உருவாகியதாகவும்,விவசாயிகள் வருமானத்தை இரட்டிப்பாக்கி, விளைச்சலை அதிகரித்து விளைவின்பம் தருவதாகவும், மகிழ்ச்சியை 'ஈஸ் ஆஃப் லிவிங்' மூலம் வழங்குவதாகவும், ஐந்தாவது அணியான ஏமம் பாதுகாப்பையே பாஜக அரசு முதன்மையாகக் கருதுவதாகவும் மொத்தத்தில் வள்ளுவர் கூறும் நல்லாட்சியையே நரேந்திர மோடியின் பாஜக அரசு தருவதாகவும் கூறி திருக்குறளுக்கு ஒரு முதலாளித்துவ விளக்கம் அளித்து திருவள்ளுவரை பங்கம் செய்துள்ளார்.அவரை மட்டுமில்லாமல் ஔவையையும், காளிதாசரையும் கூட விட்டு வைக்கவில்லை.

தற்போது மியூசியங்கள் அமைப்பதற்காக 5 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. நிகழ்காலத்தையே வரலாற்றில், நாகரிகத்தின் மிகப் பிற்போக்கான காலகட்டமாக்கி சாதனை புரிந்ததற்காக ஆறாவதாக பாரதிய ஜனதா கட்சிக்கென பிரத்யேகமாக ஒரு மியூசியத்தை ஏற்படுத்த வேண்டும். வருங்கால சந்ததியினர் இப்படியும் ஒரு அரசியல் கட்சி இருந்திருக்கிறதா எனத் திகைத்துப்போவர்கள்.கவர்ச்சியான, பிரம்மாண்டத் திட்டங்களை அறிவித்து அதற்குரிய நிதி ஒதுக்காமல் சில வருடங்கள் அதையே பிராதபித்து விட்டு, கிடப்பில் போடுவது தான் இவர்களது நடைமுறை. இம்முறை 20 லட்சம் விவசாயிகளுக்கு சூரிய ஆற்றல் நீர்ப்பாசனக் குழாய்களை அமைத்துத் தருவதாக வாக்களித்துள்ளனர்.112 மாவட்டங்களில் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தை விரிவுபடுத்துவதாகக் கூறி 6425 கோடியே ஒதுக்கப்பட்டுள்ளது.ஸ்வச் பாரத் திட்டத்திற்கு 2018-19 விடக்குறைவாக 2300 கோடியே ஒதுக்கப்பட்டுள்ளது. நூறு நாள் வேலைத்

திட்டத்திற்கு 2018-19ஐக் காட்டிலும் குறைவாக 61500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.2018-19ல் 1000 கோடி ஒதுக்கப்பட்ட நபார்ட் வங்கிக்கு தற்போது 500 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. 2018-19ல் 1620 கோடி ஒதுக்கப்பட்ட தேசிய நதிகள் தூய்மையாக்கத் திட்டத்திற்கு தற்போது 840 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. காலநிலை மாற்றத்தை சீரமைப்பதற்கான, எந்த திட்டமும் இல்லை, சுற்றுசூழல், வனத்துறைக்கு 4400 கோடியும், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறைக்கு 22000 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.2019-29ல் 397 கோடி ஒதுக்கப்பட்ட சாகர்மாலா திட்டத்திற்கு 297 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.2018-19ல் 3200கோடி ஒதுக்கப்பட்ட ஏழை மக்களுக்கான சமையல் எரிவாயு திட்டத்திற்கு 1118 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சி,பஞ்சாயத்து ஆட்சித் துறைக்கு 1.23 லட்சம் கோடி, உடல்நலத் துறைக்கு 69000 கோடி, ஸ்வச் பாரத் மிஷன் 12300 கோடிகல்வித்துறைக்கு 93000 கோடி, திறன் மேம்பாட்டிற்கு 3000 கோடி, உள்கட்டமைப்பிற்காக 22000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புத்துறை தவிர மற்ற பெரும்பாலான துறைகளுக்கு குறைந்த அளவே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி வேலைவாய்ப்புத் திட்டம் , பிரதம மந்திரி வீட்டுமனைத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டம், முத்ரா கடன் திட்டம்(600 கோடி!), இவை அனைத்திற்குமான நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளது. சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு பென்ஷன் தொகைக்கான ஒதுக்கீடு 150 கோடிக்குமேல் குறைக்கப்பட்டுள்ளது. மூத்தக் குடிமக்களுக்கு 9500 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.நுவ்ரிக் யோஜனா எனும் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்கள்.

கிராமப் பொருளாதாரத்தை ஊக்குவிக்கவோ, விவசாயத்தை மேம்படுத்தவோ, மக்களின் நுகர்வுத் திறனை அதிகரிக்கவோ, உள் நாட்டுத் தொழிற்துறை உற்பத்தியை மேம்படுத்தவோ, வேலைவாய்ப்புகளை உருவாக்கவோ எந்தப் புதியத் திட்டங்களும் இல்லை.பெரும்பாலான புதிய திட்டங்கள் தனியார் துறையுடன் இணைந்தே (PPP) செயல்படுத்தப்பட உள்ளதாகக் கூறப்பட்டாலும், அதில் எவ்வளவு சதவீதம் அரசு பங்கு வகிக்கும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.உள்நாட்டில் நுகர்வுத்திறன் வீழ்ந்தால் என்ன, மக்களிடம் உணவுப் பொருட்கள் வாங்க காசு இல்லாவிட்டால் என்ன, வெளிநாட்டு சந்தை இருக்கிறதே வெளிநாட்டு சந்தையின் மூலமாகவும், பங்குச் சந்தையையும், பணக்காரர்களை திருப்தி செய்தால் போதும், நுகர்வின்

வீழ்ச்சி சரியாக்கிவிடலாம். மக்கள் செத்தால் என்ன, ஏதாவது ஒரு வழியில் சந்தையை இயங்கசெய்தால் போதும் என்ற அடிப்படையிலே இந்த நிதி நிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

புதியக் கல்வித் திட்டம் வெளிநாட்டுக் கடன், அந்நிய முதலீட்டுடன் ஊக்குவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேசியக் காவல்துறை பல்கலைக்கழகம், சைபர் தடவியல் பல்கலைக்கழகம் ஆகியவைத் தொடங்கப்படவுள்ளன.ஏகலைவா மாதிரிப் பள்ளிகளையும் தொடங்க உள்ளனர். பெட்டி பச்சோ திட்டத்தினால் தான் இன்று பெண்குழந்தைகள் பள்ளி சேர்ந்துள்ளதாகவும், கல்வியில் ஆண் பிள்ளைகளை விட முன்னணியில் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார நெருக்கடியை மேலும் அதிகரிக்கும் விதத்தில் மேட்டுக்குடிகளுக்கு சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளது.பொருளாதாரத்தின் இக்கட்டான காலகட்டத்தில் நேரடி வருவாயின் மூலமே பெருமளவு நிதி பெறவேண்டும். சென்ற ஆண்டை விட இதுவரை வரிவருமானம் 8.3% குறைந்துள்ள நிலையிலும் நேரடி வருவாயைப் பெருமளவு குறைத்திருக்கிறார்கள் புதிய நேரடி வருவாய் வரியமைப்பில் 5 லட்சத்திலிருந்து 7.5 லட்சத்திற்குள் வருமானம் பெறுபவர்களின் வருமானவரி புதிய திட்டத்தில் 20% லிருந்து 10% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 7.5 லட்சம் முதல் 10 லட்சத்திற்குள் வருமானம் பெறுபவர்களின் வருமானவரி புதிய திட்டத்தில் 20% லிருந்து 15% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. அதே போல் 10 லட்சத்திலிருந்து 12.5 லட்சத்திற்குள் வருமானம் உள்ளவர்களின் வருமானவரி புதியத் திட்டத்தில் 30% லிருந்து 20% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 12.5 லட்சம் முதல் 15 லட்சத்திற்குள் வருமானம் உள்ளவர்களின் வருமானவரி புதிய திட்டத்தில் 30% லிருந்து 25% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் அரசிற்கு 40000 கோடி வருமான இழப்பு ஏற்படும்.கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட வரிச்சலுகையால் அரசுக்கு 1.5 லட்சம் கோடி வருவாய் குறைந்தது. இந்த நிலையில் தற்போது மேலும் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. ஈவுத்தொகை பகிர்மான வரியை நீக்கிவிட்டார்கள் இதனால் அரசுக்கு 25000 கோடி வருமான இழப்பு ஏற்படும். சேவை நிறுவனங்களுக்கு 100% வரி விலக்கு அளித்துள்ளனர்.

அந்நிய நிதி முதலீடுகளுக்கு 100 சதவீதம் வரிவிலக்கு அளித்துள்ளார்கள். தொடக்க

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

நிறுவனங்களுக்கு 7 ஆண்டுகளுக்கு கொடுக்கப்பட்ட வரிவிலக்கை 10 ஆண்டுகளாக உயர்த்தியுள்ளனர். அதைப் பெறுவதற்கான வருமான உச்ச வரம்பை 25 கோடியிலிருந்து 100 கோடியாக அதிகரித்துள்ளனர். கார்ப்பரேட் பத்திரங்களில் 9% வரை அனுமதிக்கப்பட்ட அந்நிய முதலீடு 15% ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அரசு கருவூலப் பத்திரங்களில் வெளி நாட்டு வாழ் இந்தியர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.வெளிநாட்டு வாழ் இந்தியர்களின் நிதிக்கடன் பிடித்த வரி 5% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.நகராட்சி கடன் பத்திரங்களுக்கான பிடித்தவரி 4% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.சர்வதேச நிதி சேவை மையத்தில் பட்டியிலிடப்பட்டப் பத்திரங்களுக்கான வரிப்பிடித்தம் 5% லிருந்து 4% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.ஏர் இந்தியாவை நட்டத்தில் மூழ்கடித்த அரசு 100 புதிய விமான நிலையங்கள் உருவாக்க உள்ளதாக அறிவித்துள்ளனர். பொதுத் துறை நிறுவனங்களை வலுப்படுத்தவோ, மூலதனத்தை அதிகரிக்கவோ எந்தத் திட்டமும் இல்லை. மாறாகஇந்த நிதி ஆண்டில் 1.05 லட்சம் கோடி மதிப்பிற்குஅரசு பங்குகளை தனியார்மயப்படுத்தப் போவதாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது, எல்.ஐ.சியின் பங்குகளையும் ஐ.டி.பி.ஐ வங்கியின் அரசு பங்குகளையும் தனியார்மயப்படுத்த உள்ளது. நிதிநிலை அறிக்கையில் உள்ள எண்மதிப்புகளின் நம்பகத்தன்மை குறித்து விவாதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த நிதியமைச்சர் நிதி நிலை மேலாண்மை(FRBM) சட்டத்திற்கு இணக்கமான முறையில் நிதி நிலை அறிக்கைப் பெறப்பட்டதாகவும் உறுதியளித்தார். விவாதத்தை ஆரம்பித்தவர்களும் நிதியமைச்சரின் கூற்றுக்கு மாறாக எதுவும் கூறவில்லை. நிதி நிலை மேலாண்மை சட்டத்திற்கு இணக்கமான முறையில் எண்மதிப்புகள் மாற்றப்பட்டுள்ளன என்பதே விவாதத்திற்கு காரணமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

2020-21 நிதியாண்டிற்கு மொத்தமாக 3042230 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிக்கை தந்துள்ளார்கள் இதற்கான வருவாயை எங்கிருந்து பெறப்போகிறார்கள். கார்ப்பரேட் வரி, நேரடி வரியைப் பெருமளவு குறைத்த பொழுதும் அதைக் கணக்கில் கொள்ளாமல், அதற்கு தகுந்தாற் போல் அரசின் வருவாய் குறைக்கப்படாமல் அதிகபடுத்தியே காட்டப்பட்டுள்ளது.சென்ற வருடத்திலும் நிதி நிலை அறிக்கையில் உள்ளதைக் காட்டிலும் குறைவாகவே நிதி ஒதுக்கிய நிலையில் இந்தாண்டும் நிதிநிலை அறிக்கையில் வருவாயை ஊதிப் பெருக்கிக் காட்டியிருக்கிறார்கள்.

ஐந்து சதவீதத்தை விட அதிகமாயுள்ள வழக்கம் போல் பல வழிகளில் பட்ஜெட்டுக்கு வெளியே

ஒளித்து மறைத்து நிதிப்பற்றாக்குறை 3.8% ஆகக் காட்டப்பட்டுள்ளது.2018-19 நிதி நிலை அறிக்கையில் தேசிய சிறுசேமிப்பு நிதியிலிருந்து பெறுவதாக நிர்ணயிக்கப்பட்ட 57,004கோடி ரூ திருத்தப்பட்ட நிதி நிலை அறிக்கயில் 1,72,698.96 கோடி ரூ அதிகரித்துள்ளது. 2020-21 க்கான நிதி ஒதுக்கீட்டில் 1,86,100.00 கோடி ரூபாய் தேசிய சிறுசேமிப்பு நிதியிலிருந்தே பெறப்படும் எனக் காட்டப்பட்டுள்ளது.இது மொத்த ஒதுக்கீட்டுத் தொகையில் 6.1% .ஏற்கெனவே கடனில் உள்ள, பொதுவிநியோகத்துறை, இந்திய உணவுத்துறை நிறுவனம் மேலும் கடனில் மூழ்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.குடிமக்களின் தனிப்பட்ட பொருளாதாரத்தையும், ,நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதாகவும், சமூக அக்கறையுடன், மனிதநேயத்துடன் நலிவுற்ற பிரிவுனரின் வாழ் நிலையை மேம்படுத்துவதாகவும் உருவாக்கப்பட்டதாக நிதி நிலை அறிக்கை என்று நிதியமைச்சர் கூறினார். மக்களின் வருமானத்தையும் வாங்கும் திறனையும் அதிகரிப்பதற்கான நிதி நிலை அறிக்கை என்றும் கூறினார். ஆனால் .அதற்கு முற்றிலும் முரணாகவே வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாக பெரும் வேதனையை அளிக்கிறது..மக்களின் வாழ் நிலையை மேலும் வதைக்க உள்ளது. இந்த நிதிநிலைஅறிக்கை.பங்குசந்தைக்காகவும்,பணக்காரர்களுக்காகவும்மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளது. பாஜக ஆட்சி இந்தியப் பொருளாதாரத்தின் தற்சார்பையும், நிலைத்தன்மையையும் அழித்து இந்தியாவை ஊக நிதி சார்ந்த குமிழிப் பொருளாதாரமாக்கும் வழியிலே தள்ளியுள்ளது இந்தியப் பொருளாதாரத்தை சீரழித்த பாஜகவையும், நவீனதாராளமயக் கொள்கைகளையும் புறக்கணிப்போம்.மக்கள் போராட்டத்தால் தீர்வு பெறுவோம்.

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

## ஆரியப் புலப்பெயர்வு விவாதத்தை மரபணுவியல் எப்படி முடித்து வைக்கிறது?

--- டோனி ஜோசஃப் ----

தமிழாக்கம்: நலங்கிள்ளி

*[இந்தியாவுக்குள் ஆரியர் வருகை என்ற ஒன்று நிகழ்ந்ததா? இல்லையா? இது நெடுநாளைய கருத்துப் போராட்டத்துக்கு உரிய ஒன்றாக இருந்து வருகிறது. இதற்கு அறிவியல் ஆராய்ச்சியின் ஊடாக விடை காணும் ஒரு முயற்சிதான் ஆய்வாளர் டோனி ஜோசஃப் எழுதியுள்ள How genetics is settling the Aryan migration debate என்ற கட்டுரை. இது இந்து ஆங்கில நாளேடு 2017 ஜூன் 16 இதழில் வெளிவந்தது. கட்டுரையின் முக்கியத்துவம் கருதி தோழர் நலங்கிள்ளி இதனைத் தமிழாக்கம் செய்துள்ளார். கட்டுரையின் முதல் பகுதி இந்த இதழில் வெளியிடப்படுகிறது. – ஆசிரியர்.]*



இந்திய வரலாற்றில் பெரும் சண்டை சச்சரவுக்குள்ளான வினாவுக்கு விடை தருகிறது புதிய டிஎன்ஏ சான்று. நீங்கள் இந்த விடை இவ்வளவு ஆணித்தரமானதா என வியந்து போவீர்கள் என எழுதுகிறார் டோனி ஜோசஃப்.)

இந்திய வரலாற்றிலேயே வலியும் சச்சரவும் மிக்க வினாவுக்கு மெதுவாகவே என்றாலும், மிக உறுதியாக விடை கிடைத்துக் கொண்டிருக்கிறது. அந்த வினா இதுதான்: தம்மைத் தாம் ஆரியர்கள் என அழைத்துக் கொண்ட இந்தோ-ஐரோப்பிய மொழி பேசியோர் சிந்து சமவெளி நாகரிகம் முடிவுக்கு வந்த கிமு 2000 - கிமு 1500 கால வாக்கில் சமஸ்கிருதத்தையும் தனித்துவமான பண்பாட்டு வழக்கங்களையும் சுமந்து கொண்டு இந்தியாவுக்குள் நுழைந்தார்களா? வெள்ளமெனப் பெருகி வரும் டிஎன்ஏ சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட மரபணு ஆராய்ச்சி உலகெங்கும் உள்ள அறிவியலர்களை ஐயத்திற்கிடமற்ற ஒரே விடையில் வந்து குவியச் செய்கிறது: ஆம், நுழைந்தார்கள்.

இது பலருக்கு வியப்பும், சிலருக்கு அதிர்ச்சியும் அளிக்கக் கூடும். ஏனென்றால் அண்மைய ஆண்டுகளில் மரபணுவியல் ஆராய்ச்சி ஆரியப் புலப்பெயர்வுக் கோட்பாட்டை முழுக்கப் பொய்ப்பித்து விட்டதாக ஒரு வலுவான கதையாடல் நடந்து வருகிறது. இந்தக் கோட்பாடு சற்றே நீட்டி முழக்கிய பொருள்விளக்கம் என்றே நுண்மையான ஆய்வேடுகளை மூல வடிவில் படிக்கும் எவரும் கருதினர். ஆனால் இந்தப் பொருள்விளக்கம் இப்போது தூள் தூளாகி ஒய்-குரோமோசோம்கள் (அதாவது ஆண் பெற்றோர் வழியில் தந்தையிடமிருந்து மகனுக்குக் கடத்தப்படும் குரோமோசோம்கள்) பற்றிய புதுத் தரவுகளின் வெள்ளத்தில் மூழ்கிச் சிதைந்து விட்டது.

## மரபுசார் வழிகள்

அண்மைக் காலம் வரை மைட்டோகாண்ட்ரிய-டிஎன்ஏ (தாயிடமிருந்து மட்டுமே கடத்தப்படும் தாய்வழி டிஎன்ஏ) பற்றிய தரவுகள் மட்டுமே கிடைத்து வந்தன, அவை கடந்த சுமார் 12,500 ஆண்டுகளில் இந்திய மரபணுத் தொகுப்புக்குள் புற நுழைவு பெரிய அளவில் இல்லை என்பது போன்ற ஒரு தோற்றத்தைக் கொடுத்தன. இந்த முடிவைப் புதிய ஒய்-குரோமோசோம்-டிஎன்ஏ தரவுகள் அப்படியே புரட்டிப் போட்டன. ஏனென்றால் இந்தத் தரவுகள் ஆய்வுக்குரிய அந்தக் காலக் கட்டத்தில் இந்திய ஆண் மரபுவழிக்குள் மரபணுப் புறநுழைவு நடைபெற்றதற்கு

வலுவான சான்றளித்தன.

மைட்டோகாண்ட்ரியா-டிஎன்ஏ, ஒய்-குரோமோசோம்-டிஎன்ஏ தரவுகளில் புலப்படும் வேறுபாட்டுக்கான காரணம் பின்னோக்கிப் பார்த்தால் மிகத் தெளிவானது: வெண்கல ஊழிப் புலப்பெயர்வுகளில் வலுவான பாலினச் சார்பு இருந்தது. வேறு வகையில் சொன்னால், அன்று புலம்பெயர்ந்தோர் பெருமளவுக்கு ஆண்கள் என்பதால், அவர்களின் மரபணுப் பரவல்கள் மைட்டோக்காண்ட்ரியா-டிஎன்ஏ தரவுகளில் உள்ளபடியே தெரிவதில்லை. மறுபுறம், அவை ஒய்-குரோமோசோம்டிஎன்ஏவில் தெரியவே செய்கின்றன: குறிப்பாக, இந்திய ஆண் மரபுவழியில் சுமார் 17.5 விழுக்காட்டினர் ஒற்றைக்குழு R1a வகையில் அடங்குவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. ஒற்றை மரபுசார் வழியைக் குறிக்கும் இந்த ஒற்றைக் குழுக்கள் இன்று மத்திய ஆசியா, ஐரோப்பா, தெற்காசியா முழுதும் பரவியுள்ளன. R1a ஆனது பான்டிக்-காஸ்பியன் ஸ்டெப்பி புல்வெளி என்னும் இந்த வட்டாரத்திலிருந்துதான் மேற்கு, கிழக்கு திசைகளில் பரவி, வெவ்வேறு உட்கிளைகளாகப் பிரிந்து சென்றதாகக் கருதப்படுகிறது.

அண்மையக் கண்டுபிடிப்புகள் அனைத்தையும் ஒன்றுசேர்த்து இந்தியாவுக்கு வந்த புலப்பெயர்வுகளில் இறுக்கமான, ஒத்திசைந்த வரலாறாகத் தொகுத்தளித்த ஆய்வேடு சமகால வல்லுநர்களின் பார்வைக்குரிய *பிஎம்சி எவல்யூஷனரி பயாலஜி* (பிஎம்சி பரிணாம உயிரியல்) ஆய்விதழில் மூன்று மாதங்களுக்கு முன்புதான் வெளியானது. "இந்தியத் துணைக்கண்டத்துக்கான மரபியல் காலவரிசை வலுவான பாலினச் சார்புப் பெயர்வுகளைக் குறிக்கிறது" எனத் தலைப்பிட்ட அந்த ஆய்வுத்தாளில் இங்கிலாந்து ஹட்டர்ஸ்ஃபீல்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் மார்ட்டின் பி. ரிச்சர்ட்ஸ் தலைமையிலான 16 அறிவியலர்கள் ஒரு முடிவை வந்தடைந்தனர்: "வெண்கல ஊழியில் மத்திய ஆசியாவிலிருந்து நடைபெற்ற மரபணுப் பாய்வு வலுவாக ஆண்கள் நடத்தியதாக இருந்தது. இது மேய்ப்பர்களாகக் கருதப்படும் தொடக்கக்கால இந்தோ-ஐரோப்பியச் சமுதாயத்துக்கு உரித்தாக்கப்படுகிற ஆண்வழிப்பட்ட, கணவன்வழிப்பட்ட, தந்தைவழிப்பட்ட சமுதாய அமைப்பை ஒத்ததாக இருந்தது." இந்த உள்நுழைவு பான்டிக்-காஸ்பியன் வட்டாரத்தை மூலத் தோற்றுவாயாகக் கொண்டு, இந்தோ-ஐரோப்பிய விரிவாக்கம் என்னும் மிகப் பரந்த செயல்வழியில் ஒரு பகுதியாக இருந்தது. இது அணுக்கத் தொடர்பு கொண்ட ஒய்-க்ரோமோசோம் மரபுவழிகளை 5,000 முதல் 3,500 ஆண்டுகளுக்கு முன்பு யுரேசியப் பெரும்பரப்பில் ஏந்திச் சென்றது.

பேராசிரியர் ரிச்சர்ட்ஸ் மின்மஅஞ்சல் பரிமாற்றம் ஒன்றில் கூறியது என்னவென்றால், இந்தியாவில் R1a பரவலாக இருப்பதே இந்தியாவுக்குள் மத்திய ஆசியாவிலிருந்து நடைபெற்ற, மிக அநேகமாக இந்தியாவுக்குள் இந்தோ-ஐரோப்பிய மொழி பேசுபவர்களைக் கொண்டுவந்து சேர்த்த வெண்கல ஊழிப் புலப்பெயர்வுக்கு மிகுந்த ஆணித்தரமான சான்று ஆகும். பேராசிரியர் ரிச்சர்ட்சும் அவரது அணியும் வந்தடைந்த வலுவான முடிவுகளுக்கு ஆதாரமாக அவர்களே நடத்திய தனித்துவமான ஆராய்ச்சியும், உலகெங்கும் உள்ள மரபணு அறிவியலர்களின் ஆய்வுப் பணிகள் வாயிலாக அண்மைய ஆண்டுகளில் கிடைத்துள்ள பேரளவிலான புதுத் தரவுகளும் கண்டெடுப்புகளும் திகழ்கின்றன.

ஹார்வர்டு மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த மரபணுவியலரும் பேராசிரியருமாகிய டேவிட் ரைக் கூறுகிறார்: "கடந்த சில ஆண்டுகளில் மிக விரைவாகவும் விறுவிறுப்பாகவும் வலுவாகவும் நடைபெற்றிருப்பது என்ன என்றால், புதுமக்கால, பழங்கால டிஎன்ஏவின் அடிப்படையில் மாந்தக் குல வரலாறு பற்றி நடத்தப் பெற்ற முழு டிஎன்ஏ ஆய்வுகள் பேரெழுச்சியாக நடந்துள்ளன. இதனைச் செய்து முடிப்பதற்கு மரபணுத் தொழில்நுட்பவியலும், டிஎன்ஏ தொழில்நுட்பவியலும் உதவின "

ஸ்டான்ஃபோர்டு பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரியில் மரபணுவியல் துறையில் அறிவியலராக இருக்கும் பீட்டர் அன்டர்ஹில் இந்தச் செயலின் நடுநாயகமாகத் திகழ்ந்தவர்களில் ஒருவர். அவர் தலைமையேற்ற 32 அறிவியலர்கள் குழு 3 ஆண்டு முன்பு R1a பரவலையும் அதன் கிளைகளையும் வரைபடமாக்கும் மாபெரும் ஆய்வு ஒன்றை வெளியிட்டனர். அது யுரேசியா முழுவதிலும் 126 மக்கள்தொகுதிகளிலிருந்து 16,244 ஆண் ஆய்பொருள்களின் தொகுப்பு ஒன்றைப் பயன்படுத்தியது. முனைவர் அன்டர்ஹில் செய்த ஆராய்ச்சி R1a ஒற்றைக்குழுக்களில் இரு உட்குழுக்கள் இருப்பதைக் கண்டறிந்தது. இவற்றில் ஒன்று முதன்மையாக ஐரோப்பாவிலும், மற்றொன்று மத்திய, தென் ஆசியப் பகுதிகளுக்கு உட்பட்டும் இருந்தன. ஐரோப்பாவில் R1a மரபுவழிகளில் 96 விழுக்காடு Z282 என்னும் உட்குழுவைச் சேர்ந்ததாக இருந்தது. அதேபோது மத்திய, தென் ஆசிய R1a மரபுவழிகளில் 98.4 விழுக்காடு Z93 என்னும் உட்குழுவைச் சேர்ந்ததாக இருந்தது. இவ்விரு குழுக்களும் ஒன்றை விட்டொன்று 5,800 ஆண்டுக்கு முன்புதான் பிரிந்தன. முனைவர் அன்டர்ஹில்லின் ஆய்வு

காட்டுவதன்படி, இந்தியாவில் மிகுந்திருக்கும் Z93 உட்குழுவுக்குள்ளேயே மேற்கொண்டு பிரிவு ஏற்பட்டு பல கிளைகள் தோன்றின. விண்மீன் போன்ற இந்தக் கிளைப்பு துரித வளர்ச்சியையும் இடப்பெயர்வையும் குறித்ததாக அந்த ஆய்வு காட்டியது. இந்தோ-ஐரோப்பிய மொழி பேசுபவர்கள் இந்தியாவெங்கும் வந்து துரிதமாகப் பரவிய தோராயக் காலக் கட்டம் தெரிய வேண்டுமானால், Z93 அதன் வழிப்பட்ட பல பல உட்குழுக்களாகவோ மரபுவழிகளாகவோ பிரிந்து சென்ற காலத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். இதைப் பிறகு பார்ப்போம்.

எனவே சுருங்கச் சொல்லின், R1a ஆனது ஐரோப்பா, மத்திய ஆசியா, தென் ஆசியா எங்கும் பரவியுள்ளது. அதன் உட்குழுவாகிய Z282 ஆனது ஐரோப்பாவில் மட்டும் பரவியுள்ளது. மற்றோர் உட்குழுவாகிய Z93 ஆனது மத்திய ஆசிய, தென் ஆசியப் பகுதிகளில் மட்டும் பரவியுள்ளது. இந்த Z93 என்ற ஒற்றைக்குழுவின் முப்பெரும் உட்குழுக்களும் இந்தியா, பாகிஸ்தான், ஆஃப்கானிஸ்தான், இமய மலை ஆகிய பகுதிகளில் மட்டும் பரவியுள்ளன. R1a பரவல் பற்றிய இந்தத் தெளிவான சித்திரம் இறுதியாக முந்தைய கருதுகோளுக்கு, அதாவது இந்த ஒற்றைக்குழு அனேகமாக இந்தியாவில் தோன்றிப் பின்னர் பரவியிருக்கக் கூடுமென்ற கருதுகோளுக்கு முற்றுப் புள்ளி வைத்தது. இந்தியாவில் உள்ள R1a மரபுவழிகள் மற்றப் பகுதிகளை விட அதிக மாறுபாடுகள் கொண்ட காரணத்தால் அது இந்தியாவில்தான் தோன்றியிருக்க வேண்டும் என்ற பிழையான அனுமானத்தை அந்தக் கருதுகோள் அடிப்படையாகக் கொண்டிருந்தது. பேராசிரியர் ரிச்சர்ட்ஸ் சொல்வது போல், குழப்பமான நுண்மரபணு வரிசைமுறைத் தரவுகளைப் பெருமளவுக்குச் சார்ந்து இந்தியாவில் R1a மிகவும் வேறுபட்டுள்ளதாகச் சொல்லப்படும் கருத்தைப் பெரும் எண்ணிக்கையிலான மரபணுவியல் சார்ந்த ஒய்-குரோமோசோம் தரவுகள் முடிவுக்குக் கொண்டு வந்து விட்டன.

**புலப் பெயர்வுக் காலங்களை மரபணுக் காலங்கணித்தல்**

உள்ளபடியே, வெண்கல ஊழியில் மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாவுக்குள் குறிப்பிடத்தகுந்த அளவுக்கு மரபணுப் பாய்வு **இருந்தது** நமக்கு இப்போது தெரியும் என்பதால், நாம் அந்தக் காலத்தை, குறிப்பாக Z93 ஆனது அதற்குரிய மரபுவழிகளாகப் பிரிவுற்ற காலத்தை இன்னும் துல்லியமாகக் கணிக்க முடியுமா? முடியும், நம்மால் முடியும். இந்த வினாவுக்கு விடையளிக்கும் ஆய்வுத் தாள் சென்ற ஆண்டுதான் 2016 ஏப்ரல் மாதத்தில் வெளியிடப்பட்டது. அதன் தலைப்பு: "உலகளாவிய ஒய்-குரோமோசோம்களின் 1,244 வரிசைத் தொடர்களின்

உதவியுடன் மாந்த ஆண்தொகையினரிடத்தில் உய்த்தறிந்த இடையிடை எழுச்சிகள்" (Punctuated bursts in human male demography inferred from 1,244 worldwide Y-chromosome sequences). ஐந்து கண்டத்து மக்கள்தொகைக்குள் நடைபெற்ற ஒய்-குரோமோசோம்-டிஎன்ஏ ஒற்றைக்குழுக்களின் பேரளவுப் பரவல்கள் குறித்து ஆய்வு செய்த இந்தத் தாளின் முதன்மை ஆசிரியர் ஸ்டான்ஃபோர்டு பல்கலைக்கழகத்தின் டேவிட் போஸ்னிக் ஆவார். இதன் 42 துணை ஆசிரியர்களில் ஒருவர் முனைவர் அன்டர்ஹில் ஆவார். "Z93 தொடர்பாகச் சுமார் 4,000 முதல் 4,500 ஆண்டு முன்பு நடைபெற்ற அதிரடிப் பரவல்களை" இந்த ஆய்வு கண்டறிந்தது. இது குறிப்பிடத்தகுந்தது. ஏனென்றால் சுமார் 4,000 ஆண்டு முன்புதான் சிந்துச் சமவெளி நாகரிகம் அழியத் தொடங்கியிருந்தது. (இந்த அழிவுக்கு Z93 பரவலைக் காரணமாகக் காட்டும் தொல்லியல் சான்றேதும் அல்லது வேறெந்த வகைச் சான்றும் இது வரை கிடைக்கவில்லை. இரண்டுமே வாய்ப்பாக ஒரேநேரத்தில் நடைபெற்ற இரு நிகழ்வுகளாக இருப்பதற்கு வாய்ப்புண்டு.)

வெளியிலிருந்து இந்தியாவுக்குள் குறிப்பிடந்தகுந்த அளவுக்கு நடைபெற்றதாகக் கூறப்பட்ட வெண்கல ஊழிப் புலப்பெயர்வுகள் குறித்து ஐயுற்ற அல்லது நடுநிலை வகித்த பல அறிவியலர்களுங்கூட பெருவெள்ளமெனத் திரண்டு வந்த புதிய தரவுகளின் விளைவாகத் தங்கள் கருத்துகளை மாற்றிக் கொண்டனர். அவர்களில் முனைவர் அன்டர்ஹில்லும் ஒருவர். காட்டாக, கடந்த ஐந்தாயிரம் அல்லது ஆறாயிரம் ஆண்டுகளில் கிழக்கு ஐரோப்பாவிலிருந்து இந்தியா உள்ளிட்ட ஆசியப் பகுதிக்குள் குறிப்பிடத்தகுந்த அளவுக்குத் தந்தைவழி மரபணுப் பாய்வு இருந்ததற்கு மாறான சான்று உள்ளது என்று 2010 ஆய்வுத்தாளில் சொல்கிறார். இன்று 2010இல் கிடைத்த தரவுகளையும் இப்போது கிடைக்கும் தரவுகளையும் ஒப்பிடவே முடியாது என்கிறார். அவர் கூறுகிறார்: "இருட்டு அறை ஒன்றைச் சாவித் திறப்பு வழியாகச் சிறு கை விளக்கை வைத்துக் கொண்டு பார்ப்பது போன்றதொரு நிலைமையே அப்போது இருந்தது. சில மூலைமுடுக்குகளைப் பார்க்க முடிந்ததே தவிர, முழுப் பகுதியை, முழுச் சித்திரத்தைப் பார்க்க முடியவில்லை. முழு மரபணுத் தொடர்வரிசை நம் கைவசம் இருக்கும் நிலையில், நம்மால் இப்போது முழு அறையையும் இன்னும் தெளிவான வெளிச்சத்தில் காண முடிகிறது."

வெளியிலிருந்து இந்தியாவுக்குள் இந்தோ-ஐரோப்பிய மொழி பேசுவோர் வாயிலாக நடைபெற்றதாகக் கருதப்படும் வெண்கல ஊழிப் புலப்பெயர்வுகளுக்கு எதிரான வாதுரைகளுக்கு முட்டுக்கொடுக்கப் பயன்பட்ட பழைய ஆய்வினை முன்வைத்தோர் பட்டியலில் முனைவர்

அன்டர்ஹில் மட்டும் தனித்திருககவில்லை. இவ்வகையில் ஹார்வர்டு மருத்துவக் கல்லூரியில் மரபணுவியல் துறையில் மரபணுவியல் அறிவியலராகவும் பேராசிரியராகவும் இருந்த டேவிட் ரைக் அவர்களும் ஒருவர். இத்தனைக்கும் அவர் தமது பழைய ஆய்வேடுகளில் மிகவும் எச்சரிக்கையாகவே எழுதியிருந்தார். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு ரைக் 2009இல் *இயற்கை* (Nature) இதழில் வெளியிட்ட ஆய்வு ஆகும். அதன் தலைப்பு: இந்திய மக்களின வரலாற்றை மீள்கட்டமைத்தல் (Reconstructing Indian Population History). இந்த ஆய்வானது "வட இந்திய மூதாதையர்", "தென்னிந்திய மூதாதையர்" என்ற கோட்பாட்டுக் கட்டமைப்பைப் பயன்படுத்தி இந்திய மக்களினத்தின் மரபணு அடிக்கட்டமைப்பைக் கண்டுபிடித்தது. இந்த ஆய்வு மெய்ப்பித்தது என்னவென்றால், வட இந்திய மூதாதையர் மரபணுவகையில் மத்திய கிழக்கினருக்கும் மத்திய ஆசியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் நெருக்கமாக உள்ளனர், அதேபோது தென்னிந்திய மூதாதையர் இந்தியாவுக்கு மட்டுமே உரியவர்களாக உள்ளனர். இந்த ஆய்வு மேலும் மெய்ப்பித்தது என்னவென்றால், இன்றைய இந்தியாவில் பெரும்பாலான குழுக்களை இவ்விரு மக்கள் தொகையினரின் கலவையாகத் தோராயப்படுத்தலாம். இவர்களில் வட இந்திய மரபுவழித் தன்மையானது பரம்பரை உயர் சாதியினரிடமும் இந்தோ-ஐரோப்பிய மொழி பேசுவோரிடமும் மிகுந்து காணப்படுகிறது. அதனளவில் இந்த ஆய்வு இந்தோ-ஐரோப்பிய மொழி பேசுவோரின் வருகையைப் பொய்ப்பிக்கவில்லை. பார்க்கப் போனால், வட இந்திய மூதாதையர்களுக்கு மத்திய ஆசியர்களுடன் உள்ள மரபணுப் பிணைப்பைச் சுட்டியதன் மூலம் இந்த ஆய்வு மாறான குறிப்பையே தந்தது.

எப்படியோ, இந்தக் கோட்பாட்டுக் கட்டமைப்பை அபத்தமாக இழுத்து நீட்டி விரும்பியபடி வாதிடுவதற்குப் பயன்படுத்திக் கொண்டனர். அந்த வாதப்படி, இவ்விரு குழுக்களும் பல பத்தாயிரம் ஆண்டு முன்பே இந்தியாவுக்குள் வந்து விட்டார்களாம். அதாவது இந்த வருகையானது வெறும் 4,000 முதல் 3,500 ஆண்டு முன்பு நடைபெற்றதாகக் கருதப்படும் இந்தோ-ஐரோப்பிய மொழி பேசுவோரின் புலப்பெயர்வுக்கு வெகுமுன்பே நடந்து விட்டதாம். ஆனால் உண்மை என்னவென்றால், இதற்கு நேரெதிரானதை உணர்த்தும் கடும் எச்சரிக்கைச் செய்தி இந்த ஆய்விலேயே அடங்கியிருந்தது: "மக்களின மரபணுவியலில் அடங்கிய "மாதிரியமைப்புகள்" என்பவற்றைக் கவனத்துடன் அணுக வேண்டும் என்று நாங்கள் எச்சரிக்கிறோம். அவை வரலாற்றுவழிப்பட்ட கருதுகோளைச் சோதித்துப் பார்ப்பதற்கு ஒரு முக்கியச் சட்டகத்தை வழங்கிய போதிலும், மிகையாக எளிமைப்படுத்தப்பட்டவையாக உள்ளன.

காட்டாக, உண்மையான மூதாதை மக்களினத்தவர் நாங்கள் எங்கள் மாதிரியமைப்பில் அனுமானித்துக் கொண்டது போல் அநேகமாக ஒருபடித்தானவராக இல்லாது இருக்கலாம். ஆனால் இதற்குப் பதிலாக அவர்கள் வெவ்வேறு காலங்களில் கலந்துபோன சார்புக் குழுக்களின் தொகுப்புகளிலிருந்து உருவாகியிருக்கலாம்." வேறுவகையில் சொன்னால், வட இந்திய மூதாதையர் பற்பல புலப்பெயர்வுகளால் உருவாகியிருக்கலாம். அவற்றில் அநேகமாக இந்தோ-ஐரோப்பிய மொழி பேசுவோரின் புலப்பெயர்வும் அடங்கியிருக்கக் கூடும்.

(தொடரும்)

**இக்கட்டுரைக்கான கலைச்சொல் விளக்கம்:**

செல் என்றால் என்ன?

செல் என்பது உலகத்தின் அனைத்து உயிரினங்களின் அடிப்படை அலகு. ஒரு செல் உயிரினங்களில் இருந்து பல செல் உயிரினங்கள் வரை உலகத்தில் உண்டு. நாம் பல செல் உயிரினம். தாயின் கருவில் உருவெடுக்கும் ஒரே ஒரு செல்தான் ஒன்று இரண்டாக, இரண்டு நான்காக, நான்கு எட்டாக முழுப் பகுப்பு (மைட்டாசிஸ்) அடிப்படையில் பல்கிப் பெருகி முழு மனிதராக உருவெடுக்கிறது. ஒரு செல்லில் ஓர் உயிரினம் இயங்குவதற்கான அனைத்துக் கூறுகளும் அடங்கியுள்ளன. இவற்றில் நாம் இந்தக் கட்டுரையில் இரு பொருள்கள் பற்றிப் பேசினோம். ஒன்று, மைட்டோகாண்ட்ரியா, மற்றொன்று உட்கரு. நாம் ஒவ்வொன்றாக் காண்போம்.

முழுப்பகுப்பு என்றால் என்ன?

ஆங்கிலத்தில் மைட்டாசிஸ் என்று அழைக்கப்படும் இந்த முழுப் பகுப்பே ஒற்றைக் கரு பெருகி குழந்தையாகப் பிறப்பதற்கும், பிறகு அந்தக் குழந்தை வளர்ந்து முழு மனிதராவதற்கும் காரணமாக இருக்கிறது. இந்த செல் பகுப்பை நாம் ஏன் முழுப் பகுப்பு என்கிறோம்? மனித உடம்பு செல்கள் ஒன்று இரண்டாக, இரண்டு நான்காகப் பெருகிச் செல்லும் போது, அந்த செல்களுக்குள் எந்த மாறுபாடும் ஏற்படாது. மூல செல் போன்றே அதிலிருந்து பகுபடும் செல்லும் இருக்கும். அதனால்தான் இந்த செல்பகுப்பு முழுப் பகுப்பு எனப்படுகிறது.

மைட்டோகாண்ட்ரியா என்றால் என்ன?

ஒவ்வொரு செல்லிலும் சைட்டோபிளாசம் என்னும் திரவம் உள்ளது. இந்த திரவத்தில்தான் நாம் இயங்குவதற்கான அனைத்து பொருள்களும் மிதந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான் இந்த மைட்டோகாண்ட்ரியா. இதுவே மனிதர்களுக்குத் தேவையான ஆற்றலை ஆக்கித் தருகிறது. எனவே இதனை ஆற்றல் தொழிற்சாலை என்று அழைக்கிறார்கள்.

<u>உட்கரு என்றால் என்ன?</u>

ஆங்கிலத்தில் நியூக்ளியஸ் என அறியப்படும் உட்கரு செல்லின் நடுவில் உள்ளது. இந்த உட்கருவுக்குள் 23 குரோமோசோம் ஜோடிகள் உள்ளன.

<u>குரோமோசோம் என்றால் என்ன?</u>

மனித செல்லின் உட்கருவுக்குள் உள்ள 23 குரோமோசோம் ஜோடிகளில் 22 ஜோடி பாலியல்சாரா குரோமோசோம்கள் (ஆட்டோசோம்கள்) என்றும், மீதி ஒற்றை ஜோடி பாலியல்சார் குரோமோசோம் (செக்ஸ் குரோமோசோம்) என்றும் அழைக்கப்படுகின்றன. ஒவ்வொரு குரோமோசோமுக்குள்ளும் இரட்டைச் சுருள் வடிவ டிஎன்ஏ உள்ளது.

<u>பாலியல்சாரா குரோமோசோம்கள் என்றால் என்ன?</u>

ஆட்டோசோம்கள் என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இந்த 22 ஜோடி குரோமோசோம்கள் தன்னைத்தான் அச்சு பிசகாது மறுஉற்பத்தி செய்து கொள்ளும் எனக் கண்டோம். இந்த குரோமோசோம்களின் பகுப்பே மனிதனின் உடல் வளர்ச்சிக்குக் காரணமாகிறது.

<u>பாலியல்சார் குரோமோசோம் என்றால் என்ன?</u>

இது செல்லின் உட்கருவில் அடங்கியுள்ள 23ஆவது ஜோடி குரோமோசோம் ஆகும். செக்ஸ் குரோமோசோம் என ஆங்கிலத்தில் அறியப்படும் இந்தப் பாலியல்சார் குரோமோசோம் மனிதர்களின் பாலியல் வகையைத் தீர்மானிக்கிறது. இந்த குரோமோசோம்கள் X, Y என இரு வகைப்படும். 23ஆவது ஜோடி XX என்றால் மனிதிகளாகவும், XY என்றால் மனிதன்களாகவும் வளர்கின்றனர். மைட்டோகாண்ட்ரியாவை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு ஏந்திச் செல்லும் வாகனமாக இந்த X வகை குரோமோசோம்களே திகழ்கின்றன.

<u>டிஎன்ஏ என்றால் என்ன?</u>

ஆங்கிலத்தில் ஜீன்கள் எனப்படும் மரபணுக்களை ஏந்தி நிற்பதே இந்த டிஎன்ஏக்கள். இந்த டிஏன்ஏக்கள் இரட்டைச் சுருள் வடிவ ஏணி போல் உள்ளது. இந்தப் படிக்கட்டுகளில் மரபணுக்கள் அடங்கியுள்ளன. இது குரோமோசோம்களில் மட்டுமல்லாது, உட்கருவைத் தாண்டி சைட்டோபிளாச திரவத்தில் மிதந்து கொண்டிருக்கும் மைட்டோகாண்ட்ரியாவிலும் உள்ளது. இதனை மைட்டோகாண்ட்ரியா டிஎன்ஏ (mtDNA) என்று அழைப்பர்.

<u>மரபணுக்கள் என்றால் என்ன?</u>

ஓர் உயிரினத்தின் பண்புகள் அனைத்தையும் தீர்மானிப்பது இந்த மரபணுக்களே. உன் தலை எழுத்து அப்படி என்பார்கள். ஆனால் உன் மரபணு எழுத்து அப்படி எனச் சொல்வதே சரியாக இருக்கும். அந்த அளவுக்கு இந்த மரபணுக்கள் நம் உடலின் உயரம், குள்ளம், தலைமுடி, கை

நீளம், பாத அகலம், வழுக்கைத் தலை என ஒவ்வொன்றையும் தீர்மானிக்கிறது. மீன் விழியாள் என ஒருத்தியின் கண்ணில் எழுதி வைப்பது இந்த மரபணுக்களே. கோபம், அமைதி போன்ற மனிதக் குணங்களையும் நீரிழிவு, புற்று போன்ற தொற்றா நோய்களைத் தீர்மானிப்பதும், மனிதர்களின் நோய் எதிர்ப்பு ஆற்றலைத் தீர்மானிப்பதும் இந்த மரபணுக்களே. ஆக, பாலியல்சாரா குரோமோசோம்களின் டிஎன்ஏக்களின் படிக்கட்டில் அடங்கியுள்ள மரபணுக்கள் உடல் பற்றியும், குணங்கள் பற்றியும், பாலியல்சார் குரோமோசோம்களின் டிஎன்ஏக்கள் படிக்கட்டில் அடங்கியுள்ள மரபணுக்கள் ஆணா பெண்ணா என்றும் தீர்மானிக்கின்றன.

<u>மைட்டோக்ககாண்ட்ரிய டிஎன்ஏ என்றால் என்ன?</u>

விலங்கின செல்லின் உட்கருவுக்கு வெளியே டிஎன்ஏவைக் கொண்டுள்ள செல்லின் ஒரே உள்ளுறுப்பாக மைட்டோக்காண்டிரியா உள்ளது. தாவரயின செல்லில் பச்சையம், மைட்டோக்காண்டிரியா, ஆகிய இரண்டு செல் உள்ளுறுப்புகளிலுமே டிஎன்ஏ உள்ளது.கருவுறுதலின் போது தாயின் அண்ட செல்லிலிருந்தே மைட்டோகாண்ட்ரிய டிஎன்ஏ கருவிலிருக்கும் குழந்தைக்கு வந்து சேருகிறது. நாம் அனைவரும் தாய்வழியிலே பெருமளவில் மைட்டோகாண்டிரிய டி.என்.ஏவைப் பெறுகிறோம்.

<u>குன்றல் பகுப்பு என்றால் என்ன?</u>

செல்களின் முழுப் பகுப்பு பற்றி நாம் ஏற்கெனவே கண்டோம். மனிதர்களின் வளர்ந்து பருவ வயதை அடையும் போது பாலியல் உறுப்புகளில் குன்றல் பகுப்பு நடைபெறத் தொடங்குகிறது. இந்தப் பகுப்பில் முழுப் பகுப்பு போலல்லாமல், ஒன்று இரண்டாகாது, ஒன்று நான்காகும். அது மட்டுமல்ல, 23 ஜோடி குரோமோசோம்களும் தனித் தனியாகப் பிரிந்து விடும். எனவே ஒவ்வொரு செல்லிலும் தனித்து விடப்பட்ட ஒற்றை ஜோடி குரோமோசோம் மட்டுமே எஞ்சியிருக்கும். இப்படிப் பகுபடும் செல்களில் குரோமோசோம் எண்ணிக்கை குறைவதால்தான் இதனைக் குன்றல் பகுப்பு என்கிறோம். கலவியின் போது, பெண்ணின் ஒரு முட்டையும், ஆணின் ஒரு விந்தும் சேரும் போது, அது ஒற்றைக் கருவாகிறது. இதுவே முழு செல். அதாவது இங்கு பிரிந்து போன 23 தன்னந்தனி குரோமோசோம்கள் மீண்டும் ஜோடி சேர்கின்றன. இந்த செல் பழைய படி முழுப் பகுப்பில் ஈடுபட்டு முழு மனிதனாகிறது. இந்தச் சுழற்சி மீண்டும் மீண்டும் நடைபெற்று மனித இனம் அடுத்தடுத்த தலைமுறைக்குச் செல்கிற்து. குன்றல் பகுப்பு நடைபெறுவதாலேயே எத்தனை தலைமுறை ஆனாலும் குரோமோசோம்கள் எண்ணிக்கை மாறுவதில்லை.

இப்போது நாம் 23ஆவது ஜோடி பாலியல்சார் குரோமோசோமை மட்டும் எடுத்துக் கொள்வோம்.

கலவியின் போது பெண்ணிடமிருந்து எக்ஸ் மட்டுமே வர முடியும், ஆணிடமிருந்து எக்சும் வரலாம், ஒய்யும் வரலாம். எக்சும் எக்சும் சேர்ந்தால் அது பெண், எக்சும் ஒய்யும் சேர்ந்தால் அது ஆண். இந்த உண்மைகளை நாம் ஏற்கெனவே கண்டோம். ஆனால் குழந்தை ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் மைட்டோகாண்டிரிய டி.என்.ஏவைத் தாயிடமிருந்தே பெறுகிறது. ஆணின் விந்தணுவில் மைட்டோக்காண்ட்ரியாக்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதுடன் அவை கருவுறுதலின் போது அழிந்தும் போகும். ஆனால் தாய் வழியில் அடுத்தடுத்த தலைமுறைக்கு மைட்டோக்காண்ட்ரியா சென்று கொண்டே இருக்கும். எனவே பெண்ணை ஆற்றலின் வடிவம் எனச் சொன்னாலும் மிகையாகாது. ஆற்றல் தொழிற்சாலை அல்லவா மைட்டோகாண்ட்ரியா.

எனவேதான் இந்த மைட்டோகாண்ட்ரியாவை அடிப்படையாகக் கொண்டு பின்னோக்கிய பெண் தலைமுறைகளுக்குச் சென்று உயிரியலர்கள் ஒரு பெண்ணின் மரபணு கடந்து வந்த வழியை ஆய்கின்றனர்.

ஒய் குரோசோமை ஆய்வு செய்து பின்னோக்கிய பின்னோக்கிய ஆண்தலைமுறைகள் நோக்கி ஆய்வு நடத்தினோமானால், ஓர் ஆணின் மரபயணு கடந்து வந்த வழியை ஆய்வு செய்ய முடியும்.

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

<u>தியாகு</u>

<u>தோழர் பெ. மணியரசனுக்கு மறுமொழி (8)</u>

# சோவியத்துத் தேசியமும் இந்தியத் தேசியமும்

இந்தியத் தேசியம் பொய் என்று மெய்ப்பிக்கும் முயற்சியில் தோழர் பெ. மணியரசன் கடைசியாகக் கேட்கும் வினா: சோவியத்துத் தேசியம் உருவானதா? ஆம் என்பதே என் விடை. சோவியத்துத் தேசம் உருவானதா? என்று கேட்டால் இல்லை என்று அவர் சொல்வார், நானும் சொல்வேன். ஆனால் தேசத்துக்கும் தேசியத்துக்குமான வரலாற்று-இயங்கியல் உறவை விளங்கிக் கொள்ளாததால் இரண்டும் ஒன்று என எந்திரத்தனமாக முடிவெடுக்கிறார்.

குமுக அறிவியல் நோக்கில் இந்தியத் தேசம் என்ற ஒன்று இல்லாததால் இந்தியத் தேசியம் என்பதும் இல்லாத ஒன்றுதான் என்ற முடிவுக்கு வந்து, இந்த முடிவுக்கு மாறான வரலாற்று உண்மைகளை பெ,ம. வசதியாக ஒதுக்கித் தள்ளி விடுகிறார் அல்லவா, சோவியத்துத் தேசியம் தொடர்பாகவும் இதே இயங்காவியல் அணுகுமுறையையே கைக்கொள்கிறார். குமுக அறிவியல்



நோக்கில் சோவியத்துத் தேசம் என்ற ஒன்று இல்லை என்பதிலிருந்து சோவியத்துத் தேசியம் என்ற ஒன்றே உருவாகவில்லை என்ற பிழையான முடிவுக்குச் செல்கிறார்.

தேசபக்தி, நாட்டுப் பற்று, தாயகம் காத்தல், தந்தையர் நாடு போன்ற உணர்வுகளுக்கும் இவற்றுக்கு வடிவங்கொடுக்கும் கருத்தியலுக்கும் தோழர் பெ.ம. என்ன பெயர் கொடுப்பார்? என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இவையனைத்தையும் உள்ளடக்கிய ஒரு சொல்தான் தேசியம்.

இன்றைய இந்தியாவில் ஆளும் கட்சியால் ஒருவகைப் பிற்போக்குத் தேசியம் முன்னிறுத்தப்படுகிறது. தேசபக்தி, நாட்டுப்பற்று என்று பற்பல பெயர்களால் இது வலியுறுத்தப்படுகிறது. இந்தத் தேசியத்துக்கு எதிரானவர்கள் தேச விரோதிகள் என்று தூற்றப்படுகிறார்கள். பிற்போக்கான தேசியத்துக்கு இது ஓர் எடுத்துக்காட்டு. தேசியம் என்றாலே முற்போக்கானதாகத்தான் இருக்க வேண்டும் என்ற தேவையில்லை. முற்போக்குத் தேசியம் போல் பிற்போக்கு தேசியமும் உண்டு.

இலங்கைத் தீவு இருவகைத் தேசியங்களுக்கும் களமாக இருந்து வருகிறது. சிங்களப் பேரினவாதம் சிங்களத் தேசியம் என்று வண்ணிக்கப்படுவது தோழர் பெ.ம.வுக்குத் தெரிந்திருக்க வேண்டும். சிங்களப் பேரினவாதிகளை Sinhala nationalists (சிங்களத் தேசியவாதிகள்) என்று தமிழ்த் தேசிய (தமிழீழ) இலக்கியத்திலேயே குறிப்பிடுவதும் உண்டுதான்.

ஜார் மன்னன் ஆட்சியை எதிர்த்து உருசிய மக்களோடு பிற தேசிய இன மக்களும் சேர்ந்து போராடினார்கள். அப்போது உருசியா என்ற சொல் ஒருபுறம் மா-உருசியத் தேசம் அல்லது தேசிய இனத்தைக் குறிப்பதாகவும், மறுபுறம் ஜாராட்சிக்கு உட்பட்ட மொத்த உருசியாவைக் குறிப்பதாகவும் இருபொருளில் ஆளப்பட்டது. உருசியக் குமுகியக் குடியாட்சியத் தொழிலாளர் கட்சி (Russian Social Democratic Labour Party - RSDLP) என்பதில் உருசியா என்ற சொல் மொத்த உருசியாவையும் குறித்தது. “மா-உருசியப் பெருமிதம்” என்று லெனின் சொல்வது உருசியத் தேசிய இனத்தை மட்டும் குறிக்கும்.

சோவியத்து என்ற சொல் 1905ஆம் ஆண்டு முதல் உருசியப் புரட்சியின் போதே புழக்கத்துக்கு வந்து விட்டாலும், தொழிலாளர்களின் அரசியல் அதிகாரப் போராட்டத்துக்குரிய அமைப்பைக் குறிப்பதாக இருந்ததே தவிர நாட்டைக் குறிப்பதாக இல்லை. 1917 பிப்ரவரி-மார்ச்சுக்

குடியாட்சியப் புரட்சியின் போதும், நவம்பர் குமுகியப் புரட்சியின் போதும் கூட தொழிலாளர்கள்-உழவர்கள்-படைவீரர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றவும் செலுத்தவுமான அமைப்பாக இருந்ததே தவிர நாட்டின் பெயராக மாறவில்லை. எனவே அந்தக் கட்டத்தில் சோவியத்துத் தேசியம் என்ற ஒன்று உருவாக வாய்ப்பில்லை.

1922 திசம்பர் 30ஆம் நாள் சோவியத்துக் குமுகியக் குடியரசுகளின் ஒன்றியத்தை அமைப்பதற்கான உடன்படிக்கை ஒப்பமிடப்பட்ட பிறகுதான் சோவியத்துக் குமுகியக் குடியரசுகளின் ஒன்றியம் (USSR) என்ற அரசு / நாடு பிறந்தது. இதன் சுருக்கப் பெயர்தான் சோவியத்து ஒன்றியம் அல்லது சோவியத்து யூனியன். இதையொட்டியே உருசியப் பொதுமைக் கட்சி (போல்சவிக்) என்ற பெயரும் சோவியத்து ஒன்றியப் பொதுமைக் கட்சி (போல்சவிக்) என்பதாக மாற்றப்பட்டது. பிறகு அடைப்புக்குறியில் இருந்த போல்சவிக் கைவிடப்பட்டு சோவியத்து ஒன்றியப் பொதுமைக் கட்சி ஆயிற்று. சோவியத்துக் குமுகியக் குடியரசுகளின் ஒன்றியம் (Union of Soviet Socialist Republics - USSR) என்பது குமுக அறிவியல் நோக்கில் ஒரு தேசமன்று என்பதில் நமக்கு எவ்வித ஐயமும் இல்லை.

ஆனால் சோவியத்து ஒன்றியத்தில் இடம் பெற்ற தேசங்களிடையே குமுகியக் கட்டுமானமும் குமுகியப் பண்பாடும் ஒரு புதிய 'நாம்' உணர்வைத் தோற்றுவித்தன. இந்த நாம் உணர்வு ஒரு புதிய நாட்டுப்பற்றுக்கு அடிப்படை ஆயிற்று. குமுகியத் தாய்நாடு அல்லது குமுகியத் தந்தையர் நாடு (SOCIALIST FATHERLAND) என்ற உணர்வும் அதையொட்டிய கருத்தியலும் உருப்பெற்றன. இது முதலியத் தேசியம் அன்று, குமுகியத் தேசியமே (சோசலிசத் தேசியம்) என்பது தெளிவு. சோவியத்து ஒன்றியத்தில் உறுப்புகளாக இருந்து குமுகியக் கட்டுமானத்தில் ஒன்றுபட்டு நின்ற பல்வேறு தேசங்களுக்கிடையே எழுந்த தோழமையையும் அதன் வெளிப்பாடாகிய பண்பாட்டையும் சோவியத்துத் தேசியம் என்று குறிப்பிடுகிறோம்.

இந்த சோவியத்துத் தேசியம் எப்போது எப்படி முழுமையாக வெளிபட்டது? எத்தகைய வீரமும் ஈகமும் அதிலிருந்து விளைந்தன? வரலாற்றில் அதன் வகிபாகம் என்ன? என்பதையெல்லாம் தோழர் பெ.ம.வுக்கு நான் சொல்லத் தேவையில்லை. ஒன்றை மட்டும் நினைவூட்ட விரும்புகிறேன். ஒரு கருத்து சரியானதா அல்லவா? என்பதற்கு இறுதியான ஆய்வுக் களம் நடைமுறை வாழ்க்கைதான். சோவியத்துத் தேசியம் என்ற கருத்தும் இப்படித்தான் இரண்டாம் உலகப் போரில் பாசிசத்தை எதிர்த்து சோவியத்து மக்கள் (ஒன்றுபட்ட மக்களினங்கள்) குமுகியத் தந்தையர் நாட்டைக் காக்க (in defence of the socialist fatherland) நடத்திய போரில் தன்னை மெய்ப்பித்துக் கொண்டது.

இரண்டாம் உலகப் போரில் சோவியத்து ஒன்றியம் சந்தித்த மொத்த உயிரிழப்புகள் சற்றொப்ப 2.6 கோடி. அப்போதைய சோவியத்து மக்கள்தொகையான 19 கோடியில் இது சற்றொப்ப 14 விழுக்காடு ஆகும். உலக வரலாற்றிலேயே ஆகக் கொடியதான அந்தப் பெரும்போரில் ஒவ்வொரு நாட்டிற்கும் ஏற்பட்ட உயிரிழப்புகளைக் கணிப்பதில் மாறுபாடுகள் இருப்பினும் இழப்புகளின் அட்டவணையில் சோவியத்து ஒன்றியமே முதலிடத்தில் உள்ளது என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை. அதற்கு அடுத்த இடத்தில் சீனம் 2 கோடி உயிர்களை இழந்தது. உலக அளவில் அப்போதைய மக்கள்தொகை சற்றொப்ப 230 கோடி, உயிரிழப்புகள் சற்றொப்ப 3 விழுக்காடு.

சோவியத்து குமுகியத் தந்தையர் நாடு சந்தித்த உயிரிழப்புகள் வெறும் புள்ளிக்கணக்குகள் அல்ல. இவை அம்மக்களும் அரசும் நடத்திய வெஞ்சமரின் வீரத்துக்கும் ஈகத்துக்குமான சான்றுகள். சோவியத்து மக்களின் (அனைத்து மக்களினங்களின்) கூட்டு உணர்வுக்கு -- சோவியத்துத் தேசியம் என்ற உணர்வுக்கும் கருத்துக்கும் குருதிச் சான்றுகள் (இரத்த சாட்சிகள்).

தேசிய இனச் சிக்கலில் பாட்டாளி வகுப்பின் அணுகுமுறைக்கு மூன்று அடிப்படைகளைப் புரட்சித் தலைவர் இலெனின் வலியுறுத்துவார். ஒன்று: அனைத்துத் தேசிய இனங்களுக்கும் தன்தீர்வுரிமை. இரண்டு: தேசிய இனங்களிடையே நிகர்மை. மூன்று: வெவ்வேறு தேசிய இன உழைக்கும் மக்களிடையே ஒற்றுமை.

நவம்பர் புரட்சி (உருசியக் குமுகியப் புரட்சி) தேசியத் தன்தீர்வுரிமையையும் நிகர்மையையும் நிலைநாட்டியது, அரசதிகாரம் கொண்டு உறுதி செய்தது. வெவ்வேறு தேசிய இன உழைக்கும் மக்களிடையே ஒற்றுமை என்ற அடிப்படையில் எதிர்ப்புரட்சியையும் அயல் தலையீட்டையும் முறியடித்தது மட்டுமல்ல, ஒரு புதிய குமுக ஒழுங்கைக் கட்டியெழுப்பவும் செய்தது. சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் இடந்தராத அந்த அமைப்பு இந்த ஒற்றுமையை நிலைப்படுத்தியது. நிலைபெற்ற இந்த ஒற்றுமை பாசிசத்துக்கு எதிரான செருக்களத்தில் மென்மேலும் திண்மை பெற்றது. இதுதான் ”சோவியத்துத் தேசியம்” உருவான விதம்.

**உருசியத் தேசம் - உருசியத் தேசியம், உக்ரைன் தேசம் - உக்ரைன் தேசியம், ஜார்ஜியத் தேசம் - ஜார்ஜியத் தேசியம்… இன்னும் இது போல் பல தேசிய இனங்களும் தேசியங்களும் இருப்பினும் வரலாற்றுக் காரணிகளால் பல்வேறு தேசங்களுக்கும் பொதுவான ஒரு புதிய தேசியமாக சோவியத்துத் தேசியம் எழுந்தது. இதனை ஒரு வகையில் பன்னாட்டுத் தேசியம் (சர்வதேசியம்) என்றும் குறிப்பிடலாம்.**

தமிழ்த் தேசியமே கூட இன்றைய உலகில் ஒரு தேசிய இனத்தின் தேசியமாக மட்டுமல்லாமல்

ஒரு வகையில் பன்னாட்டுத் தேசியமாகவும் மலர்ந்திருப்பதைத் தோழர் பெ.ம. ஒப்புக்கொள்வார். சோவியத்துத் தேசியம் குமுகியக் கட்டுமானத்தில் பல்வேறு தேசிய இனங்களின் ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டிருந்த அளவில் நேர்க்கூறும், பாசிச வன்படையெடுப்பை முறியடிப்பதற்கான ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டிருந்த அளவில் எதிர்க்கூறும் கொண்டு விளங்கிற்று.

சோவியத்துத் தேசியம் தொடர்பான வரலாற்றுப் பார்வையை இந்தியத் தேசியத்துக்கும் பொருத்திப் பார்க்கலாம். கோடிக்கணக்கான உழைக்கும் மக்களை ஓரளவு நீண்ட காலத்துக்குக் களத்தில் துடிப்புடன் இயங்கச் செய்த ஒரு தேசியம் எப்படிப் பொய்யாக இருக்க முடியும்? முற்போக்கோ பிற்போக்கோ எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும், அப்படி ஒன்றே பொய் என்றால் எப்படி? பொல்லாததாகக் கூட இருக்கட்டும். இல்லாதது என்றால் எப்படி? தோழர் பெ.ம.வும் அவரைப் போலவே கருதக் கூடிய தோழர்களும் சிந்தித்துப் பார்க்கட்டும்.

***(முதல் பகுதி முற்றும்)***

(தோழர் பெ. மணியரசனுக்கு மறுமொழியாக எழுதத் தொடங்கிய கட்டுரைத் தொடரின் முதல் பகுதி இத்துடன் முடிகிறது. இது மார்க்சிய நோக்கில் தேசியம், இந்தியத் தேசியம், தமிழ்த் தேசியம் என்னும் பொருள் குறித்தானது. அடுத்த பகுதி பெரியாரும் திராவிடமும் தொடர்பானது. சிறிது இடைவெளி விட்டு எழுதுவேன்.)

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

**சமந்தா**

# வீரவணக்கம்

# புரட்சித் தலைவர் அப்துல் கரிம் காசிம்!

இன்று (பிப்ரவரி 9) இராக்கியப் புரட்சியாளர் அப்துல் கரிம் காசிம் அவர்களின் 57ஆம் நினைவு நாள். மற்ற நாடுகளில் ஒரு மக்கள்நல அரசு அமைந்து விட்டால் அதைக் கவிழ்ப்பதற்கு முதல் முயற்சி எடுப்பது ஐக்கிய அமெரிக்க அரசுதான் என்பது இன்று நாம் அனைவரும் அறிந்த ஒன்று. 2003இல் இராக்கின் எண்ணெய் வளத்தை நாட்டுடைமை ஆக்கியதற்காக சதாம் உசேனை அமெரிக்கா தூக்கிலிட்டது. லிபியத் தலைவர் மும்மார் கடாஃபி எண்ணெய் வளத்தை நாட்டுடைமை ஆக்கியதற்காகவும், ஆப்பிரிக்க ஒன்றியத்திற்கான நாணயத்தை உருவாக்க முன்னெடுப்புகள் மேற்கொண்டதற்காகவும் கொல்லப்பட்டார் என்பதை நாம் அறிந்திருப்போம். ஆனால் இதற்கெல்லாம் பல ஆண்டுகள் முன்பாகவே இராக்கில் எண்ணெய் வளத்தை

நாட்டுடைமை ஆக்கியதாலும், சோசலிசக் கொள்கைகளைச் செயல்படுத்தியதாலும் இராக்கின் புரட்சித் தலைவர் அப்துல் கரிம் காசிம் முஹம்மது சி.ஐ.ஏ.வின் முழு ஒத்துழைப்புடன் கொல்லப்பட்டு இன்றுடன் 57ஆண்டுகள் ஆகி விட்டன.

மத்தியக் கிழக்கில் சோசலிசத்தின் தாக்கம் குறித்துப் பெரிதாகப் பதிவு செய்யப்படவில்லை.




இராக்கில் கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கு உயர்வதைக் கண்டு பீதியுற்ற அமெரிக்கா ஐயாயிரம் கம்யூனிஸ்டுகளை வேட்டையாடிக் கொன்று குவித்த செய்தி இன்னும் பரவலாக அறியப்படாமலே உள்ளது.

இஸ்லாமிய நாடுகளின் அரசியல் ஷியா, சன்னி பிரிவினைவாதத்தின் அடிப்படையிலே கட்டமைக்கப்படுவதைப் பார்த்திருப்போம், இதில் எந்தப் பக்கமும் சேராமல் சமயச்சார்பின்மையை உயர்த்திப் பிடித்த ஒரு புரட்சியாளர்தான் அப்துல் கரிம் காசிம். நாட்டுப்பற்றும் அர்ப்பணிப்பும் கொண்ட பகுத்தறிவாளரான அவர் கம்யூனிஸ்டுகளைப் பெருமளவு ஆதரித்தார். இஸ்லாமியச் சமூகத்தில் பெண்களின் சமூக அரசியல் பங்கேற்பையும், அவர்கள் சமவுரிமை பெறுவதையும் உறுதிபடுத்த பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டார்.

1958 ஜூலை முதல் 1963 பிப்ரவரியில் அவர் கொல்லப்படும் வரை இராக்கின் பிரதமராகவும், பாதுகாப்புத் துறை அமைச்சராகவும் பணியாற்றினார். எளிய முறையில் வாழ்ந்த அவர் பாதுகாப்பு அமைச்சகத்தில் தன் சிறிய அலுவல் அறையிலேயே உறங்கினார்.. 1963ஆம் ஆண்டு ஃபிப்ரவரி 9ஆம் நாள் 48 வயதில் கொல்லப்பட்டார். எந்த அரசியல் அமைப்பையும் சேராத அவர் தலைவர் என்றே பரவலாக அழைக்கப்பட்டார்.

அப்துல் கரிம் காசிம் 1914 நவம்பர் 21ஆம் நாள் பிறந்தார். தந்தை காசிம் முஹம்மது பகர் ஃபத்லி வட பாக்தாத்தை சேர்ந்த விவசாயி. இராக்கிய சன்னி முஸ்லிம் பிரிவைச் சேர்ந்த அவர், தன் மகன் காசிம் குழந்தையாக இருக்கும் போதே முதல் உலகப்போரில் ஈடுபட்டு உயிர் துறந்தார். அவருடைய தாயார் கைஃபிய ஹசான் யகுப் அல்-சகினி பாக்தாத்தை சேர்ந்த ஷியா முஸ்லிம். காசிமுக்கு ஆறு வயதாக இருக்கும் போது அவரது குடும்பம் டைகிரிஸ் அருகிலுள்ள சுவரியா என்ற சிறு நகரத்திற்கு இடம் பெயர்ந்தது. பிறகு 1926இல் பாக்தாத்திற்கு குடிபெயர்ந்தது.பள்ளிக் காலத்தில் சிறந்த மாணவராகத் திகழ்ந்த அவர் இராணுவக் கல்லூரியில் சேர்ந்து இரண்டாம் படைத் தளபதியாகப் பட்டம் பெற்றார். பிறகு அல்-அக்ரான் பணியாளர் கல்லூரியில் சேர்ந்து 1941இல் முதல் வகுப்பில் பட்டம் பெற்றார். டெவிசீர்ஸில் மூத்த அலுவலருக்கான படிப்பையும்

முடித்தார். எவரையும் அசாத்தியமான இராணுவச் செயல்பாடுகளில் இறங்க இசைய வைக்கும் திறமை பெற்றிருந்ததால் கரிம் காசிமைப் பாம்பாட்டி என்றே வகுப்பு மாணவர்கள் அழைத்தார்கள்.

**ஜூலை 14 புரட்சி:**

மன்னராட்சியாலும், மேற்கத்திய ஆதிக்கத்தாலும் குறிப்பாக பிரித்தானிய நாட்டின் செல்வாக்கால் இராக்கியர்கள் விரக்தியடைந்திருந்த காலம் அது. 1955 ஆம் ஆண்டில் சோவியத் ரஷ்யாவிற்கு எதிராக இராக், ஈரான், பாகிஸ்தான், துருக்கி ஆகிய நாடுகளுக்கிடையே இராணுவக் கூட்டமைப்பை உருவாக்குவதற்கான பாக்தாத் ஒப்பந்தத்திற்கு இங்கிலாந்து மற்றும் ஐக்கிய அமெரிக்க அரசு ஆதரவு அளித்தன. சூயஸ் நெருக்கடியின் போது 1956ல் எகிப்து மீதான பிரித்தானியப் படையெடுப்பை இராக் மன்னர் பைசல் II ஆதரித்த போது இராக்கியர்கள் ஆத்திரமும் அதிருப்தியும் அடைந்தனர். மேற்கத்தியரை எதிர்த்து லெபனானில் ஏற்பட்ட கலகம் ஜோர்டானுக்குப் பரவாமல் தடுக்க ஜோர்டான் மன்னர் இராக்கின் உதவியை நாடிய போதுதான் முடியாட்சியைக் கவிழ்க்கும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான உத்வேகம் பொறிதட்டியது. இராக்கின் இரண்டாம் பைசல் மன்னரும் பிரதமர் நூரி அல்-சையத்தும் எல்லைப்புறத்திற்கு அனுப்ப இராணுவத்தை அணிதிரட்ட உத்தரவிட்டனர். ஜோர்டானுக்கு உதவ இராக்கின் முடியரசால் திட்டமிடப்பட்ட படை இயக்கங்களை ஆட்சிக் கவிழ்ப்பிற்கான வாய்ப்பாக காசிமும், அவர் வழி நடத்தும் படையினரும் பயன்படுத்தினர். இந்த அணிதிரட்டலால் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு வெற்றிடத்தைப் பயன்படுத்தி, தளபதி காசிம், தளபதி அப்துல் சலாம் ஆரிஃப் ஆகியோர் கிழக்கு இராக்கில் நிறுத்தப்பட்டிருந்த இராணுவத்தின் 3ஆவது பிரிவை ஜோர்டானுக்கு ஆதரவாக மேற்கு எல்லையை நோக்கி நகர்த்தினர். அதிகாலையில் பாக்தாத் வழியாகச் சென்ற காசிம் திடீரென வானொலி நிலையம், அரச அரண்மனை மற்றும் தலைநகரில் உள்ள பிற முக்கியத் தளங்களை கைப்பற்ற உத்தரவிட்டார். ஜோர்டானுக்குச் செல்லாமல் படைகளை பாக்தாத்துக்கு செலுத்தினார். தளபதி காசிமும் அப்துல் சலாம் அரிஃபும் ஜூலை 14 புரட்சிக்குத் தலைமை தாங்கினர். காசிம் ஜூலை 14ஆம் நாள் பாக்தாத்தை இராணுவக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து முடியரசை வீழ்த்தினார். பாக்தாத் நகரத்தின் முக்கிய மையங்கள் வெற்றிகரமாக கட்டுப்படுத்தப்பட்டன. வானொலி மையத்தைக் கட்டுப்படுத்திப் புரட்சியை பிரகடனம் செய்தனர். முடியாட்சிக் கவிழ்ப்பு அலுவலர்களாலும், குடிமக்கள் இயக்கங்களாலும் கலந்துரையாடித் திட்டமிடப்பட்டது.

வரலாற்று அடிப்படையில், 1936 பக்ர் சிட்கி ஆட்சிக் கவிழ்ப்பில் தொடங்கி 1941 ரஷீத் அலி

இராணுவ இயக்கம், 1948 வாத்பா எழுச்சி மற்றும் 1952, 1956ல் நடந்த தொடர்ச்சியான எழுச்சிமிக்க கிளர்ச்சி நடவடிக்கைகள், போராட்டங்களின் உச்சகட்டமாக ஜூலை14 புரட்சி கிட்டத்தட்ட எந்த எதிர்ப்பும் இல்லாமல் வெற்றி பெற்றது. அண்டை நாடான ஜோர்டானில் உள்ள ஹாஷிமியர்கள் ஆட்சிக் கவிழ்ப்பை வெளிநாட்டுச் சக்திகளின் வேலை என்றே கருதினர்.

இந்தப் புரட்சி 1914இல் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தால் நிறுவப்பட்ட ஹாஷிமியரின் இராச்சியத்தை முடிவுக்குக் கொண்டுவந்து. காலனியாதிக்கத்திற்கு பிந்தைய சகாப்தத்தைத் தோற்றுவித்தது. 1941 ஆம் ஆண்டு நாஜி சார்பு ரஷீத் அலி அல்-கெய்லானியின் கோல்டன் சதுக்க சதியின் போது நடந்தது போலன்றி, காசிமின் ஆட்சி மாற்றத்திற்கு எதிராக முடியாட்சியை மீட்டெடுக்க ஆங்கிலேயர்கள் படையெடுப்பு எதையும் நடத்தவில்லை. அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர், தளபதி அப்துல் கரிம் காசிம் பிரதமர் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டார். அதே நேரத்தில் கர்னல் ஆரிப் துணைப் பிரதமராகவும் உள்துறை அமைச்சராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர்கள் இராக்கின் உயர்ந்த நிர்வாக மற்றும் சட்டமன்ற அதிகாரங்களைக் கொண்டிருந்தனர். முஹம்மது நஜிப் அல்-ரூபாய் இறையாண்மைக் கவுன்சிலின் தலைவரானார். புதிய புரட்சி அரசாங்கத்தைப் பாதுகாக்கும் முக்கியப் பணியை இராக்கிய கம்யூனிஸ்டுக் கட்சியுடன் அணிசேர்ந்த ஜனநாயக மக்கள் முன்னணி மேற்கொண்டது.

ஆட்சிக்கவிழ்ப்பு வெற்றிபெற்றதைத் தொடர்ந்து உருவான புதிய இராக்கியக் குடியரசிற்கு புரட்சிகர கவுன்சில் தலைமையேற்றது. இராக்கின் மூன்று இனக்குழுக்களின் உறுப்பினர் கொண்ட இறையாண்மை கவுன்சிலின் தலைமையில் புதிய அரசு செயல்பட்டது. இறையாண்மைக் கவுன்சிலில் முஹம்மது மஹ்தி குப்பா ஷியா இன மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்; காலித் அல்-நக்ஷபாண்டி குர்து இன மக்களையும், நஜிப் அல்-ரூபாய் சன்னி இன மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தினார். இந்த முத்தரப்பு அதிபர் தலைமையை ஏற்றுக்கொள்வதாக இருந்தது. இராக்கிய அரசியல் இயக்கங்களின் பரந்த அளவிலான ஒரு அமைச்சரவை உருவாக்கப்பட்டது: அது தேசிய ஜனநாயகக் கட்சியில் இருவரையும், மார்க்சியர் ஒருவரையும், அல்-இஸ்திக்லால் அமைப்பிலிருந்து ஒருவரையும், பாத் கட்சியிலிருந்து ஒருவரையும் உள்ளடக்கியதாக அமைந்தது.

ஜூலை 26, 1958 இல் இடைக்கால அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஒரு பொது வாக்கெடுப்பிற்குப் பின் நிரந்தர அரசியலமைப்புச் சட்டத்தை அறிவிக்க முடிவெடுக்கப்பட்டது.. அரசியலமைப்பின் படி இராக் ஒரு குடியரசாகவும் இஸ்லாத்தை அரசின் மதமாகக் கொண்டு

அரபு தேசத்தின் ஒரு பகுதியாகவும் இருக்குமாறு முடிவு செய்யப்பட்டது. அமைச்சரவைக்குச் சட்ட அதிகாரங்கள் இறையாண்மை கவுன்சிலின் ஒப்புதலுடன் வழங்கப்பட்டன, நிர்வாக அதிகாரங்களும் அமைச்சரவைக்கு வழங்கப்பட்டன. இராக்கிய அரசியலமைப்புச் சட்டமானது இனம், தேசியம், மொழி அல்லது மதம் கடந்து அனைத்து இராக்கிய குடிமக்களுக்கும் சமத்துவத்தையும்,சுதந்திரத்தையும் வழங்கியது. 1943 முதல் 1945 வரை குர்திஷ் எழுச்சிகளில் பங்கேற்ற குர்துகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி அரசியல் கைதிகளை விடுவிக்கப்பட்டனர்.

**சமூகச் சீர்திருத்தம்:**

காசிம் இராக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மீதான தடையை நீக்கினார். 1958 ஆம் ஆண்டு விவசாயச் சீர்திருத்தத்தை ஏற்படுத்தினார். இராக்கில் முடியாட்சியால் ஒடுக்கப்பட்ட ஏழை, எளிய மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தினார். விவசாய நிலங்களை விவசாயிகளுக்குப் பிரித்தளித்தார். ஏழை, நடுத்தர வர்க்க மக்களில் கீழ்நிலையில் உள்ளவர்கள் தங்குவதற்கான 35,000 குடியமைப்புகளை ஏற்படுத்தினார். இதற்கு மிக முக்கிய உதாரணம்: பாக்தாத்தின் புதிய புறநகர்ப் பகுதியிலிருந்த புரட்சி நகரம் மதினத் அல் தவ்ரா, பாத் கட்சியின் ஆட்சியின் கீழ் சதாம் நகரம் என அதன் பெயர் மாற்றப்பட்டது, இப்போது பரவலாக சதர் நகரம் என்று குறிப்பிடப்படுகிறது.

காசிம் ஆட்சியில் கல்வி பெரிதும் விரிவுபடுத்தப்பட்டது. கல்வித்துறைக்கான நிதி 1958ஆம் ஆண்டில் 13 மில்லியன் தினார்களிலிருந்து 1960இல் 24 மில்லியன் தினார்களாக உயர்த்தப்பட்டது. பள்ளிகளில் மாணவர் சேர்க்கை விகிதம் அதிகரித்தது. வீட்டுவசதி, சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளில் பெருமளவு முதலீடு செய்வதற்கும், அதே நேரத்தில் இராக்கின் விவசாயப் பொருளாதாரத்தை தொழில்மயமாக்கம் செய்வதற்காக மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் பொருளாதாரத் திட்டத்தை அறிமுகப்படுத்த 1959-1961 ஆண்டுகளில் பெருமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன; இந்தச் சீர்திருத்தங்கள் காசிம் கொல்லப்பட்டதால் அரைகுறையாக நிறுத்தப்பட்டு விட்டன.

காசிம் இராக்கின் எண்ணெய் வளத்தை நாட்டுடைமையாக்க எல்லா முயற்சிகளும் மேற்கொண்டார். வெளிநாட்டின் பிடியிலிருந்த இராக்கின் பல எண்ணெய் வயல்களைப் புதிதாக உருவாக்கப்பட்ட இராக் தேசிய எண்ணெய் நிறுவனத்தின் பெயரில் மாற்ற பொதுச்சட்டம் 80 கொண்டுவரப்பட்டது. செப்டம்பர் 1960 இல் ஆங்கிலோ-அமெரிக்க இராக் பெட்ரோலிய நிறுவனத்தின் 99.5% பங்குகளை இராக்கிய அரசு கைப்பற்றியது. 1961இல் இராக்கிய

பெட்ரோலிய நிறுவனத்தின் கிட்டத்தட்ட 400,000 கிமீ எண்ணெய் வயல்களை விரிவாக்கம் செய்வதற்கான அனைத்து உரிமைக்கான கோரிக்கைகளை நிராகரித்தது. ஒரு புதிய இராக்கிய தேசிய எண்ணெய்க் கழகத்தை அமைப்பதற்கான வரைவுச் சட்டம் அக்டோபர் 1962 இல் வெளியிடப்பட்டது, ஆனால் பிப்ரவரி 1963 இல் காசிமை அகற்றிய ஆட்சி மாற்றத்தின் போது நடைமுறைக்கு வரவில்லை

1959 மொசூல் கலகத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிரான மரண தண்டனைகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கினார். அவரைத் தூக்கியெறியப் பல்வேறு சமயங்களில் முயன்றவர்களிடம் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டார். காசிமின் கடுமையான விமர்சகர்களால் கூட அவரை ஊழல்வாதியாக ஒரு போதும் சித்திரிக்க முடியாத அளவிற்கு நேர்மையானவராகவும் இருந்தார்.

**நிலச் சீர்திருத்தம்:**

புரட்சியானது இராக்கிய விவசாயத் துறையில் பெரும் மாற்றங்களைக் கொண்டுவந்தது. சீர்திருத்தங்களால் கிராமப்புற இராக்கின் பழைய நிலப்பிரபுத்துவக் கட்டமைப்பை அகற்றினர். எடுத்துக்காட்டாக, சாகுபடியாளர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் சட்டம் மற்றும் பழங்குடியினர் வழக்காடு நெறிகள் மறுசீரமைக்கப்பட்டன. இது இராக்கின் விவசாய மக்களுக்குப் பயனளித்தது. சட்டத்தின் சிறந்த செயல்முறையை உறுதி செய்தது. விவசாயச் சீர்திருத்தச் சட்டத்தால் (30 செப்டம்பர் 1958) பெரிய அளவில் நில உரிமை மறுபகிர்வு செய்யப்பட்டது. விவசாயிகளிடையே நிலம் சமமாக விநியோகிக்கப்பட்டது. மேலும் நில வாடகைக்கு உச்சவரம்பு விதிக்கப்பட்டது. புதிய வாடகைச் சட்டங்களின் காரணமாக, விவசாயிகளால் பயிர் விளைச்சலில் 55% முதல் 70% வரை பெறமுடிந்தது.. நிலச்சீர்திருத்தம் சக்திவாய்ந்த நில உரிமையாளர்களின் அரசியல் செல்வாக்கைக் குறைப்பதில் வெற்றி கண்டது.

**பெண் விடுதலை:**

இராக்கில் பெண்களுக்கு அதிக சமத்துவத்தை ஏற்படுத்த காசிம் முயன்றார். இராக்கின் சிவில் சமூகத்தில் பெண்களைச் சேர்க்கவும் பாலின சமத்துவத்தை ஊக்குவிக்கவும் முக்கியத்துவம் அளித்தார், கல்வி மற்றும் அரசியல் பங்கேற்பு மூலம் அதிகாரம் பெற பெண்களை ஊக்குவித்தார். சமுதாயத்தில் பெண்களின் பங்கேற்பை ஊக்குவிப்பதற்காக காசிம் அரசியலமைப்பை மறுசீரமைத்தார்..

டிசம்பர் 1959இல் அவர் தனி நபர் தகுநிலை நெறிகளில் பெண்களுக்குச் சம உரிமை அளிக்கும் வகையில் திருத்தம் அறிவித்தார். குறிப்பாகக் குடும்ப உறவுகளை ஒழுங்குபடுத்தினார். பலதார

மணம் செய்வதை சட்டவிரோதமாக்கினார். மேலும் திருமணத்திற்கான குறைந்தபட்ச வயது 18ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது. பெண்கள் நியாயமற்ற மணமுறிவிலிருந்து பாதுகாக்கப்பட்டனர். மிகவும் புரட்சிகரச் சீர்திருத்தமாக அரசியலமைப்புச் சட்டத்தின் 74ஆவது பிரிவு பெண்களுக்குப் பரம்பரைச் சொத்துகளில் சம உரிமைகள் பெற வழிவகுத்தது. சன்னி, ஷியா பிரிவினர் பெரும் எதிர்ப்புத் தெரிவித்ததால், இந்தச் சட்டங்கள் காசிமிற்குப் பிறகு நீடிக்கவில்லை.

**வெளியுறவுக் கொள்கைகள்:**

சுதந்திரத்திற்குப் பிறகு காசிம் சோவியத் யூனியனுடன் நெருக்கமான உறவுகளை வளர்த்துக் கொண்டார், சோவியத் யூனியனுடன் விரிவான பொருளாதார ஒப்பந்தங்கள் செய்து கொண்டார். பாக்தாத் ஒப்பந்தத்திலிருந்து இராக்கை வெளியேற்றினார். இராக்கின் வெளியுறவுக் கொள்கையை மேற்கு நாடுகளின் ஆதிக்கத்திலிருந்து நீக்கினார். இராக் இங்கிலாந்துடன் மேற்கொண்ட பாதுகாப்பு மற்றும் இருதரப்பு உறவு ஒப்பந்தத்தையும் ரத்து செய்தார். இராணுவம், ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக 1954, 1955ஆம் ஆண்டுகளில் முடியாட்சி கையெழுத்திட்ட அமெரிக்காவுடனான ஒப்பந்தத்திலிருந்து இராக்கை விலக்கிக் கொண்டார். பிரான்சுக்கும் இஸ்ரேலுக்கும் எதிரான அல்ஜீரிய, பாலஸ்தீனியப் போராட்டங்களை காசிம் ஆதரித்தார்.

பாக்தாத்தில் ஒபெக் (பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகள் அமைப்பு) நிறுவப்படுவதற்கான அடித்தளத்தையும் காசிம் அரசு அமைத்துக் கொடுத்தது. 1960: ஈரான், இராக், குவைத், சவுதி அரேபியா, வெனிசுலா ஆகிய நாடுகளின் மாநாட்டில் ஒபெக் நிறுவப்பட்டது.

1959ஆம் ஆண்டில் காசிம் "ஈரானின் குஜெஸ்தான் பகுதி அரபு மொழி பேசும் சிறுபான்மையினரின் தாயகமாக இருந்தது, அது இராக்கிற்கு சொந்தமானது" என உரிமை கோரினார்.,அது போல் குவைத்திலும் இராக்கிற்கு உரிமை கோரினார்.

(தொடரும்)

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

# திருக்குறள் கட்டமைக்கும் தமிழ்த் தேச அரசு

(*திருக்குறள்- தமிழ்த் தேசிய அரசியல் நூல்* என்ற நூலிலிருந்து)

-- பேராசிரியர் மருதமுத்து --

வேத-வர்ணக் கருத்தியலையும், அறிவியலையும், அரசியலையும் எண்ணற்ற நூல்கள் மூலமும் சடங்குகள், குறியீடுகள் மூலமும் அரசரிடமும், மக்களிடமும் கொண்டுசெல்லக்

கட்டுக்கோப்பான ஒரு அறிவுச் சாதியார் ஒற்றுமையுடன் பெருமுயற்சி செய்து கொண்டிருந்த காலத்தில் திருவள்ளுவர் தம் தத்துவப் புரட்சியை நடத்தினார்.தமிழ்மொழியை நம்பி, தமிழ் அரசரையும் மக்களையும் நம்பி. பல முனைகளில் நடத்தப்பட்ட தாக்குதலை ஒரே நூல்மூலம் எதிர்கொள்ள முடிவெடுத்து எழுதியதால்தான் திருக்குறளின் அமைப்பும் யாப்பும் தனிச் சிறப்பான தன்மையோடு உள்ளன எனக் கருதுகிறேன்.

அதன்மேலோட்டமான எளிமை காரணமாகவும், சுருங்கிய வடிவம் காரணமாகவும் அதன் முழு ஆழத்துக்கும் செல்வது கடினமானதாக அமைகிறது.

இல்லையேல் பரிமேலழகர் உரைதான் சிறந்தது எனும் கருத்து வலிமை பெற்றிருக்க வாய்ப்பில்லை.

திருக்குறள் படிப்பவர்க்குத் தக்கவாறு பொருள் தரக்கூடியது என்ற தவறான கருத்து பலரைக் கவர்ந்துள்ளது. அதிலும் பின்-நவீனம் போன்ற போலித் தத்துவப் பார்வைகள் மேலோங்கி விட்ட இன்றைய அகவயமான (subjectivist) சிந்தனைச் சூழலில் திருக்குறளை வைத்து ஒரு “சொல்லாடல்” விளையாட்டுப் போட்டி நடத்துவதால் சிலருக்கு சுகம் உண்டாகிறது.

இவர்களை நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை. ஆனால் அறிஞர் ச.தண்டபாணி தேசிகர் அவர்கள் கூட திருவள்ளுவர் அவ்வப்போது பல்வேறு விடயங்கள் பற்றி எழுதியவற்றைப் பல வண்ண மலர்களாகப் படைத்துத் தொகுத்தாரோ எனத் தமது ஐயப்பாட்டை வெளியிட்டுள்ளார். இத்தகு கருத்துகளைப் பார்க்கையில் இன்றுவரை நிகழ்ந்துள்ள குறள் ஆய்வின் போதாமை வெளிப்படுகிறது.

வேறுபட்ட பல துறைகளை ஓரளவு பயினறதாலும், உலக அளவில் அண்மைக்கால ஆய்வுகளை ஒருவாறு தேடி அறிந்ததாலும், இவற்றுடன் கூட எந்தச் சமூக மேம்பாட்டுக்காகவும், உய்வுக்காகவும் வள்ளுவப் பேராசான் போர் செய்தாரோ அதே தமிழ்ச் சமூகத்தின் அடிநிலை மக்கள் மத்தியில் நெடுங்காலமாகத் தொண்டாற்றிப் போராடியும் வந்ததால்தான் நான் வள்ளுவத்தின் ஆழம் பற்றி எழுதத் துணிந்தேன். இதில் அண்ணல் அம்பேத்கரை எனது முன்னோடியாகக் கொண்டேன்.

இனி திருக்குறள் அமைப்பை ஊன்றிப் பார்ப்போம்.

திருவள்ளுவரின் மெய்யியல் குறித்த கொள்கை துறவறவியலின் இறுதிப் பகுதியில்

அமைந்துள்ளது. இது குறித்த விளக்கத்தை நான் முன்னம் ஒரு கட்டுரையில் தந்துள்ளேன். (மருதமுத்து, “திருக்குறளில் சமணமா?”, கட்டுரை, “ கணையாழி” ஏடு, ஆகஸ்ட், 1996; மறுவெளியீடு: “வள்ளுவம்”, ஆய்வேடு, மே-சூன்,1999)

ஈழத் தமிழரும் பேரறிஞருமான பெருமதிப்பிற்குரிய பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை (சமயத்துறை, அரிசோனா பல்கலைக் கழகம், அமெரிக்கா) அவர்களும் இதே கருத்தை வெளியிட்டுள்ளார். (ஆ. வேலுபிள்ளை, “தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்”, பாரி., மூன்றாம் பதிப்பு, 1985, பக்கங்கள்: 62,63). இவரும் இந்த நூற்பகுதியில் தான் வள்ளுவரின் பெய்யியல் கோட்பாடுகள் அமைந்துள்ளன என்கிறார்.

ஆனால் அறிஞர் வேலுப்பிள்ளை திருவள்ளுவரின் மெய்யியலில் சமண தத்துவத்தைக் காண்கிறார்.இது முற்றிலும் தவறாகும்.வினை நீங்குதலே சமணத்தின் இறுதியான மெய்யியல் இலக்கு. புத்தரின் இலக்கோ அவா அறுத்தல் என்பது.அத்துடன் “மனத்துக்கண் மாசிலன் ஆகுதல்” என்பதும் புத்தரால் வலியுறுத்தப் பட்ட அடிப்படைத் தத்துவம்.ஆனால் சமணர்க்கு இவ்வாறு மனத் தூய்மை மட்டும் போதவே போதாது.வினைத் தூய்மையே தலையாயது. செய்கையில் குறைபாடுகள் வரும், செய்பவனது நோக்கம் மாசற்றதாக இருப்பதுதான் முக்கியம் என்ற புத்தரின் நிலைப்பாடு இல்வாழ்வார்க்கு ஏற்ற தத்துவம், (importance of integration). மகாவீரர் ஒவ்வொரு செய்கையிலும் இம்சை தவிர்க்கப் படவேண்டும் என்று தீவிரமாக வலியுறுத்தியவர்.எனவே சமணத்தில் துறவோர் (படிமையோர்) மட்டுமே ஈடு இணையற்றவர்கள்.இது இல்வாழ்வாரை வெறும் பக்தி நிலைக்குத் தள்ளுவதாகும். “வினைநீக்கமா, அவா அறுத்தலா?” என்ற கேள்வி மூலம்தான் சமணர் வழியா, புத்தர் வழியா என்று தெளிய முடியும்.

திருவள்ளுவரின் நிலைப்பாடு என்ன?

அறத்துப்பாலில் துறவறவியலின் இறிதிப் பகுதி நான்கு அதிகாரங்களைக் கொண்டதாக அமைக்கப் பட்டுள்ளது:“நிலையாமை”, “துறவு”,”மெய்யுணர்தல்”, “அவா அறுத்தல்” ஆகிய நான்கும் உள்ளார்ந்த தொடர்புகளோடு, தொடர்ச்சியாக ஒரு தத்துவ முழுமையைத் தருகின்றன.

“ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்”,

என இந்த மெய்யியல் பகுதி முடிகிறது. (இதற்கடுத்த ஊழ் அதிகாரம் உலகை இயக்கும் பொது விதி பற்றியதாகத் தனி நிலையில் வைக்கப்பட்டுள்ளது.)ஆக பார்ப்பனிய உரையாசிரியர்

பரிமேலழகரும், சைவர்களும், சமணர்களும் உரிமை கொண்டாடுவது போல் திருவள்ளுவர் இந்தப் பிரிவினர் எவருடைய சமய தத்துவத்தையும் ஏற்றவர் அல்ல."சரி, யாருக்கும் வேண்டாம், பொதுவான தத்துவம் படைத்தார் என்று வைத்துக் கொள்வோம்", என்று பேசும் சிலரும் தந்திரமாக புத்தரை விலக்கி வைத்துவிட்டால் போதும் என்று நினைத்தே அவ்வாறு பேசுகிறார்கள்.ஏன் எனில் புத்தரின் வர்ண-சாதிமறுப்புக் கொள்கையை அன்னார் கடுமையாக வெறுக்கிறார்கள்.இப்படி வெறுப்போருள் பார்ப்பார் அல்லாத மேல்சாதியினரும் அடங்குவர். ஆனால் திருக்குறளில் மெய்யியல் பகுதி மிக வெளிப்படையாகவும் தெளிவாகவும் உள்ளது. நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவா அறுத்தல் ஆகிய நான்கையும் புத்தரின் வாழ்க்கையின் முக்கியமான நான்கு கட்டங்களாகக் காணமுடியும். இளவரசன் சித்தார்த்தன் நிலையாமைத் துன்பத்தைக் கண்டான். அதற்குக் காரணம் என்ன, தீர்க்க வழி உண்டா என்ற கேள்விகளுக்கு விடை காணத் துறவு பூண்டான். தேடினான். சுய ஒறுத்தலும், தீவிரமான மெய் வருத்தலும் பயன் தரவில்லை. சமணர் வழியை ஒதுக்கினான்.அறிவுவழியில் ஆராய்ந்து மெய்யுணர்வு எய்தினான். காமம், வெகுளி, மயக்கம் எனும் மூன்றையும் விட்டு விடுதலை பெற்றான்.

தன் விடுதலையோடு நிறுத்திக் கொள்பவன் சுய நலத்தை உண்மையில் துறந்தவனாக இருக்கமுடியாது என்று கண்டு, பிறர் நலம்பெற உழைப்பதே கடமை எனக் கொண்டு, தான் அறிந்த பேருண்மைகளை மறையாக மறைத்து வைக்காமல் அவற்றை அனைத்து உயிர்களும் அறிந்து நன்மை பெற வேண்டிக் கால மெல்லாம் பாடுபட்டான்.

இதுதான் திருக்குறள் காட்டும் மெய்யியல்.பிட்சுக்களிடமும் பௌத்த சங்கங்களிடமும் தன் சிந்தனையை ஒப்படைக்காதவரான திருவள்ளுவர் நேரடியாக புத்தரிடமிருந்தே இந்த அடிப்படை மெய்யியலையும் அறிவியலையும் பெற்றுள்ளார்.

அக்காலத்தில், புத்தரைப் பின்பற்றியோர் பல்வேறு குழுக்களாகத் தமக்குள் பிரிந்து கிடந்தார்கள் என்றும், அந்தக் குழுக்களுக்குள் பிட்சுகளுக்குக் கொடுக்கவேண்டிய இடம் குறித்தும், இல்லறவாழ்வின் முக்கியத்துவம் குறித்தும் கடுமையான முரண்பாடுகள் இருந்தன என்றும் வரலாற்று ஆதாரங்கள் கூறுகின்றன. திருவள்ளூர் இந்தக் குழுக்களின் உள்முரண்பாடுகளில் சிக்கிக் கொள்ள விரும்பவில்லை என்பதை அவரது நூல் வெளிப்படுத்துகிறது. புத்தர் கோரியபடி சொந்த அறிவைக்கொண்டு அவரது போதனைகளை சோதித்து அறிய முற்பட்ட திருவள்ளுவர் போன்ற பெரியோர் அன்று ஓரிருவர் இருந்துள்ளனர். நான் முன்பே குறிப்பிட்டது போல பேரரசன் அசோகன் கூட அப்படித்தான் புத்தர் கொள்கைகளை அணுகினான். அவனது

அரசின் பொதுதர்மப் பார்வை பிட்சுக்களால் வடிவமைக்கப் பட்டதல்ல. அப்படி அவர்களுக்குக் கீழ்ப் பட்டிருந்தால் அவர்களில் ஒருபிரிவினர் தீவிர நிலை எடுத்து பிற மதங்களை ஒடுக்குமாறு அந்தப் பேரரசனைத் தூண்டியிருப்பர்–இலங்கை பிட்சுக்கள் பலரைப்போல.

ஆக, “யான், எனது” என்னும் செருக்கை அறுக்கும் நிலையாமைத் தத்துவம், முற்றுண்மை தேட முயலும் “ முயல்வாரின்” துறவு, முயன்று எய்தும் மெய்யறிவு நிலை,அந்த அறிவினால் உந்தப்பட்டு அவா நீக்கல்--- இது தான் இளவரசன் சித்தார்த்தன் புத்தனான மார்க்கம். இது தான் திருக்குறளின் மெய்யறிவுக் கொள்கையும்.

துறவறவியலில் தாம் விளக்கும் கொள்கைக்கு ஒரு மனித உருவம் தந்து தமது நூலின் முதல் அதிகாரத்தில் வைத்துள்ளார் திருவள்ளுவர். அந்த மனிதனைக் கடவு நிலையில் கடவுளாகவும் காட்டிப் போற்றுகிறார்.அவனை அரசும் மக்களும் போற்றுவதோடு “வழிபடவும்” வேண்டும் என்கிறார்.வழிபடுதல் என்பதும் வழிப் படுதல் என்பதும் ஒரே பொருள் கொண்டிருப்பதை தமிழ் லெக்சிகன் மூலம் அறியலாம்.

ஆக திருவள்ளுவர் காட்டும் கடவுள் ஆதி பகவனாம் புத்தன் என்று அறிகிறோம்.தமிழ்க்குடிகள், குறிப்பாகத் தமிழக் அரசர் அந்த அறிவனின் அறிவுவழிச் சென்று பொது அறத்தை நாட வேண்டும் என்பது அவரது போதனை.

வள்ளுவர் பிரானின் இந்த நிலைப்பாடு அன்றைய தமிழகத்தை ஆரம்பத்திலேயே பகைவர் நாடாகக் கருதிய சிங்கள தேரவாத பிட்சு சங்கத்தார்க்கு முற்றிலும் எதிரானதாகும். திருவள்ளுவர் காலத் தமிழகத்தில் இலங்கையின் தென்புறத்தில் சிங்கள சிற்றரசர்கள் பிட்சுக்களின் முழு ஆதரவோடு புதிய அரசு ஒன்றை உருவாக்கி, விரிவாக்கம் செய்ய கடும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். இதை ஒரு கட்டத்தில் சோழமன்னர்கள் வன்மையாக எதிர்த்து முறியடித்தனர் என்பதையெல்லாம் சிங்கள பௌத்த நூல் மகாவம்சத்தின் மூலம் அறியலாகும்.

வடஇந்தியாவில் சாம்ராச்சியம் உருவாகிவிட்ட காலகட்டத்தில், தமிழகத்துக்குத் தென்புறம் இலங்கையில் அனுராதபுரத்தைத் தலைநகராகக்கொண்டு இன்றைய ஈழம் உள்ளிட்ட பெரு நாட்டை சோழவம்சத்தினர் ஆண்டுவந்தனர்.அதற்குச் சிறிதுகாலம் முன்பாக வடநாட்டிலிருந்து புதிதாகச் சென்று இலங்கையின் சிலபகுதிகளில் குடியேறியிருந்த ஆரியச் சிறுபான்மையினர் சோழர்களை வென்று தங்கள் அரசை அனுராதபுரத்தில் நிறுவப் பெருமுயற்சி செய்த காலம் அது. அப்படி ஒரு சிங்கள அரசு உருவாவதைத் தமிழ்நாட்டில் ஆண்டிருந்த சோழர்கள், பாண்டியர்கள் இருவருமே பெரும் அபாயமாகக் கணித்தனர்.ஆனால் இருவரும் ஒருமனதாகத் தொடர்ந்து

செயல்படவில்லை.

மூவேந்தரும் இணைந்த ஒரே தமிழக அரசு என்று ஏற்பட்டிருந்தால் மட்டுமே சிங்களர் வலிமையைக் கட்டுப்படுத்தியிருக்க முடியும்.

இத்தகைய பகைச் சூழல் காரணமாக புத்தர் பற்றிய தமிழகம் வாழ் பௌத்தரின் பார்வைக்கும் சிங்கள அரசை உருவாக்க முயற்சி செய்த பௌத்த சங்கத்தார் பார்வைக்கும் கடும் முரண்பாடு நிலவியது. தமிழகத்தின் புத்தர்கொள்கையினர் புதுச்சேரிப்பகுதி, பூம்புகார், நாகப்பட்டினம் போன்ற சில துறைமுகம் சார்ந்த பகுதிகளில் மட்டுமே இருந்தனர் எனலாம்.இவர்களின் தத்துவம் சிங்கள பிட்சு சங்கத்தினரின் நிலைப்பாட்டுடன் முரண்பட்டதாக இருந்திருக்கிறது. சிங்கள தேரவாத பிட்சுக்கள் இந்திய பிராமணர் போலவே அரசைத் தங்கள் இரும்புப் பிடிக்குள் வைத்திருக்க ஆரம்பமுதல் பாடுபட்டனர்.தேரவாத பௌத்தம் என்பது மதவாத புரோகித ஆதிக்கத்தை சமூகத்திலும், அரசிலும் நிறுவும் நோக்கம் கொண்டது. வட இந்தியாவில் புத்தரின் மரணத்துக்குப் பிறகு புத்த இயக்கத்தினர் மத்தியில் முதல் பெரும் பிளவு ஏற்பட்ட போதுதான் இந்த தேரவாதம்(ஸ்தவிர வாதம்) உருவானது. அசோகருக்கு முன்பே இந்தப் பிளவு தோன்றிவிட்டது. புத்த இயக்கத்தார் நடத்திய மாநாடு ஒன்றில் பெரும்பான்மையானவர்களின் முடிவுக்கு எதிராக சிறுபிரிவினரான பிட்சுக்கள் தங்கள் சிறப்பு அதிகாரத்தை நிறுவும் நோக்கத்தில் மார்க்கவிதிகளை இறுக்கமாக மாற்ற முனைந்தபோது இல்வாழ்வார் அதிக எண்ணிக்கையில் இடம் பெற்றிருந்த அன்றைய புத்த சங்கத்தில் இந்த புரோகிதத் தனமான சதி முறியடிக்கப்பட்டது. அந்த மாநாட்டுக்கு வந்திருந்த ஏராளமான இல்வாழ்வினர் துறவுகளின் ஆதிக்க முயற்சியை முளையில் கிள்ளினர்.இதனால் புத்த சங்கம் இரண்டாக உடைந்தது. பெரும்பான்மையினர் தங்கள் அமைப்பை மகாசங்கிக அமைப்பு ( பெரும்பான்மையினர்) என்று அறிவித்தனர். தம்மை அடக்கியாள முயன்ற தேரவாதி பிட்சுக்களை இவர்கள் ஈனயானிகள் (சிறிய மார்க்கம்) என அழைக்கலாயினர். (இந்த இயக்கப் பிளவும் பெயர்களும் ரஷ்யப் புரட்சி வரலாற்றில் போல்ஷ்விக் மென்ஷ்விக் பிளவை நினைவுபடுத்துகின்றன.)

மகாசங்கக் கொள்கைப்படி புத்தர் இறைநிலையில் வைத்துப் போற்றப்படலானார். அவர் மெய்யறிவு எய்திய ஒரு மனிதர் மட்டுமே என்று கூறிய தேரவாத பிட்சுக்களின் நிலைப்பாடு உண்மையில் பகுத்தறிவுக்கு அவர்கள் கொடுத்த முக்கியத்துவத்தால் அல்ல.மாறாக "புத்தரும் ஒரு மனிதர்தான். பிட்சுக்களாகிய எங்களை ஒத்தவர்தான்; பிட்சுக்களாகிய நாங்களும் புத்தர் போலவே அதி உன்னத நிலையை எய்தக் கூடியவர்களே; எனவே அரசும், இல்வாழ்வோரும் மற்றோரும் எங்களுக்கு முற்றிலும் கீழ்ப்பட்டு நடக்கவேண்டும்". என்று வலியுறுத்துவதே அந்தத்

தேரவாதிகளின் அரசியல் உள்நோக்கம்.

இதை உணர்ந்த மகாசங்கத்தவர்கள் புத்தரின் கடவு நிலையை–ஆதி பகவன் எனும் "தனக்குவமை இல்லாதான்" நிலையை–வலியுறுத்தினர்.

இதை மேலும் உறுதி செய்து தேரவாத பிட்சுக்களின் ஆதிக்கப் போக்கை அம்பலப்படுத்தவேண்டி இன்னொரு முக்கியக் கோட்பாட்டையும் மகாசங்கத்தவர் முன்வைத்தனர். இதன்படி புத்தர் காட்டிய வழியில் சென்று அவா அறுத்தல் எனும் இறுதி நிலை எய்தி அரஹந்த் (வடமொழியில், "அர்ஹத்" தமிழில் "அருகதர்">"ஆருகதர்") எனும் சிறப்புநிலை எய்திய பிட்சுக்கள்கூட குறைபாடு கொண்டவர்களாக இருத்தல் கூடும் என்று மகாசங்கத்தினர் வரையறுத்தனர். இந்த வரையறுப்பின் படி, தலைசிறந்த அரஹந்த நிலை எய்தினாலும் ஒரு பிட்சுவால் புத்தருக்கு இணையாக மாற முடியாது; ஒரு பிட்சு ஒருபோதும் கடவு நிலைக் கடவுள் இடத்தை அடையமுடியாது; ஆதி பகவனின் அடிசேர்ந்தார் என்று தான் ஆகமுடியும். இப்படி பிட்சுவின் இடத்தை இறைக்குக் கீழே வைப்பதன் மூலம், இல்வாழ்வாரும் அரசும் கூட இறைவன் பார்வையில் பிட்சுவுக்கு சமம் என்ற கொள்கையை மகாசங்கிக இயக்கத்தார் நிலைநாட்டினர். ("Six World Faiths"–ed. W. Owen Cole, Continuum Publishers, 2004; " Buddhist Sects in India"- by Nalinaksha Dutt, Motilal Banarsidass, 1978; " Buddhist sects and sectarianism"-by Bibhuti Baruah, Sarup&Sons, 2000; "Mahasanghika" at Britannica.com & Wikipedia)

இந்த மகாசங்கிகக் கடவுட்கொள்கையை சிங்கள தேரவாத புத்த பிட்சுக்கள் தீவிரமாக எதிர்த்துப் போராடினர்.

திருவள்ளுவர் இந்த மகாசங்கிகக் கொள்கையைத்தான் அரசுக்கும், இல்லற வாழ்வுக்கும், குடிகளுக்கும், ஒட்டுமொத்த தமிச்சமூகத்துக்கும் அவசியமானது என்று கருதி அதனையே திருக்குறளின் கடவுள்வாழ்த்து அதிகாரத்திலும், நீத்தார் பெருமையிலும் போதித்துள்ளார். இவ்வாறு புத்தர் மட்டுமே தனக்குவமையில்லாத தேவன் என்று போதித்து சிங்கள தேரவாதச் செருக்கை அடக்குகிறார் வள்ளுவர்பிரான்.அடுத்து அவர்களின் ஆதிக்கப் போக்கை அடக்கும் நோக்கம் அவருக்கு இருந்ததை நீத்தார் பெருமை என்ற அதிகாரத்திலும் காணமுடிகிறது. இதன் முதலாவது குறட்பாவிலேயே இந்த அதிகாரம் யாரை குறித்தது என்பது தெளிவாக்கப் பட்டுள்ளது.

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு."

நூல்சிறப்பு வேண்டுவோர் ஒழுக்கத்து நீத்தாரின் பெருமையை முதற்கண் போற்றவேண்டும்

என்பது இதன் பொருள்.பிற்பாடு துறவியலில் "தவம்" என்ற தலைப்பில் பொதுப்படையாக சிறப்பிக்கப் படும் சமணர்,ஆசீவகர், பார்ப்பனமுனிவர் போன்ற பல்வகைத் துறவிகள் பற்றியதல்ல இந்த "நீத்தார் பெருமை".

இந்த இரண்டாம் அதிகாரத்தின் முதல் குறட்பாவில் குறிப்பிடப்படும் ஒழுக்கத்து நீத்தார் யார் என்பதற்குரிய குறிப்பு நூலின் முதல் அதிகாரமாகிய கடவுள் வாழ்த்திலேயே உள்ளது:--

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடு வாழ்வார்."

புலன் வென்று முற்றறிவாளனாக, இறையாக உள்ள பகவனின் ஒழுக்க நெறியில் செல்வோர் நீடு வாழ்வார்.எனவே கடவுள் வாழ்த்தில் போற்றப்படும் கடவுளின் நெறியே திருவள்ளுவர் போற்றும் ஒழுக்கநெறி.அத்தகைய நெறி நிற்கும் துறவோருள் சிறந்தோர் நீத்தார் அல்லது அரஹந்தர் இது புத்தர் இயக்கத்தோர் அனைவரும் பொதுவாக நம்பிய கோட்பாடு வள்ளுவர் பிரானுக்கும் ஏற்புடையது.ஆனால் சிங்கள தேரவாத பிட்சு சங்கத்தார் கொள்கைக்கு மாறாக திருவள்ளுவர் கொள்கை அமைந்தது. அவர் நம்பிக்கைப்படி அரஹதர் என்பார் எவரும் புத்தருக்கு நிகரில்லை, அடுத்த நிலையிலும் இல்லை அவர்களிடமும் குறை இருக்கும். அவர்கள் இறை நிலை அடைந்தோர் இல்லை; அடையவும் முடியாது.அரஹதரை தலைமையிடத்தில் வைக்க மறுக்கும் இந்த மகாசங்கிகக் கோட்பாட்டை வள்ளுவர்பிரான் தெளிவாக வலியுறுத்தும் குறட்பா ஒன்று அவரால் திட்டமிட்டு இயற்றப் பட்டுள்ளது. அது இதுவே:

"குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது."

அதாவது நீத்தார் நிலை எய்திய மேம்பட்ட துறவோரிடமும் கணநேரமாவது வெகுளி தோன்றி மறையக்கூடும்.

கண நேரமேயானாலும் வெகுளி தீயதே.இதனை அடுத்த அதிகாரத்திலேயே (அறன் வலியுறுத்தல்) வலியுறுத்துகிறார்:" அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம்" என்றார் பெருமான். அவ்வாறு நீத்தார்க்கும் சிறிது வெகுளி தோன்றுமானால் அத்துடன் சிறிது அவாவும் பிறகுறைகளும்கூட விளையவே செய்யும். இது உட்கிடை. அதாவது நீத்தாரும் தவறிழைத்தல் உண்டு.

இப்படி நுட்பமாக ஒரு முக்கியக் கருத்தை முதலிலேயே அறிவித்துள்ளதற்கு திருவள்ளுவரின் அரசியல் நிலைப்பாடே காரணம்:--

புத்தரின் இடத்தை வேறு எவர்க்கும் கையளிக்க முடியாது. இறைவனின் பிரதிநிதியாக நீத்தார்

ஏக போக உரிமை கொண்டாட முடியாது. அவர்களும் இல்வாழ்வோர் போல பொதுவான அரசுக்குக் கீழடங்கி பொது ஒழுக்க நெறி நின்று நீடுவாழட்டும்.

இவ்வாறு, வள்ளுவரின் புத்தம் சிங்களபிட்சுக்களுக்கு முற்றிலும் எதிரானதாக உள்ளது. அவர்களின் அரசியல் மேலாதிக்க ஆசைக்கு எதிராக உள்ளது. புத்தரை முற்றாக அறிந்து தெளிந்து அவர் வழியில் உலகு செல்லுமாறு பொருள் கண்டு போதித்தவர் தமிழ் வள்ளுவரே. புத்தரை முற்றிலுமாகத் திரிபு செய்து பிட்சுக்களின் அரசியல் ஆதிக்கக் கருவியாக மாற்றி வெறும் பொம்மையாக்கியது தேரவாதமும் , சிறப்பாக சிங்கள பிட்சுக்களுமே.

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

சமந்தா

# வெனிசுலாவில் உலக ஏகாதிபத்திய எதிர்ப்புக்கூட்டமைப்பு:

வெனிசுலாவின் தலைநகர் கராகஸில் சென்ற ஜனவரி 22 முதல் 24 வரை நடைபெற்ற ஏகாதிபத்தியத்திற்கு எதிரான உலகக் கூட்டமைப்பில் ஐந்து கண்டங்களைச் சேர்ந்த சமூக, அரசியல் இயக்கங்களின் 403 பிரதிநிதிகளும், 2096 தேசியப் பிரதிநிதிகளும் ஒன்றுகூடினர். வெனிசுலாவின் ஆளும் ஐக்கிய சோசலிசக் கட்சியால் (பி.எஸ்.யூ.வி) இந்தக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. கடந்த ஆண்டு ஜூலை மாதம் வெனிசுலாவின் கராகஸில் நடைபெற்ற XXV சாவ் பாலோ மன்றத்தில் எட்டப்பட்ட ஒப்பந்தங்களின் ஒரு பகுதியாக இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தத் தென் அமெரிக்க நாட்டின் அனுபவங்களை மற்ற நாடுகளுக்கும் கொண்டு சேர்ப்பதற்கும் மேலாக, ஏகாதிபத்திய எதிர்ப்பிற்கான ஒரு சர்வதேச ஒருங்கிணைப்பை உருவாக்குவதற்காகவே இந்த ஏற்பாடு.

கூட்டமைப்பின் பங்கேற்பாளர்கள், “வாழ்க்கை, இறையாண்மை மற்றும் அமைதிக்காக” என்ற முழக்கத்தின் கீழ் ஒன்றுசேர்ந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகளும் அதன் நட்பு நாடுகளும் ஊக்குவிக்கும் புதிய தாராளமய ஏகாதிபத்தியக் கொள்கைகளுக்குக் கண்டனம் தெரிவித்தனர் “அமெரிக்காவின் இராணுவ ஆக்கிரமிப்புக் கொள்கையால் பூமியின் அமைதி கடுமையாக அச்சுறுத்தப்படுகிறது” என்ற இறுதி அறிவிப்பிற்கு ஒருமனதாக ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தில் தங்கள் கடப்பாட்டைப் பங்கேற்பாளர்கள் மீண்டும் உறுதிப்படுத்தினர். தங்களது பல்வேறு போராட்டங்களையும் ஒரு வலிமையான, தடுக்கவியலா ஆற்றலாக ஒன்றிணைக்கத் தேவையான அனைத்து ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளையும்

மேற்கொள்வதாகவும் வாக்களித்தனர்.

வெனிசுலாவின் அதிபர் நிகோலஸ் மதுரோ உரையாற்றுகையில், அமெரிக்கப் பேரரசிலிருந்து வரும் அச்சுறுத்தல்களுக்கு மேலாக அதன் சந்தைப் பொருளாதார மேலாதிக்க வாழ்வு முறையில் நெறியியல் நெருக்கடி உருவாகி உள்ளது என்றார்; அதில் நுகர்வுக் கலாசாரத்தைத் திணிப்பதற்காகத் தேசியக் கலாசாரங்கள் மற்றும் மனித விழுமியங்கள் புதைக்கப்படுகின்றன என்றார். மனித மதிப்புகளுக்கு எதிரான முதலாளித்துவத்தின் தனி நபர் வழிபாட்டு முறை உழைக்கும் மக்களின் வாழ்நிலை நெருக்கடியை மிகவும் மோசமாக்குகிறது. ஏகாதிபத்தியம் நெருக்கடியில் உள்ளதாகையால் அது மேலும் ஆக்ரோஷமானதாகவும், ஆபத்தானதாகவும் அழிவுகரமானதாகவும் உள்ளது என்று உரையாற்றினார்.கலாச்சார மேலாதிக்கத் தொழில்துறை, வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் (நேட்டோ) இராணுவச் செயல்பாடுகள் மற்றும் 21ஆம் நூற்றாண்டின் பொலிவரியன் சோசலிசம் பற்றியும் போராளிகள் விவாதம் செய்தனர். இப்போதைய பொருளாதார மாதிரிக்கு மாற்றாக சர்வதேச அமைப்பை ஏற்படுத்துவது குறித்தும் மூன்று நாட்கள் விவாதித்தனர்.

ஏகாதிபத்திய எதிர்ப்புத் தாக்குதலின் மையப் பிரச்சினை பற்றிய விவாதத்திற்கு அப்பால்,: பெண்கள், கறுப்பின மக்கள், பழங்குடி மக்கள், தொழிலாளர்கள், கம்யூன்கள், தகவல் தொடர்பு மற்றும் இளைஞர்கள் குறித்த துறைசார்ந்த பிரச்சினைகள் பற்றிய விவாதங்களும் நடந்தன தொழிற்சங்க விவாதத்தில், பங்கேற்பாளர்கள் உலகளாவிய ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்திற்கான ஒரு தளத்தை உருவாக்குவது குறித்தும், தொழிலாள வர்க்கத்தின் அரசியல் கல்வி அனுபவங்களைப் பரிமாறிக் கொள்வது குறித்தும் விவாதித்தனர். கம்யூன்கள் பற்றிய விவாதத்தில், வெனிசுலாவின் கம்யூன்கள் மற்றும் பிரேசிலின் நிலமற்ற கிராமப்புற தொழிலாளர் இயக்கத்தின் (எம்எஸ்டி) குடியேற்றங்கள் போன்ற, மக்களின் சக்தியைக் கட்டியெழுப்புவதற்கான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு இணைய நூலகத்தை உருவாக்குவதற்கான திட்டம் முன்மொழியப்பட்டது.

சென்ற வருடம் டிசம்பர் மாதம் தகவல் தொடர்புக் கூட்டமைப்பில் அதிபர் நிக்கோலஸ் மதுரோவால் அறிவிக்கப்பட்ட முன்னெடுக்கப்பான, தகவல்தொடர்புத் துறையில், மாற்றுத் தகவல்தொடர்புக்கான ஒரு சர்வதேச வலையமைப்பை உருவாக்குவது குறித்து முன்மொழியப்பட்டது, அதே போல் தகவல்தொடர்புப் பல்கலைக்கழகம் உருவாக்கி திறனாய்வு அரசியல் கல்விக்கான பாடத் திட்டங்களை ஏற்படுத்துவது குறித்தும் முன்மொழியப்பட்டது.

டெலிஷுயர் (ஊடகம்) மற்றும் ஹிஸ்பான் டிவி ஆகிய, சர்வதேச அளவில் அச்சுறுத்தல்களைப் பெற்ற இரண்டு நிலையங்களையும் ஆதரிக்க எடுக்கப்பட்ட நகர்வுகள் கூட்டமைப்பால் அங்கீகரிக்கப்பட்டன.

வெனிசுலாவின் விடுதலைக்கான கல்வி மற்றும் பணித்துறை துணை அமைச்சர் திவா குஸ்மான் தனது உரையின் போது "இந்த சந்திப்புகள் நமது புரட்சியை பகுப்பாய்வு செய்யும் எங்கள் கட்சியின், செயல்முறைகளாக முடிவடைகின்றன. உலகளாவிய போராட்ட சூழலில் வெனிசுலாவின் அனுபவத்தைப் பெறுவதற்கான வாய்ப்புகளை ஊக்குவிப்பது முக்கியம் என்று நாங்கள் நம்புகிறோம், ஏனென்றால் எங்கள் போராட்டம் மற்ற நாடுகளின் போராட்டங்களுக்கு வெனிசுலா தரும் பங்களிப்பாக இருக்கக்கூடும் ”என்று தெரிவித்தார். " வெனிசுலாவின் உதாரணத்தை உற்று நோக்கினால், அமெரிக்கப் பேரரசு செயல்படும் விதம் தெளிவாகத் தெரியும். இராணுவத் துறையில் சக்திவாய்ந்த ஒரு நாடு, வெனிசுலாவின் உள் விவகாரங்களில் தலையிவதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள், நமது பொருளாதாரத்தையும் நமது சமுதாயத்தையும் முற்றிலும் சீரழிக்கும் ஒரு திட்டமும் ஆர்வமும் அமெரிக்கா கொண்டுள்ளது. இது வெனிசுலாவில் மட்டுமல்ல, பொலிவியாவிலும் இவ்வாறே செயல்படுகிறார்கள், ஈக்வடாரில் சூழ்ச்சியானக் கையாளுகை மூலமாகவும், அர்ஜென்டினாவிலும் பிரேசிலிலும் திணிப்பு முறையின் மூலமும் இதைச் செய்தார்கள். அவர்கள் மன்ரோ கோட்பாட்டை புதுப்பிக்கிறார்கள், ”என்றும் குஸ்மான் இந்த நிகழ்வின் ஏகாதிபத்திய எதிர்ப்பு தன்மை பற்றியும் கருத்து தெரிவித்தார்.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆக்கிரோஷமான நடவடிக்கைகள் காரணமாக, இராஜதந்திரமுறையில் பதிலளிக்க அதிக வாய்ப்பில்லை ஏனெனில் ஜனநாயக அமைப்புகளும் சர்வதேச சட்டமும் பெரிய உலக சக்திகளால் முறியடிக்கப்பட்டன என்றும் துணை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அமெரிக்காவிலிருந்து சோசலிசம் மற்றும் விடுதலைக்கான கட்சியின் உறுப்பினரான எலிசபெத் பிர்ரீல் அவர்கள் "அமெரிக்க ஏகாதிபத்தியத்தைப் போன்ற பெரிய ஒரு அரக்கனை தோற்கடிக்க, நாம் அனைத்தையும் செய்ய வேண்டியது அவசியம். அதோடு, நாம் இங்கே பார்த்தபடி ஒற்றுமையுடனும் செயல்படவேண்டும் அமெரிக்காவில் நாம் சோசலிசத்தை அடைந்தால், இது வரை இருந்து வந்ததிலே மிகக் கொடூரமான இந்த ஏகாதிபத்தியத்திலிருந்து உலகத்தை நாம் விடுவிக்க முடியும் என்பதை நான் அறிவேன்” என்று .அறிவித்தார்.

பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகள் சார்பில் பேசிய தோழர் ஜொடி ஏகாதிபத்தியத்தை எப்படிஅழிக்க வேண்டுமென்பதை லெனினிடம் இருந்து கற்றுக்கொள்வோம் என்று உரையாற்றினார்.

வெனிசுலாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் தோழர் ஜார்ஜ் அரீஸாவின் ஆற்றல் மிக்க

**தொடக்க உரையின் சாரம்:**

**உன் எதிரியை தெரிந்துக்கொள்:**

தனது கருத்துக்களை அறிமுகப்படுத்திய அமைச்சர் அரீஸா, பெர்லின் சுவர் இடிந்து விழுந்தபோது லத்தீன் அமெரிக்காவின் மக்கள் உணர்ந்த நம்பிக்கையற்ற தன்மையைப் பற்றியும், வரலாற்றின் முடிவாக அதை ஏகாதிபத்திய சித்தாந்தவாதிகள் 'உச்சரித்ததைப் பற்றியும் கூறினார்.. 'ஏகாதிபத்தியம்' என்ற சொல்லைப் பற்றி பொதுவாக, குறிப்பாக இளைஞர்களுக்கு,எந்தப் புரிதலும் இல்லை, இச்சொல் 'வயதான, தாடிவைத்த கம்யூனிஸ்டுகளால்' மட்டுமே' பிரத்தியேகமாகப் பயன்படுத்தப்படுவதாகத் அவர்களுக்குத் தோன்றியது.. இளைஞர் கூட்டம் இதை மூத்த மார்க்சிஸ்டுகளின் 'வரட்டுவாதம்' எனக் கருதி அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள மறுத்து நிராகரித்தனர்.

போராட்டம் நிறைந்த இந்த காலகட்டத்தில் எதிர்கொள்ளும் எதிரியின் தன்மை குறித்து மக்களுக்கு தெளிவின்மை இருந்தபோதிலும், கிளர்ச்சியின் உத்வேகம் தொடர்ந்தது.இந்தப் புரிதல் எப்படி வந்தது? லத்தீன் அமெரிக்காவின் போராடும் ஏழைகளுக்கு ஒரு கலங்கரை விளக்கம் போல் ஒளியூட்டிய கம்யூனிஸ்ட் கியூபாவின் எதிர்ப்பும், மக்கள் எதிர்கொள்ளும் எதிரியைப் பற்றி எப்பொழுதும் நேர்படவே பேசும் .'ஒரு மண்வெட்டியை ஒரு மண்வெட்டி என்றே கூறும், தளபதி ஹ்யூகோ சாவேஸின் போதனைகளும் இப்புரிதலுக்கு பெரும்பங்காற்றியுள்ளன.காலம், மூத்த மார்க்சிய கெரில்லாக்கள் சரியானவர்கள் என்று நிரூபித்துள்ளது. ஏகாதிபத்தியதம் குறித்த லெனினின் வரையறை, முற்றிலும் சரியானது மேலும் எப்போதும் பொருத்தமானது. கடைசியாக, அமெரிக்க அதிபராக அதிகாரத்தைப் பிடித்த டொனால்ட் ட்ரம்ப் ஏகாதிபத்தியத்தின் முகத்திலிருந்து முகமூடியைக் கிழித்துள்ளார்., ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றும் அவர்களின் வளங்கள் குறித்து பேரரசின் நோக்கத்தை மிகத் தெளிவுபடுத்தும் விதமாக பொய்யான பரப்புரைகளையும் ஊடகங்களையும் அம்பலப்படுத்தியுள்ளார்.

ஏகாதிபத்தியத்தின் இருப்பு குறித்தோ, அதன் தன்மை குறித்தோ நம் மனதில் எந்த சந்தேகமும் இல்லை, இந்த ஏகாதிபத்திய அமைப்பு வீழ்ச்சியடைந்துள்ளது, அதனால் அது இன்னும் மிகவும் ஆபத்தானதாகவும் உள்ளது.

வெனிசுலா இன்று, மேற்கு அரைக்கோளத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் மையமாக உள்ளது, அதே நேரத்தில் வீரமிக்க சிரிய மக்கள் கிழக்கில் போராட்டத்தை வழிநடத்துகிறார்கள். சண்டை வெவ்வேறு வடிவங்களை எடுக்கக்கூடும், ஆனால் அது ஒரே போராட்டம் தான். மேலும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு எங்கு நடந்தாலும் அதை எதிர்ப்பதற்கான நமது திறனை மேம்படுத்த ஒரு கூட்டு நடவடிக்கைக்கான திட்டம் நமக்கு தேவை.

**2019 ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி:**

ஏகாதிபத்திய தலையீட்டின் ஒரு நேர்வு ஆய்வு:டிரம்ப் சகாப்தத்தில், வெனிசுலாவில் ஏகாதிபத்தியத்தின் திட்டங்கள் மற்றும் சூழ்ச்சிகள் குறித்து இனி எந்த ரகசியமும் இல்லை. அமெரிக்கா தனது உத்தரவுகளை வெனிசுலாவில் உள்ள எதிர்க்கட்சிகளுக்கு வெளிப்படையாகவே பிறப்பிக்கிறது, அதன் உறுப்பினர்களுக்கான செலவுகளை வெளிப்படையாக செலுத்துகிறது மேலும் அவர்களின் மூலோபாயத்தையும் தந்திரங்களையும் தீர்மானிக்கிறது. அதன் உறுப்பினர்கள் பெறும் உதவித்தொகை மற்றும் செலவுகள் வரை.இந்த கைக்கூலிகளுடான வெளியுறவுத் துறையின் சந்திப்புகள் எந்த ஒளிவு மறைவுமின்றி வெளிப்படையாக மேற்கொள்ளப்படுகின்றன, மேலும் அவை நன்கு ஆவணப்படுத்தப்பட்டும் உள்ளன,

வெனிசுலாவில் அமெரிக்காவின் ஆட்சி கவிழ்ப்பு முயற்சி என்பது ஒரு இறையாண்மை கொண்ட நாட்டில் ஏகாதிபத்திய தலையீட்டிற்கான ஒரு நேர்வு ஆய்வே ஆகும். அல் கபோனை ஒரு துறவி போல தோற்றமளிக்க செய்ய அதன் இராஜதந்திர யுத்தம் மட்டுமே போதும். வெனிசுலா ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் தேர்ந்தெடுக்கப்படுவதைத் தடுக்க அமெரிக்கா, சிறிய, பலவீனமான நாடுகளை மிரட்டி, அழுத்தமேற்படுத்தி செய்த பிரச்சாரம் ஒன்று போதும். அதையே உலகெங்கிலும் சர்வதேச மன்றங்களில் மேற்கொள்ளப்பட்ட இது போன்ற இராஜதந்திர யுத்தங்களுக்கு உதாரணமாகக் கூறலாம்.

ஐக்கிய நாடுகள் சபையின் கவுன்சிலுக்கு வெனிசுலாவின் நியமனத்தை ஆதரித்தால், ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்துவோம் என்று அமெரிக்கா பல அரசுகளை அச்சுறுத்தியது, ஆப்பிரிக்காவில் உள்ள நாடுகளுக்கு உதவியைக் குறைப்போம் என்று மிரட்டியது. கரீபியன் நாடுகளின் அமைச்சர்களை அச்சுறுத்தியது. இந்த முயற்சிகள் அனைத்தையும் மீறி, 106 நாடுகள் வெனிசுலாவுக்கு வாக்களித்தன, 90 நாடுகளுக்கு எதிராக அழுத்தம் கொடுத்ததால் அமெரிக்காவுடன் இணைந்து செயல்பட்டன. வாக்களிப்பதற்கு முந்தைய கடைசி தருணம் வரை போராட்டம் தொடர்ந்தது, அவையில் எந்தவிதமான நயவஞ்சக நடவடிக்கையையும் தவிர்க்க வாக்கெடுப்பு நடந்த அமர்வில் பல்வேறு அரசுகளின் தலைவர்கள் மற்றும் அமைச்சர்கள் கலந்து

கொண்டனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் வெனிசுலாவுக்கு எதிராக அமெரிக்கா நடத்திய அட்டூழியங்கள், ஆக்கிரமிப்புக்கான பல வழிமுறைகளை அமெரிக்கப் பேரரசு மேற்கொண்டுள்ளது. இராஜதந்திர சூழ்ச்சி, அச்சுறுத்தல் மட்டுமல்லாமல், சரமாரியாக ஊடக பொய்களின் வாயிலாகவும், வெனிசுலாவின் உள்கட்டமைப்பு மற்றும் பொருளாதாரம் மீதும் தாக்குதல்களை தொடுத்தது. வெனிசுலாவின் வெளிநாட்டு சொத்துக்கள் திருடப்பட்டது , அமெரிக்காவின் கைப்பாவை ஜுவான் கைடே மற்றும் பலரின் மூலமாக சதி முயற்சி செய்தது. ஆனால் இவை எல்லாம் நடந்தும் ஒரு நொடி கூட சரணடைவதை நாங்கள் கருதவேயில்லை.

வெனிசுலாவின் மக்கள் ஏகாதிபத்தியக் கட்டளைகளுக்குத் தலைவணங்க மறுத்ததற்காக அவர்களை தண்டிப்பதற்காக விதிக்கப்பட்ட அடிகளே பொருளாதாரத் தடைகள்.அவை மக்களை பட்டினி போட்டு தங்கள் அரசாங்கத்தை நிராகரிக்க வைப்பதற்காகவே மேற்கொள்ளப்பட்டன , ஆனாலும் அவை தோல்வியடைந்துள்ளன.. - உணவு, மருந்து மற்றும் அனைத்து வகையான அத்தியாவசிய பொருட்களின் பற்றாக்குறையால் -சிரமங்கள் ஏற்பட்டிருந்தபோதிலும் மக்கள் அரசாங்கத்தை பாதுகாப்பதில் உறுதியாக உள்ளனர்.

அமெரிக்காவின் ஆட்சி கவிழ்ப்பு சதி ஒன்றுமில்லாமல் போன போது அமெரிக்க ஆளும் வட்டாரங்களில் பெரும் அவநம்பிக்கை ஏற்பட்டது. ஆட்சிக்கவிழ்ப்பிற்காக, அணிசேர்ந்த படைகள் மிகவும் சிறியவையாகவும், தன்னுறுதி இல்லாமலும் இருந்தன (கைடேவுடன் கூடியிருந்த பெரும்பான்மையான வீரர்கள் ஏமாற்றப்பட்டனர் மற்றும் நம்பிக்கைக்குரிய அதிகாரிகளின் தொலைபேசி அழைப்புகள் மூலம் அவர்கள் எதற்காக அதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று விளக்கம் பெற்ற போது அவர்கள் அங்கிருந்து வெளியேறினர்) அவர்களை சிதறடிக்க செய்ய கண்ணீர்ப் புகை தவிர வேறொன்றும் தேவைப்படவில்லை. மீதமிருந்த கையளவிலான நபர்கள் அரசு அதிகாரத்தை கைப்பற்ற வேண்டிய நாளில் ஸ்பெயின் தூதரகத்தில் ஜாமன் செரானோ-வை சாப்பிட்டு முடித்தனர்.

இனப்படுகொலைக்கான முற்றுகை நீக்கப்படும் வரை அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியாது என்பதில் நிக்கோலஸ் மதுரோவின் பொலிவரிய அரசு உறுதியாக உள்ளது.

**புதிய தேர்தல்கள் நெருங்கும்போது குழப்பத்தில் எதிரணி**:

இதற்கிடையில், எதிர்க்கட்சி இப்போது குழப்பத்தில் உள்ளது, குய்டே ஒரு கையாலாகாதவர் என்று தெரியவந்துள்ளது. அவர் சமீபத்தில் பெரும்பான்மையானவர்களால், அரசை எதிர்க்கும்

பெருமளவு சக்திகளால் கூட நிராகரிக்கப்பட்டார் (வெனிசுலாவின் வெகுஜனங்களுக்கு அவர் ஒரு பொருட்டே இல்லை அவர்களில் பலர் அவரைப் பற்றி கேள்விப்பட்டதே இல்லை). வாஷிங்டனில் உள்ள கைப்பாவைகளின் எஜமானர்கள் அதிபர் தேர்தலில் போட்டியிடாத குய்தோ என்ற நபரையே சட்டபூர்வமான' அதிபராக்கும் அபத்தமான யோசனையை முன் நிறுத்தும் முயற்சியிலே உள்ளனர். அவர்களின் உத்தரவுக்கு மாறாக வெனிசுலாவின் எதிர்க்கட்சி எம்.பி.க்களில் பாதிக்கும் மேற்பட்டோர் இப்போது அரசுடன் சமாதான உடன்படிக்கைக்குக்கான பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர், வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தல்களைப் பற்றி பேசிய அமைச்சர், ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகள் ஒரு வலுவான நிலையில் இருப்பதாகவும், ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இழந்த சட்டமன்றத்தின் கட்டுப்பாட்டை மீண்டும் கைப்பற்ற வெனிசுலாவின் மக்களுக்கு கடமைப்பட்டிருப்பதாகவும் கூறினார். சட்டம் இயற்றவோ அல்லது அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபடவோ முடியாதவாறு அரசுப் பணிகளைத் தடுப்பதற்காக இது சமீபத்திய ஆண்டுகளில் செய்யப்பட்டுள்ளது.

எங்களது நாடாளுமன்றத்தில் மூன்று வருடமாக நிகழும் பிரெக்ஸிட் சீர்குலைவுகளுக்குப் பிறகு, மக்களின் விருப்பத்திற்கு முரணாக ஒரு சட்டமன்றத்தை அமைப்பதே அமைச்சரின் கண்ணோட்டம் என்பதைத் பிரிட்டனில் உள்ள தொழிலாளர்கள் தெரிந்துகொள்வார்கள். வரவிருக்கும் தேர்தல், அரசின் கரங்களுக்கிடையே நல்லிணக்கத்தை மீட்டெடுப்பதற்கும், வெனிசுலாவின் ஏகாதிபத்திய ஆதரவு கொண்ட தன்னலக்குழுக்களின் முகவர்களால் மிகவும் மகிழ்ச்சியுடன் பயன்படுத்தப்பட்ட தடங்கல் பொறிமுறையை அகற்றுவதற்கும் ஒரு வாய்ப்பை வழங்கியுள்ளது.

வெனிசுலா: ஏகாதிபத்தியத்திற்கு எதிரான உலகப் போராட்டத்தில் ஒரு முன்னணி:

தோழர் ஜார்ஜ் வெனிசுலாவின் போராட்டத்தை மீண்டும் ஒரு உலக கண்ணோட்டத்தில் கொண்டுவந்தார், இது போராட்டத்தின் பல முனைகளில் ஒன்றாகும். சமீபத்தில் ஈரானுக்கு சென்று திரும்பிய அவர், ஏகாதிபத்திய முற்றுகைகள் மற்றும் ஆக்கிரமிப்புகளுக்கு எதிரானக் கூட்டு ஒற்றுமையின் அவசியத்தையும், ஏகாதிபத்தியத்திற்கு எதிரான ஒரு துடிப்பான மற்றும் ஒருங்கிணைந்த உலக இயக்கத்திற்கானத் தேவையையும் மீண்டும் வலியுறுத்தினார்.

போராட்டத்தின் கடைசி ஆண்டு கொடுமையானதாகவும், மிகவும் கடினமானதாகவும் இருந்தது, ஆனால் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் வெனிசுலா வெற்றிகரமாகவே வெளிவந்தது. எங்களுடையது ஒரு நிறைவான அரசு இல்லை தான், ஆனால் மக்கள் எங்களை

ஆதரிக்கிறார்கள், ஏனென்றால் நாங்கள் அவர்களை நேசிக்கிறோம், அவர்களின் பிரச்சினைகளை உண்மையாகவேத் தீர்க்க முயற்சிக்கிறோம் என்பதை அறிந்திருக்கிறார்கள். அந்த ஆதரவு இல்லாமல் எங்களால் நீடித்திருக்க முடியாது.

ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போர் நாம் வெல்ல வேண்டிய ஒன்றாகும், நமது கண்டம் மற்றும் உலகெங்கிலும் ஏகாதிபத்தியவாதிகள் வளர்ந்து வரும் மக்கள் இயக்கங்களை நசுக்க முயற்சிக்கின்றனர். இருப்பினும், மக்கள் தொடர்ந்து போராடுகிறார்கள். வெறுக்கப்பட்ட அமெரிக்கத் தலைவரின் விஷயத்திற்குத் திரும்பிய அவர், அதிபர் டிரம்ப் ஒரு நேர்மறையான பக்கத்தைக் கொண்டிருப்பதாக மீண்டும் கூறினார்: ஏகாதிபத்தியத்தின் சுயநல, கொள்ளைக்கார, மேலாதிக்க தன்மையின் மிக நேர்த்தியான ஆளுருவமாக டிரம்ப் உள்ளார். - உண்மையில், ஏகாதிபத்திய் முதலாளித்துவ சமூகத்தின் அனைத்து எதிர்மறை மதிப்புகளுக்குமான சரியான ஒரு பிரதிநிதியாக உள்ளார். “சுதந்திர உலகின் ஆட்சியாளர்கள்”, நளினமான ஸூட்டுகள், போலிப் புன்னகைகள் மற்றும் இரட்டை நாக்குடன் கூடிய ஒபாமா நாட்களுக்கு திரும்புவதற்கு ஏங்குவதில் ஆச்சரியமில்லை!

வெனிசுலாவைப் பற்றி அமெரிக்கா தவறாகக் கணக்கீடு செய்தது. சாவேஸூடன் புரட்சி இறந்துவிடும் என்று அவர்கள் நினைத்தார்கள், ஆனால் சாவேஸின் திட்டங்களும், கோட்பாடுகளும் மக்களிடையே ஆழமாக வேரிட்டுள்ளன என்பதால் இந்த வழியில் அவரைக் கொல்ல முடியவில்லை. சாவேஸ், எங்கெங்கும் உள்ளார் அதனால் தான் ஓய்வூதியம், வீட்டுவசதி, கல்வி, கலாச்சாரம் என முன்னர் கிடைக்காத உரிமைகளை இப்பொழுது தொழிலாளர்கள் அனுபவித்து வருகின்றனர்.

வெனிசுலாவின் தவறுகளிலிருந்தும் பின்னடைவுகளிலிருந்தும் கற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை நாங்கள் வலியுறுத்துகிறோம்.. பொருளாதாரத்தின் முக்கிய நெம்புகோல்கள் ஒரு விரோத வர்க்கத்தின் கைகளில் உள்ளன. குடியாட்சித் தேர்தலில் வெற்றி பெற்றாலும் வங்கியாளர்களையும்,பெருமுதலாளிகளயும் தொடர்ந்து ஆட்சி செய்ய அரசால் அனுமதிக்க முடியாது.

புதிய சிரமங்கள் வந்து கொண்டு தானிருக்கின்றன, அவர் கூடியிருந்த பிரதிநிதிகளிடம், உங்கள் அனைவரது ஆதரவும் ஒற்றுமையும் எங்களுக்குத் தேவை. அது குறிப்பாக எல்லா இடங்களிலும் மக்களின் மனதிலுள்ள ஏகாதிபத்திய ஊடகங்களின் பிடியை உடைப்பதற்கு தேவைப்படும். ஏகாதிபத்திய எதிர்ப்பு ஊடகங்களின் புதிய உலகளாவிய வலையமைப்பை நாம் கட்டியெழுப்ப

வேண்டும், தகவல்களை நேரடியாக ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ள வேண்டும் மேலும் எல்லா இடங்களிலும் உள்ள தொழிலாளர்களுக்கு உண்மையைப் பரப்புவதற்கான ஒவ்வொரு வழியையும் நாம் பயன்படுத்த வேண்டும்.

இந்த பொய்கள் யாவும் இருந்தபோதிலும், உண்மை தன்னை உறுதிப்படுத்தியது. பொலிவரியன் புரட்சி கடந்த ஆண்டின் போர்களால் பலப்படுத்தப்பட்டு அதன் தலைமை உருக்கு பெற்றுள்ளது.. சிரிய மக்களின் வீரத்திற்கும், ஏகாதிபத்திய படையெடுப்பிற்கு எதிரான அவர்களின் வெற்றிகரமான போராட்டத்திற்கும், ஐஎஸ்ஐஎஸ், மத்திய கிழக்கின் ஏகாதிபத்திய ஆதரவாளர்களுக்குப் பெருந்துன்பமாகத் திகழ்ந்த ஈரானின் கொலை செய்யப்பட்ட தளபதி சுலைமானி அவர்களுக்கும் அமைச்சர் புகழ் அஞ்சலி செலுத்தினார்.

தளபதி சோலைமானியைக் கொன்றதில் அமெரிக்காவின் நடவடிக்கையும் மற்றும் டிரம்ப் அவரைப் பற்றிக் கூறியப் பொய்களும், மத்தியக் கிழக்கில் ஏகாதிபத்தியத்தின் உண்மையானக் குறிக்கோள் பயங்கரவாதிகளை அழிப்பதல்ல, அவர்களைக் காப்பாற்றுவதே,என்பதையும் பிராந்தியத்தில் உள்ள மக்களை விடுவிப்பதற்காக அல்ல, அவர்களை அடிமைப்படுத்துவதற்கே.என்பதையும் மீண்டும் மிகத் தெளிவாகக் காட்டியுள்ளது. வாஷிங்டனில் உள்ள கைப்பாவைகளின் எஜமானர்கள், அதிபராக நன்கு பேசும், நேர்த்தியான ஒரு பெண்மணியை தேர்ந்தெடுத்து, முகத்தில் புன்னகையுடன் உலக அழிப்பைத் தொடரவே விரும்புகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இங்கு பிரச்சினை ஏகாதிபத்தியத்தின் அமைப்பு தானே தவிர அந்த அமைப்பின் தலைவராக முன்னணியில் செயல்படும் நபரின் அல்லது பெண்மணியின் குறிப்பிட்ட குணநலன்கள் அல்ல. என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அண்மையில் நடந்தக் கூட்டத்தில் சீனப்பிரதிநிதி கூறியதை அமைச்சர் அவரது ஒப்புதலுடன் மேற்கோள் காட்டினார்: “ ஏகாதிபத்திய எதிரியை திறம்பட எதிர்கொள்ள, நாம் எதிரியை ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும்.” நாம் அதை அழிப்பதில் வெற்றிபெற வேண்டுமானால் ஏகாதிபத்தியத்தின் தன்மையை முழுமையாக ஆராய வேண்டும்.” ஏகாதிபத்தியத்தை அழிக்க வேண்டுமென்றால் நாம் செய்யவேண்டியது நிறைய உள்ளது. செயல்படுத்தும் வகையிலான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளுக்கான முழுமையான திட்டம் நம்மிடம் இருக்க வேண்டும். இந்த வேலையை செய்ய முடியும், செய்யப்படவும் வேண்டும்.

முயற்சி செய்து தோல்வியடைய இன்னும் 200 ஆண்டுகள் நம்மிடம் இல்லை. மனிதகுலத்தின் தொடர்ச்சியான இருப்பு நமது வெற்றியைப் பொறுத்தே அமைந்துள்ளது என்றும் தோழர் அரீஸ் ஜார்ஜ் உரையாற்றினார்.

நா. கதிர்வேல்

## மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் வண்ணார், மருத்துவர் உள்ளிட்ட சாதியினருக்கு உள்ஒதுக்கீடு தேவை - ஏன்?:

தமிழ்நாட்டில் வண்ணார் எனப்படும் சாதியினர் குறித்து பேராசிரியர்.ஆ. சிவசுப்பிரமணியன் அவர்கள் '**தமிழக வண்ணார் வரலாறும் வழக்காறுகளும்**' எனும் நூல் எழுதியுள்ளார். புதிரை வண்ணார் சமூகம் மட்டும் தாழ்த்தப்பட்ட சாதியாக ஒதுக்கப்பட்டு அச்சாதியினர் அல்லது வகுப்பினர் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் உள்ளனர்.

மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சுருக்கமாக 41 சாதியினர் உள்ளனர். அதிலே வண்ணார், மருத்துவர் சாதிகளும் உண்டு. வண்ணார் சாதியினர் மடிவலா, ஏகாலி, ராஜகுலா, வெளுத்தாடர், ராஜாகா உட்படப் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றனர். 1954ஆம் ஆண்டிலேயே அப்போதைய முதல்வர் திரு.காமராஜ் அவர்களிடம் தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் சம்மேளனம் தாழ்த்தப்பட்ட (அட்டவணை) வகுப்பினர் பட்டியலில் சேர்க்கக் கோரி மனுக்கொடுத்தது. கல்வியில், பொருளியலில் எப்பங்கும் இல்லாத காலம் என்றாலும் முற்றிலும் தீண்டத்தகாதவர்களாக இல்லை என்பதால் அந்தப் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. அதன் பிறகு அதே சலுகைகள் மிக பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கும் வேண்டும் எனவும் மனு கொடுக்கப்பட்டது.

காலம் கடந்து இத்தனை ஆண்டுகள் ஓடிவிட்டன. தமிழ்நாடெங்கும் உடல் உழைப்பாளர்களாக, சலவைத் தொழிலாளர்களாக இருந்து வரும் இச்சமூகத்தினரை பற்றியும் சட்டநாதன் குழு ஆய்வு செய்தது. இன்றைக்கு தமிழ்நாடெங்கும் சலவைத் தொழிலாளர்கள் முறையாகக் கூட்டம் கூட்டி விவாதமும் நடைபெறுகிறது. .மத்திய சங்கம் உள்ளிட்ட பல சங்கங்கள் உண்டு. சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாடு வண்ணார் பேரவை மதுரையில் மாநாடு நடத்தியது. தென் மாவட்டம் முழுவதும் ஆர்ப்பாட்டங்கள், கருத்தரங்கங்கள் நடத்தப்பட்டது. குறிப்பாகக் கோரிக்கைகளில் மிக முக்கியமானதாக மிகப் பிற்படுத்தப்பட்டோரில் மருத்துவர், வண்ணார்

உள்ளிட்ட சாதிகளுக்கு உள் ஒதுக்கீடு கோரித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசுக்கும் அனுப்பப்பட்டது.

சட்டநாதன் குழுப் பரிந்துரைகளில், வண்ணார் சமுதாயம் காலை முதல் மாலை வரை ஆற்று நீரில் நின்று, சோப்புகள் உள்ளிட்ட வேதிப் பொருட்கள் பயன்படுத்துவதால் தோல் நோய் ஏற்படுகிறது, மரணமும் ஏற்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு சமூக அடிநிலைக் காப்புறுதித் திட்டம் (Social Basic Insurance) வேண்டுமென்று கூறியது. மிகக் குறைந்த வட்டிக் கடன் மூலமும் கூட்டுறவுக் கடைகள் மூலமும் சலவை சோப், வாஷிங் சோடா கொடுக்கவும் வலியுறுத்தியது. அதன் படி அப்போது கிடைத்தது இப்போது இல்லை. அது சலவைத் தொழிலாளர்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கவும் கோரியது. 1970களில் சட்ட நாதன் குழு தந்த பரிந்துரை இது வரை கண்டு கொள்ளப்படவில்லை.

தமிழ்நாட்டில் இன்று எக்கட்சியும் மருத்துவர், வண்ணார் சாதியிலிருந்து யாரையும் சட்ட மன்ற உறுப்பினர் பதவிக்கோ ஒன்றியக் கவுன்சிலர் பதவிக்கோ நிறுத்துவதில்லை. இது அப்பட்டமான சமூகப் புறக்கணிப்பு ஆகும். ஒதுக்கப்பட்ட சமூகத்திற்காக குரல் கொடுத்து வரும் இயக்கங்கள் வேலை செய்த தமிழ் நாட்டின் இன்றைய நிலைமை இது. சமூக நீதி இச்சமூகங்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பதையே இது காட்டுகிறது.

தமிழ்நாட்டில் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக, குறிப்பாக 1991இல் உலகமயம், தாராளமயம் வந்த பிறகு வண்ணார், மருத்துவர், சமுதாய மக்களின் நிலைமை இன்னுங்கூட மோசமானது. பெரும் வணிக நிறுவனங்கள் நவீன சலவைக் கூடங்கள் நடத்தி மிகப் பெருமளவு வருவாய் ஈட்டுகின்றன, மருத்துவ சமுதாயத்தினர் நடத்தி வந்த சலூன் கடைகளுக்கு மாறாக தனிப்பெரும் முதலாளிகள் முடித்திருத்தகங்கள் நடத்திப் பெருத்த இலாபம் ஈட்டி வருகின்றனர். இதன் விளைவாக இம்மக்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகிறது.
ஒருபுறம் வருணாசிரமத் தொழில் முறை ஒழிகிறது என நினைத்தாலும் மாற்றுவேலை, மாற்றுதொழில் ஏற்பாடு செய்யப்படவில்லை. இச்சமூகங்கள் கல்வியிலும் பின்தங்கிய நிலையில் உள்ளன.

இரண்டாம் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நிலைக்குழு பிற்படுத்தப்பட்ட நிலையினைத்

தீர்மானிக்க மூன்று அளவுகோல்களைப் பின்பற்றியது.

1. சமூக ரீதியில் பிற்படுத்தப்பட்டது என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட சாதி/வகுப்பு.

2. தொழில் ரீதியில் பிற்படுத்தப்பட்ட நிலை.

3. தன் பிழைப்பிற்கு உடலுழைப்பை அல்லது 'அசுத்தமான; அல்லது 'இழிவான' தொழிலை நம்பியுள்ள சாதி/வகுப்பு.

சாதித் தொழிலுக்குச் செல்லும் பெண்களின் சதவீதம் மாநில சராசரி அளவை விட 10 சதவீதமாவது அதிகமாவது உள்ள சாதி வகுப்பு

குடிசைகளில் வாழ்கின்ற குடும்பங்களின் சதவீதம் மாநில சராசரி அளவை விட குறைந்து 10 சதவீதம் அதிகமாக உள்ள வகுப்பு/சாதி.

வாழ்க்கைச் செலவுக்குக் கடன்கள் வாங்குகின்ற குடும்பங்களின் சதவீதம் மாநில சராசரி அளவை விட குறைந்தது 10 சதவீதமாவது அதிகமாக உள்ள சாதி/வகுப்பு அல்லது லேவாதேவிக்கார்ர்கள்/ அடகு பிடிப்பவர்களிடமிருந்து கடன்கள் வாங்கும் குடும்பங்களின் சதவீதம் மாநில சராசரி அளவை விட குறைந்து 10 சதவீதமாக உள்ள வகுப்பு.

இது தவிர கல்வி ரீதியில் 1) எழுதப்படிக்கத் தெரியாதவர்கள். 2) படிப்பை இடையில் நிறுத்தியவர்கள். 3) ஏனைய எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் என நிர்ணயம் செய்யலாம் எனவும் அளவுகோல்கள் உள்ளன.

இது தவிர மறைந்த முதல்வர் ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் இந்நிலையைப் போக்க, மிக பிற்படுத்தப்பட்ட பிரிவில் உட்பிரிவு செய்ய ஆணையம் (Commission) அனுமதிக்கப்பட்டு ஆணைய அறிக்கை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திடம் சமர்ப்பிக்கப்பட்டு, அந்த அறிக்கை வெளியிடப்படாமல் உள்ளது. கடந்த 19.09.2019இல் திருச்சி உழவர் சந்தைத் திடலில் தமிழ்நாடு வண்ணார் பேரவை நடத்திய மாநாட்டில் அந்த ஆணைய அறிக்கையை வெளியிடக் கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் தமிழக அளவில் மேற்சொன்ன அறிக்கை வெளியிடப்படல் வேண்டும். மானிய அடிப்படையில் தொழில் தொடங்க வண்ணார், மருத்துவ வகுப்பினருக்கு உயர் கல்வி உட்பட கல்வி கட்டணமில்லாக் கல்வி வழங்க வேண்டும். கல்வி உதவித் தொகையும் அளிக்கப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளும் உள்ளன.

வண்ணார், மருத்துவர் சமூகங்களின் கோரிக்கைகளுக்காகப் போராடுவது தமிழ்த் தேசிய சமூக நீதி ஆற்றல்களின் கடமை ஆகும்.

சமந்தா

# நக்வெய்ன் மார்க்சியப் பள்ளியில் (4)

# காலனியாதிக்கத்தின் மூன்று மோதல்கள்:

ஆசிரியர்: பிரபிர் புர்கயஸ்தா

தொழிற்புரட்சி நடந்த காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அட்லாண்டிக் வர்த்தக முறை முக்கோண வர்த்தகம் என்றே அழைக்கப்பட்டது. ஏனெனில் அந்த வழியில்தான்



அமெரிக்காவிலிருந்து துப்பாக்கிகள், பணியாளர் மற்றும் பொருட்களை ஆப்பிரிக்காவுக்கு அனுப்பினர். ஆப்பிரிக்காவிலிருந்து அடிமைகள் கப்பல்களில் அமெரிக்காவிற்கு அனுப்பப்பட்டனர், மேலும் அமெரிக்காவிலிருந்து பெறப்பட்ட மூலப்பொருட்கள் ஐரோப்பாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டன. பெரும்பாலும் அடிமைகளை அடிமைக் கப்பல் தளங்களில் திரும்பக்கூட இடம் இல்லாதவாறு படுக்க வைத்து, கரண்டிகளை அடுக்கினாற்போல் அடைத்துக், கொண்டு சென்றனர். சில கப்பல்களில் அடிமைகளுக்கு 5.3 அடி உயரம், 4.4 அடி நீளம் என்ற அளவில் இடம் கிடைத்தது. இடையே அவர்களுக்கு உணவு அளிக்கப்பட்டது. கொஞ்சம் காற்றைப் பெறுவதற்காக மேலே அழைத்துசெல்லப்பட்டனர். இப்படிக் கொண்டு செல்லப்பட்டவர்களில் பலர் பயணத்தின் போதே இறந்து விட்டனர்.

அமெரிக்காவில் அடிமைகளை விவசாயத்தில் ஈடுபடுத்தியதால், 1791இல் 1.2 மில்லியன் பவுண்டு மதிப்புடையதாக இருந்த பருத்தி உற்பத்தி (அதே எண்ணிக்கையிலான அடிமைகளுடன்) 1859இல் 2.1 பில்லியன் பவுண்டுகளாக அதிகரித்தது. 1830களில், பிரிட்டிஷ் நெசவுத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான 80% பருத்தி அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தென் பகுதியிலிருந்தே பெறப்பட்டது

உலக மொத்தப் பொருளாக்க மதிப்பின் (GDP') வரலாறு:

உலகத்தின் மொத்தப் பொருளாக்க மதிப்பின் (GDP) வரலாற்றைப் பற்றி ஆய்வு செய்த குரோனிங்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பொருளாதார அறிஞர் ஆங்கஸ் மாடிசன் எழுதிய புத்தகத்தில் இது குறித்த தரவுகளைச் சிறந்த முறையில் வரைபடமாகக் காட்டியுள்ளார். இந்த வரைபடத்தில் இந்தியாவின் மொத்தப் பொருளாக்க மதிப்பு (GDP) செம்மஞ்சள் நிறத்திலும்,




சீனாவின் மொத்தப் பொருளாக்க மதிப்பு (GDP) இளஞ்சிவப்பு நிறத்திலும் காட்டப்பட்டுள்ளன. இதை உற்றுநோக்கினால் கிட்டத்தட்ட பொ.ஊ. (கிபி) 1700 வரை, நிச்சயமாக 1600 வரையிலும் உலகின் மொத்தப் பொருளாக்க மதிப்பில் 50% சீனா, இந்தியா ஆகிய இரண்டு நாடுகளிலிருந்தே பெறப்பட்டுள்ளது. ஆனால் அதற்குப் பிந்தைய காலகட்டத்தில் உலகின் மொத்தப் பொருளாக்க மதிப்பில் இந்தியா, சீனாவின் பங்கு படிப்படியாகச் சரிவடைந்துள்ளதைக் காண முடியும். அதே நேரத்தில் மேற்கு ஐரோப்பாவின் பங்கீட்டு மதிப்பு உயர்ந்துள்ளதையும் காண முடியும்.

பொ.ஊ. (கிபி) 1700இலிருந்து 1820 வரை கூட இவ்விரு நாடுகளும் உலகின் மொத்தப் பொருளாக்க மதிப்பில் பெரும்பங்கு வகித்துள்ளன. இந்தியாவிலிருந்தும், சீனாவிலிருந்தும் பெருமளவுப் பொருட்கள் வர்த்தகம் செய்யப்பட்டன. இந்தியாவிலிருந்து நெசவு செய்த துணிமணிகள், வாசனைப் பொருட்களை வாங்குவதற்காகவே கிழக்கிந்திய நிறுவனம் இந்தியாவில்நிறுவப்பட்டது. இந்தியாவிலிருந்து பெருமளவிலான பொருட்களை வர்த்தகம் செய்வதற்கான நிதியைக் கிழக்கிந்திய நிறுவனம் எங்கிருந்து பெற்றது எனப் பார்த்தோமானால், வங்காளம், பீஹார் போன்ற இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் வசூலிக்கப்பட்ட நிலவாடகையிலிருந்தே வர்த்தகத்திற்கான நிதி பெறப்பட்டது. சீனாவிலிருந்து வர்த்தகம் செய்வற்கான நிதியை எங்கிருந்து பெறுவது என்பது முதலில் சிக்கலாக இருந்தது, சீனா மிகவும் பரந்ததாகவும், ஐக்கிய முடியரசிலிருந்து (UK) தொலைவிலும் இருந்ததால், அங்கிருந்து வணிகம் செய்வது பிரித்தானியருக்கு அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. சீனாவிற்குப் பொருட்களை விற்பதன் மூலமே அங்கிருந்து பெருமளவுப் பொருட்களை வாங்குவதற்கான நிதியைத் திரட்ட முடியும். அதற்கு அவர்கள் என்ன செய்தார்கள்? அபின் விற்றார்கள். அபின் பிரிட்டனில் விளையவில்லை என்பதால் அது இந்தியாவிலிருந்தே பெறப்பட்டது. அந்த அபின் வணிகத்தில் யார் யாரெல்லாம் ஈடுபட்டார்கள் எனத் திரும்பிப் பார்த்தோமானால் இந்தியப் பெருமுதலாளிகளின் எழுதப்படாத வரலாறு தெரியவரும். மார்வாடிகளும், பார்சிக்களுமே இந்தியாவில் விளைவிக்கப்பட்ட அபினைச் சேகரித்து, அதை சீனாவில் உள்ள பிரிட்டிஷ் நிறுவனத்திற்கு அனுப்பினர். மார்வாடி பிர்லா அபின் வணிகத்திலும், பணத்தை வட்டிக்குக் கடன் கொடுப்பதன் மூலமுமே மூலதனம் திரட்டியுள்ளார். பார்ஸி இனத்தைச் சேர்ந்த டாடாவிற்கு ஹாங்காங்கில் அலுவலகங்கள் இருந்தன.

அந்நிறுவனங்களுக்கே இந்தியாவிலிருந்து பெறப்பட்ட அபின் அனுப்பப்பட்டது. அங்கிருந்து பிரிட்டிஷ் மேலாண்மைக் கிளைகளுக்கு அனுப்பப்பட்டது. அதிலிருந்து வங்கியும் உருவாக்கப்பட்டது. அபின் வர்த்தகத்திலிருந்து கிடைத்த நிதியிலிருந்தே ஹாங்காங்-ஷாங்காய் வங்கி நிறுவப்பட்டது. இந்தியப் பெருமுதலாளிகள் தங்களுக்கான ஆதி மூலதனத் திரட்டலை அபின் வணிகத்திலிருந்தே பெற்றனர். அபின் வணிகம் குறித்த இன்னொரு முக்கியச் செய்தி என்னவென்றால், இங்கிலாந்தில் அபின் இறக்குமதி செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டது. ஆனால் பிரித்தானியர்கள் சீனாவுடன் தடையற்ற அபின் வணிகம் செய்ய மூன்று அபினிப் போர்களில் ஈடுபட்டனர். தடையற்ற வணிகம் என்ற பெயரில் இங்கிலாந்தில் தடைசெய்யப்பட்ட அபினை சீனாவில் விற்பனை செய்வதற்கான உரிமையைக் கோரி யுத்தம் செய்தனர். பிரிட்டின் போலித்தனத்தைப் பற்றி நாம் இங்கு விரிவாகப் பரிசீலிக்கப் போவதில்லை. ஆனால் இந்த வர்த்தகம், வணிகத்தின் பின்னே திருட்டுகள், கொள்ளைகளின் வரலாறு உள்ளது. ஆசியாவில் அது மாறுபட்டு இருந்தது. இங்கு மக்கள்தொகை அதிகமாக இருந்ததால் இவ்வளவு எண்ணிக்கையிலான மக்களைக் கொல்வது அணுகுண்டு போன்ற பேரழிவு ஆயுதங்கள் இல்லாத அந்தக் காலத்தில் எளிதன்று. மேலும் அவர்களுக்கு இங்கே உற்பத்தி செய்த பொருள்களும் இந்த நாடுகளின் சந்தையும் தேவைப்பட்டன, முதலில் இந்தியாவில் நெசவான துணிமணிகளைப் பெருமளவு வாங்கிய அவர்கள், பின்னர் இந்தியாவின் நெசவுத் தொழில்களையே ஒட்டுமொத்தமாக அழித்தனர். இதையே கார்ல் மார்க்ஸும் தன் நூலில் விவரித்துள்ளார். நெசவு இயந்திரங்களின் வருகையால் இந்தியாவில் பெருமளவு நெசவாளர்கள் இறந்தனர். இங்கிலாந்திலும் இயந்திரங்களால் வேலையிழப்பு ஏற்படுவதால் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த அடிப்படையில் தான் தெற்காசியாவில் தொழிலகங்கள் அழிக்கப்பட்டன. இந்த நீண்ட கால நிகழ்வால் இந்தியா தொழில்நுட்ப அளவில் ‘பின்தங்கிய நாடாக' மாறியது. ஒரு காலத்தில் இங்கிருந்தே தரமான பொருட்கள் ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. அவர்கள் இந்திய வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தினர். இந்தியச் சந்தையில் பெருமளவு விற்று இலாபம் ஈட்டுவதற்காகவே உள்நாட்டுத் தொழிலகங்களை அழித்தனார். மேற்கத்திய நாடுகளின் வளர்ச்சியின் வரலாற்றுப் பின்னணியில் அதன் காரணியாக தொழில் நுட்ப வளர்ச்சி மட்டுமே இருந்ததாக அவர்கள் வரலாற்றைச் சித்திரித்துள்ளனர். அதே நேரத்தில் ஆசியர்களையும் ஆப்பிரிக்கர்களையும் சோம்பேறிகளாகவும் , ஒழுங்கற்றவர்களாகவும் கடினமாக உழைப்பதில் ஆர்வமில்லாதவர்களாகவும், மேற்கு ஐரோப்பாவைப் போல் அறிவியல் வளர்ச்சிக்கு அவர்கள் எந்தப் பங்களிப்பும் செய்யவில்லை என்பது போலவும் பலவாறு சித்திரித்துள்ளனர். இதற்கு

மாறாக வேறு உண்மையான வரலாறு உள்ளது. அதில் வில்லன்களான முதலாளித்துவமும், ஏகாதிபத்தியத்துவமும் பூமியை எந்த நிலைக்குத் தள்ளியுள்ளன என்பதை விவரிப்பது காலனியாதிக்கத்தின் இரத்த வரலாறு. இந்த உண்மை வரலாறு மறைக்கப்பட்டுள்ளது. இதை ஏன் கூறுகிறேன் என்றால் வரலாறு திரிக்கப்படுவதைப் பற்றி அவர்களே அதிகம் பேசுகிறார்கள். தாங்களே உண்மை வரலாற்றை அளிப்பதாக சித்தரிக்கின்றனர். இங்கு நான் மீண்டும் வலியுறுத்த விரும்புவது என்னவென்றால் இவை யாவும் வரலாற்றுடன் முடியவில்லை, இன்றும் தொடர்கிறது.உதாரணமாக இன்று அமெரிக்க ஐக்கிய நாடுகள், மேற்காசியாவில் தீவிரவாதத்தின் மீதானப் போர், உலகளாவிய தீவிரவாதத்தின் மீதான போர் என்று ஆர்ப்பரிக்கிறது. ஆனால் அதற்குப் பின்னே சிரியாவுக்கு எதிராக அல்கொய்தாவை ஆதரிப்பதில் அவர்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை.இதைத் தான் அவர்கள் ரஷ்யாவிலும், ஆஃப்கானிஸ்தானிலும் ஆரம்பித்தார்கள். இவை அனைத்திதிற்கும் பின்னே, இஸ்லாமிய ஒடுக்குமுறையின் தலைமையகமான சௌதி அரேபியா உள்ளது. அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் சௌதி அரேபியாவின் பெருங்கூட்டணி உள்ளது.இவ்வாறு வரலாறு திரிக்கப்படுவது வரலாற்றுடனோ, நேற்றுடனோ முடிவு பெறவில்லை. நிகழ்காலத்தில் இன்றும் தொடர்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

இந்தியாவைப் பொறுத்த வரை வெளிநாட்டிலிருந்து வந்தவர்களாகிய ஃபாஹியான், யுவான் சுவாங், மெகஸ்தனிஸ் வரலாற்றுக் குறிப்புகளைத் தந்துள்ளனர். நம்மிடமோ மதம் மற்றும் புனைவுகளின் கலவையாக ஒரு புனையப்பட்ட வரலாறாகவே இந்திய வரலாறு இருந்தது. இந்தியாவின் பாரம்பரியத்தைக் கட்டுப்படுத்திய பிராமணர்கள் அறிவே அதிகாரத்தைப் பெறுவதற்கான கருவி என அறிந்திருந்தனர். ஆதலால் அறிவை ஒரு சாதியிடம், ஒரு குழுவிடம் மட்டும் மையப்படுத்தி இருந்திருந்தனர். வானவியல், காலநிலை, கணிதம் ஆகியவற்றை அவர்கள் மட்டுமே அறிந்திருந்தனர் மற்றவர்களுக்குக் கல்வியறிவைப் பெறுவதற்கான வாய்ப்பு அளிக்கப்படவில்லை.

உலகில், ஜாதியமைப்பு காணப்படும் ஒரே நாடான இந்தியா எழுதப்பட்ட வரலாறு இல்லாமல் வாய்வழி அறிவு மரபைக் கொண்டதாகவும் இருப்பது எதேச்சையானது அல்ல. நம்மிடம் பல்வேறு ஆய்வு செய்யப்படாத வரலாற்று இலக்கியங்கள் உள்ளன. பிராகிருதத்திலும், ஜைன இலக்கியத்திலும் ஆய்வு செய்யப்பட வேண்டியவை ஏராளமாக உள்ளன.

இந்துத்துவத்திற்கு இந்தியாவின் உண்மையான வரலாற்றைப் பற்றியோ, அதைப் பாதுகாக்க

வேண்டியதைப் பற்றியோ எந்த அக்கறையும் கிடையாது. பிராகிருதத்திலோ,புத்த, சமண இலக்கியங்களில் அவர்களுக்கு எந்த அக்கறையும் இல்லை. பிராகிருத, புத்த, சமண வரலாற்று இலக்கியங்களிலிருந்து இந்திய மக்களின் உண்மையான வரலாற்றை (அரசர்களைப் பற்றிய புனையப்பட்ட வரலாறு அல்ல) ஆய்ந்தறிவதே நாம் எல்லோரும் ஒருங்கிணைந்து செய்ய வேண்டிய பெரும்பணியாக நம் முன் உள்ளது.

மார்க்சியர்களாகிய நமக்கு மாறுபட்ட அறிவுப்புலம் உள்ளது. நாம் வரலாற்றை வேறுவிதமாகப் பார்க்கிறோம். 20-25 ஆண்டுகளுக்குள் வரலாற்றறிவில் பெரும் மாற்றம் பெறப்பட்டுள்ளது. தொல்லியல், மரபியல் எனப் பல்வேறு துறைகளின் எனப் புதியக் கண்டுபிடிப்புகள் அனைத்தும் வரலாற்றில் பெருமாற்றத்தைக் கொண்டுவந்துள்ளன.

இந்த வரலாறுகள் யாவும் அறுதியானவை அல்ல. நீங்கள் இளையவர்கள், இவை அனைத்தையும் ஆராய்ந்து அறியும் பணியை மேற்கொள்ள வேண்டும்.எப்படி எனக்குக் கற்பித்தவர்கள் கூறியதை அப்படியே நான் திரும்பக் கூறவில்லையோ அது போல நான் சொல்வதில் தவறிருந்தாலும் நீங்கள் திருத்த வேண்டும். அது உங்கள் வேலை... (தொடரும்)

+++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

**சிலம்புச் செல்வன்**

## நான் ஏன் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தில் சேர்ந்தேன்?

தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சியில் பணியாற்றி வெளியேறிய பின்பு சிறிது காலம் எந்த அமைப்பிலும் இணையாமல் நேரடியான நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடாமல் ஒதுங்கி இருந்தேன்.

நீண்ட காலத்திற்கு அவ்வாறு ஒதுங்கி இருக்க முடியாது என்பதை உணர்ந்துள்ளேன். இந்நிலையில் நீண்ட பரிசீலனைகளுக்குப் பிறகு தோழர் தியாகு தலைமையிலான "தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தில்" என்னை இணைத்துக் கொண்டு உள்ளேன்.

எப்போதும் "அரசியலும் அமைப்புமே எனது உலைக்களன்" என்று உறுதியாக நம்புபவன். அந்த வகையில் அமைப்புகள் மேலுள்ள விமர்சனங்களைக் காரணங்காட்டி அமைப்பில் இணைந்து செயல்படாமல் இருப்பதையோ அல்லது அமைப்புகள் நம் சுதந்திரமான

கருத்துக்களைத் தடை செய்யும் என்பதையோ ஏற்றுக் கொள்ளாதவன் நான்.

காரணம் அமைப்பு என்பது நமது சுதந்திரமான கருத்துகளைக் கட்டுப்படுத்தும் என்பது ஓரளவு உண்மைதான். ஆனால் கட்டுப்பாடற்ற சுதந்திரம் என்ற ஒன்று கிடையாது என்பதை மார்க்சிய ஆசான்கள் தம் வரலாற்று அனுபவங்களிலிருந்து நமக்கு உணர்த்திச் சென்றுள்ளார்கள்.



இன்றைய உலகமயக் காலகட்டத்திற்கு பின்பு தனிநபர் வாதம் மேலோங்குவதை நாம் காண முடியும். இது அமைப்புகளுக்கு எதிராகப் பேசி, அமைப்புவழித் திரட்டுவதைத் தடுத்தே வந்துள்ளது. ஆனால் இதற்கு அமைப்புகளே அடிப்படைக் காரணம் என்று நான் குற்றம் சாட்டுகிறேன். அமைப்புகள் தங்கள் மக்கள்விரோத சிந்தனைகளில் இருந்து மாற்றிக் கொள்ளாததே இதற்குக் காரணமாகும். அமைப்பு சாராது ஒரு கூட்டம் உருவாக இதுவே காரணமாக அமைந்தது.

தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சியில் இருந்த போதும் சரி இன்று தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தில் இணைந்துள்ள போதும் சரி மனிதகுல விடுதலைக்கு மார்க்சியமே இறுதித் தீர்வு என்று நம்புகிறேன். அதேநேரம் மார்க்சியத்தை இந்த மண்ணில் தமிழ்த் தேசிய விடுதலை அரசியலின் வழியாகவே எடுத்துச் செல்ல முடியும் என உறுதிபடக் கூறுகிறேன்.

மார்க்சியம் இந்த மண்ணிற்கு வந்து நூற்றாண்டுகள் நிறைவடையும் வேளையில் உள்ளோம். எனினும் இந்த நாளிலும் மார்க்சியத்தை இந்த நாட்டின் குறிப்பான சூழலோடு இணைக்காத நிலையிலேயே கம்யூனிஸ்டுக் கட்சிகள் உள்ளன. அவற்றில் நிகழ்ந்துள்ள தற்போதைய மாற்றங்கள் அனைத்தும் நடைமுறை வகையில் நிகழ்ந்துள்ளனவே தவிர கொள்கை வகையில் அல்ல.

இன்று நான் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தை தேர்ந்தெடுக்க அதன் மார்க்சிய அடிப்படையும் ஒரு காரணமாகும். மேலும் மிக முக்கியக் காரணம் தோழர் தியாகுவின் ஜனநாயக பூர்வமான அணுகுமுறையாகும். அவர் பணிகளில் சுதந்திரமான செயல்பாடுகளை அனுமதிப்பார். அதேநேரம் கருத்துக்களை அணுகுவதில் அவர் ஒரு மிகச் சிறந்த ஜனநாயகவாதியும் ஆவார்.

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தில் மாறுபாடுகள் இல்லையா என்று நீங்கள் கேட்கலாம். எனக்கு நிச்சயம் மாறுபட்ட கருத்துகள் உண்டு அவற்றை விவாதங்களின் மூலம் செயல்பாடுகள் ஊடே தீர்த்துக் கொள்ள முடியும். இன்று பார்ப்பனிய பாசிசம் மிகப் பெரும் சவாலாக உருவெடுக்கும் வேளையில் செயல்பாடே முதன்மையானது.

இங்கு பெரியாரியம்-அம்பேத்கரியம் எமக்குத் தோழமைத் தத்துவங்கள். அந்தத் தத்துவம் சார்ந்த அமைப்புகளும் தோழர்களும் எமக்கு நெருக்கமான நண்பர்கள். உறுதியான கூட்டாளிகள். பெரியாரும் அம்பேத்கரும் தமது சிந்தனை வெளிச்சத்தால், கொள்கை வெளிச்சத்தால் இந்தியத் துணைக்கண்டத்தைப் புரிந்துகொள்ளவும் மாற்றம் ஏற்படவும் காரணமாக இருந்தார்கள்.அவர்கள் விட்டுச் சென்ற பணியை நாம் தொடர வேண்டி உள்ளது.

என் பல்வேறு பணிகளிலும் உடன்பட்டு மாறுபட்டு உள்ள தோழர்கள் பலர் உண்டு. ஆனால் எல்லோருக்கும் ஒரு பொது அடிப்படை உண்டு அது சமுதாய மாற்றம். சாதி ஒழிப்பில் பார்ப்பனிய எதிர்ப்பில் முதலாளிய - ஏகாதிபத்திய எதிர்ப்பில் இன விடுதலையில் ஒன்றுபட்டு பயணம் செய்வோம் வாருங்கள்.